# உங்கள் விசுவாசத்தைப் பேசுங்கள்



எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.
*(மாற்கு 11:23)*

ஆசிஷ் ராய்ச்சூர்

**இந்தப் புத்தகம் இலவசமாக மட்டுமே விநியோகிக்கப்பட வேண்டும்**
ஆல் பீப்பிள்ஸ் சர்ச் & வேர்ல்டு அவுட்ரீச் ஊழியத்தால் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டது, இந்தியா, பெங்களூர்.
தற்போதைய பதிப்பு: 2024

**தகவல் தொடர்புக்கு**
All Peoples Church & World Outreach,
# 319, 2nd floor, 7th Main, HRBR layout,
2nd Block, Kalyan Nagar, Bangalore - 560 043,
Karnataka, INDIA.

**தொலைபேசி:** +91-80-25452617
**மின்னஞ்சல்: bookrequest@apcwo.org**
**இணையதளம்: apcwo.org**

மேற்கோள் குறிப்பிடப்படாத, அனைத்து வேதாகம மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து (BSI), தமிழ் பழைய பதிப்பு - நியூ ஆர்த்தோ) எடுக்கப்பட்டு, பைபிள் சொசைட்டி ஆப் இந்தியா மூலமாக வெளியிடப்பட்டது. அனுமதியோடு பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளது.

**நிதி பங்குதாரர்கள்**
ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சின் உறுப்பினர்கள், பங்குதாரர்கள் மற்றும் நண்பர்களின் நிதியுதவியின் மூலம் இந்த வெளியீட்டை இலவசமாக விநியோகிப்பது சாத்தியமாகிறது. இந்த இலவச வெளியீட்டின் மூலம் நீங்கள் பலனடைந்திருந்தால், ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சிலிருந்து இலவச வெளியீடுகளை அச்சடித்து விநியோகிக்க உதவும்படி நிதியுதவி அளிக்க உங்களை ஊக்குவிக்கிறோம். தயவுசெய்து **apcwo.org/give** என்ற வலைதளத்திற்குச் சென்று பார்க்கவும் அல்லது உங்கள் பங்களிப்பை எவ்வாறு வழங்குவது என்பதைப் பற்றி இந்தப் புத்தகத்தின் பின்புறத்தில் எழுதப்பட்டுள்ள “ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சில் பங்காளராய் இருத்தல்” என்ற பக்கத்தைப் பார்க்கவும். நன்றி!

**இலவச பயன்பாடுகள் மற்றும் தொடர்புடைய இணையதளங்கள்**
**பிரசங்கங்கள்:** apcwo.org/sermons | **புத்தகங்கள்:** apcwo.org/books
**திருச்சபை செயலி:** apcwo.org/app | **வேதாகமக் கல்லூரி:** apcbiblecollege.org
**மின்வழி கற்றல்:** apcbiblecollege.org/elearn | **ஆலோசனை:** chrysalislife.org
**இசை:** apcmusic.org | **ஊழியர்கள் ஐக்கியம்:** pamfi.org
**ஆல் பீப்பிள்ஸ் சர்ச் வேர்ல்டு அவுட்ரீச்:** apcworldmissions.org

(Tamil—Speak Your Faith)

# உங்கள் விசுவாசத்தைப் பேசுங்கள்

***எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.***

*(மாற்கு 11:23)*

இயேசு அவர்களை நோக்கி: தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்.
எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

***(மாற்கு 11:22,23)***

# நிசேயா விசுவாசப்பிரமாணம்

பரிசுத்த வேதாகமத்தின் அடிப்படையிலான கிறிஸ்தவ விசுவாசத்தின் மூல உபதேசங்களைக் குறித்த ஒட்டுமொத்த திருச்சபையின் நம்பிக்கையைப் பற்றிய பிரகடனமே நிசேயா விசுவாசப்பிரமாணம். இது முதன்முதலில் கி.பி 325 இல் நிசேயா பேரவையில் கூடின திருச்சபை பேராயர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பல நூற்றாண்டுகளாக தீரமிக்க விசுவாச அறிக்கையாக பயன்படுத்தப்பட்டது. "விசுவாசப்பிரமாணம்" அதாவது "கீரீட்" என்ற வார்த்தை லத்தீன் வார்த்தையான 'கிரீடோ' என்பதிலிருந்து வந்தது, அதற்கு "நான் விசுவாசிக்கிறேன் மற்றும் நம்புகிறேன்" என்று அர்த்தமாகும்.

வானத்தையும் பூமியையும்,
காணப்படுகிறதும் காணப்படாததுமான,
எல்லாவற்றையும் படைத்தவராயிருக்கிற,
சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய
ஒரே தேவனை விசுவாசிக்கிறேன்.

ஒரே கர்த்தருமாய்,
தேவனுடைய ஒரே பேறான
குமாரனுமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவையும்
விசுவாசிக்கிறேன்;
அவர் சகல உலகங்களும் உண்டாவதற்கு முன்னே
தமது பிதாவினாலே ஜெனிப்பிக்கப்பட்டவர்;
தெய்வத்தில் தெய்வமானவர்,
ஜோதியில் ஜோதியானவர்,
மெய்த்தேவனில் மெய்த்தேவனானவர்,
உண்டாக்கப்படாமல் ஜெனிப்பிக்கப்பட்டவர்,
பிதாவோடே ஒரே தன்மையுடையவர்,
சகலத்தையும் உண்டாக்கினவர்;

மனிதராகிய நமக்காகவும் நமக்கு
இரட்சிப்பு உண்டாகவும் பரமண்டலத்திலிருந்து இறங்கி,
பரிசுத்த ஆவியினாலே கன்னிமரியாளிடத்தில்
அவதரித்து மனிதனானார்;
நமக்காக பொந்தியுபிலாத்துவின் காலத்தில்
சிலுவையில் அறையுண்டு, பாடுபட்டு,
அடக்கம் பண்ணப்பட்டார்;
வேத வாக்கியங்களின்படி மூன்றாம் நாள்
உயிர்த்தெழுந்தார்;
பரமண்டலத்துக்கேறி,
பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்;
உயிருள்ளோரையும் மரித்தோரையும்
நியாயந்தீர்க்க மகிமையோடே திரும்ப வருவார்;
அவருடைய ராஜ்யத்துக்கு முடிவில்லை.

கர்த்தருமாய் ஜீவனைக் கொடுக்கிறவருமாய்,
பிதாவிலும் குமாரனிலும் நின்று புறப்படுகிறவருமாய்,
பிதாவோடும் குமாரனோடும்கூட தொழுது
ஸ்தோத்தரிக்கப்படுகிறவருமாய்,
தீர்க்கதரிசிகள் மூலமாக உரைத்தவருமாயிருக்கிற
பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறேன்.
ஒரே பரிசுத்த பொதுவான அப்போஸ்தல
திருச்சபை உண்டென்று விசுவாசிக்கிறேன்.
பாவமன்னிப்புக்கென்று நியமிக்கப்பட்ட
ஒரே ஞானஸ்நானத்தை அறிக்கையிடுகிறேன்.
மரித்தோர் உயிர்த்தெழுதலும் மறுமைக்குரிய ஜீவனும்
உண்டாகும் என்று காத்திருக்கிறேன்.

ஆமென்.

# எங்கள் பிரகடனம்

ஞாயிறு ஆராதனைகளின்போது, தேவனுடைய வார்த்தையைக் கேட்பதற்கு முன், சபையாக நாங்கள் செய்யும் பொதுவான பிரகடனம்.

இது தேவனுடைய வார்த்தை.
இது தேவன் என்னிடம் பேசுவதே.
தேவன் சொல்கிறபடியே நான் இருக்கிறேன்.
என்னால் முடியும் என்று தேவன் சொல்வதை என்னால் செய்ய முடியும்.
தேவன் வாக்களித்த எல்லாமாக நான் மாறுவேன்.
நான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன்,
குணமடைந்திருக்கிறேன்,
விடுவிக்கப்பட்டிருக்கிறேன், மீட்கப்பட்டிருக்கிறேன்.
நான் ஆசீர்வதிக்கப்பட்டவன்,
ஜெயங்கொண்டவன், செழிப்பானவன்,
வெற்றி சிறந்தவன்.
நான் தேவனுடைய ஊழியக்காரன்,
கிறிஸ்துவின் சேவகன் மற்றும்
பல மக்களுக்கு அவருடைய
ஆசீர்வாதத்தின் வாய்க்காலாய் இருக்கிறேன்.
நான் அவருடைய வார்த்தையைப் பெறுகிறேன்,
அவருடைய வார்த்தையை விசுவாசிக்கிறேன்,
அவருடைய வார்த்தையின்படி வாழ்கிறேன்.
கிறிஸ்து என் எஜமானர்,
அவருக்கே எனனை முழுமையாக
அர்ப்பணித்திருக்கிறேன்.
இயேசுவின் நாமத்தில். ஆமென்.

# என் வாழ்க்கையின் மீது தேவனுடைய வார்த்தைக்கான எனது அறிவிப்பு

உங்கள் வாழ்க்கையின் வெவ்வேறு சூழ்நிலைகளில், தேவனுடைய வார்த்தையில் உங்கள் விசுவாசத்தை நீங்கள் எவ்வாறு பேசலாம் என்பதற்கான எடுத்துக்காட்டுகளாக இவை கொடுக்கப்பட்டுள்ளது. தேவனின் வார்த்தையை தியானியுங்கள். தேவனுடைய வார்த்தை உங்கள் இருதயத்தில் விசுவாசத்தை உண்டாக்கட்டும். அதன்பின், உங்கள் விசுவாசத்தை பேசுங்கள்.

## அதிகாரம் மற்றும் ஆளுகை

அவருடைய நாமத்தைப் பயன்படுத்தவும், அவர் சார்பாக செயல்படவும், அவர் விரும்பியதைச் செய்யவும் இயேசு எனக்கு உரிமை அளித்திருக்கிறார். அவருடைய நாமத்தினாலே நான் பிசாசுகளைத் துரத்துகிறேன், வியாதியஸ்தர்களை சொஸ்தமாக்குகிறேன். சத்துருவின் சகல வல்லமை மீதும் இயேசு எனக்கு அதிகாரம் அளித்திருக்கிறார், எதுவும் என்னை எந்த வகையிலும் சேதப்படுத்துவதில்லை. நான் இயேசு கிறிஸ்துவில் பிதாவின் வலது பாரிசத்தில், ஆளுகை மற்றும் அதிகாரம் உள்ள இடத்தில் அமர்ந்திருக்கிறேன். (மாற்கு 16:17,18; லூக்கா 10:19; எபேசியர் 2:6)

## ஜெபத்திற்கு பதில்

கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே, நான் பிதாவினிடத்தில் விசுவாசித்துடன் எதைக் கேட்டாலும், அதை நான் பெற்றுக்கொள்வேன் என்று எனக்கு அவர் வாக்குப்பண்ணியிருக்கிறார். நான் ஜெபிக்கும்போது நான்

எதைக் கேட்டாலும், நான் அவற்றைப் பெற்றுக்கொண்டேன் என்று நம்புகிறேன், எனக்கு அவை கிடைக்கும். நான் அவரில் நிலைத்திருக்கிறேன், அவருடைய வார்த்தை என்னில் நிலைத்திருக்கிறது, ஜெபத்தில் நான் எதைக் கேட்டாலும் அது எனக்கு செய்யப்படுகிறது. (யோவான் 16:23,24; மத்தேயு 21:22; மாற்கு 11:24; யோவான் 15:7)

## அபிஷேகம் மற்றும் வல்லமை

பரிசுத்த ஆவியானவர் என்மீது வந்ததினாலும், இயேசு கிறிஸ்துவுக்கு நான் சாட்சியாக இருக்கிறதினாலும் நான் வல்லமை பெற்றேன். கர்த்தருடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார், சிறைப்பட்டவர்களை விடுவிக்கவும், குணமாக்கவும், கட்டவிழ்க்கவும் அவர் எனக்கு அதிகாரம் அளிக்கிறார். என்னை அழைத்து அபிஷேகம் செய்தவர் தேவனே. என் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் பிசாசின் நுகங்களை அழித்து, பிசாசின் சுமைகளை மக்களிடமிருந்து நீக்குகிறது. (அப்போஸ்தலர் 1:8; லூக்கா 4:18,19; 2 கொரிந்தியர் 1:21; ஏசாயா 10:27)

## ஆசீர்வாதங்கள்

தேவனிடத்திலிருந்து வரும் ஒவ்வொரு ஆசீர்வாதத்தாலும் நான் ஆசீர்வதிக்கப்பட்டவன். தேவன் தமது மக்களுக்காக கொண்டிருக்கும் அனைத்து ஆசீர்வாதங்களையும் நான் அனுபவிப்பதுடன் பகிர்ந்தளிக்கவும் செய்கிறேன். நான் கையிட்டு செய்கிற எல்லாவற்றிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறேன். கர்த்தர் எனக்கு செழிப்பை போதிக்கிறார், என் பாதைகளை செவ்வைப்படுத்துகிறார். நான் தேவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறேன், ஒருபோதும் வறண்டு போகாத நீரோடை போல அவருடைய ஆசீர்வாதங்கள் பெருக்கெடுத்து ஓடுகின்றன. கடலோரத்தில் எழும் அலைகளைப் போல வெற்றி எனக்கு வருகிறது (எபேசியர் 1:3; கொலோசெயர் 1:12; உபாகமம் 28:6;

ஏசாயா 48:17,18)

## தைரியம் மற்றும் நம்பிக்கை

நான் வலிமையும், மிகுந்த தைரியமும் நிறைந்தவன். நான் சிங்கம் போல் தைரியமானவன். தேவன் எனக்கு பயத்தின் ஆவியைக் கொடுக்கவில்லை, மாறாக பலமும், அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியைக் கொடுத்திருக்கிறார். கர்த்தரே என் நம்பிக்கையும் என் பாதுகாவலாகவும் இருக்கிறார். (யோசுவா 1:9; நீதிமொழிகள் 28:1; 2 தீமோத்தேயு 1:7; நீதிமொழிகள் 14:26)

## சாதனைகள்

என் தேவனை நான் அறிவேன். நான் வலிமை வாய்ந்தவன், தேவனுடைய ராஜ்யத்திற்காக நான் சாதனைகளை செய்கிறேன். எனக்குள் செயல்படும் அவரது வல்லமையால் நான் கேட்டுக்கொள்வதற்கும் அல்லது சிந்திப்பதற்கும் மேலான காரியங்களைச் செய்ய தேவன் என்னிலும் என் மூலமாகவும் கிரியை செய்கிறார். (தானியல் 11:32; எபேசியர் 3:20)

## எதிர்காலம்

தேவன் எனக்காக வைத்திருக்கும் திட்டங்களை அறிந்திருக்கிறார், அது என்னை செழிக்க வைக்கும் திட்டங்களும், நம்பிக்கை நிறைந்த எதிர்காலத்தை எனக்கு வழங்கும் திட்டங்களுமாமே. நான் செய்ய வேண்டும் என்று அவர் விரும்புகிற காரியங்களைத் தேவன் திட்டமிட்டுள்ளார், நான் அவற்றில் நடக்கிறேன். அவருடைய நோக்கங்களுக்காக நான் அழைக்கப்பட்டதால், அனைத்தும் என் நன்மைக்காக செயல்படுகிறது. நான் அவரை நேசிப்பதால் தேவன் எனக்காக ஆயத்தம் செய்த விஷயங்களை எந்தக் கண்ணும் பார்த்ததில்லை, எந்தக் காதும் கேட்கவில்லை, இன்னும் யாரும் கற்பனை செய்து

பார்க்கவில்லை. (எரேமியா 29:11; எபேசியர் 2:10; ரோமர் 8:28; 1 கொரிந்தியர் 2:9)

## குடும்பம், வீடு மற்றும் குழந்தைகள்

தேவன் என் வீட்டை ஆசீர்வதித்திருக்கிறார். மகிழ்ச்சி மற்றும் இரட்சிப்பின் குரல் என் வீட்டை நிரப்புகிறது. எனது வீடு சமாதானம் மற்றும் அமைதி நிறைந்த இடமாகவும் பாதுகாப்பான இடமாகவும், கவலைகள் இல்லாத இடமாகவும் இருக்கிறது. தேவன் தம்முடைய ஆவியையும் தமது ஆசீர்வாதத்தையும் என் பிள்ளைகள் மீது ஊற்றுகிறார். என் பிள்ளைகள் எல்லாரும் கர்த்தரால் போதிக்கப்படுகிறார்கள், அவர்களுக்கு மிகுந்த சமாதானம் இருக்கிறது. (நீதிமொழிகள் 3:33; சங்கீதம் 118:15; ஏசாயா 32:18; ஏசாயா 44:3; ஏசாயா 54:13)

## விசுவாசம்

தேவன் எனக்கு விசுவாசத்தின் அளவைக் கொடுத்திருக்கிறார். நான் தரிசித்து அல்ல, விசுவாசத்தால் வாழ்கிறேன். நான் விசுவாசிக்கிறேன், மேலும் நான் தேவனுடைய மகிமையைக் காண்பேன். என் இருதயத்தில் விசுவாசத்துடன், நான் மலைகளைப் பார்த்துப் பேசுகிறேன், அவை நகரும், என்னால் முடியாதது எதுவுமில்லை. (ரோமர் 12:3; 2 கொரிந்தியர் 5:7; யோவான் 11:40; மத்தேயு 17:20)

## தயவு மற்றும் உறவுகள்

ஒரு கேடயத்தைப்போல தேவன் தம்முடைய தயவினால் என்னை சூழ்ந்திருக்கிறார். தேவன் என்னை கௌரவமாகவும் உயர்வாகவும் மதிக்கிறார். நான் இரக்கத்துடனும் நேர்மையுடனும் நடக்கிறேன், என்னைச் சுற்றி இருப்பவர்களிடம் எனக்கு நல்ல புரிதலும், அனுகூலமும் உண்டு. தேவன் என் எதிரிகளைக் கூட என்னுடன் சமாதானமாக இருக்கச் செய்கிறார். கர்த்தரை நேசிப்பவர்கள்

என்னைக் கண்டு சந்தோஷப்படுகிறார்கள், ஏனென்றால் நான் கர்த்தரைக் கனம்பண்ணுகிறேன். (சங்கீதம் 5:12; நீதிமொழிகள் 22:4; நீதிமொழிகள் 3:3,4; நீதிமொழிகள் 16:7; சங்கீதம் 119:74)

## வழிநடத்துதல்

பரிசுத்த ஆவியானவர் சகல சத்தியத்திலும் என்னை நடத்தி, எனக்கு வழிகாட்டுகிறார். கர்த்தர் என்னை வழிநடத்துகிறார், நான் செல்ல வேண்டிய வழியை எனக்குப் போதிக்கிறார். அவர் தம் விழிப்புள்ள கண்களால் என்னை வழிநடத்துகிறார். என் வழிகளில் அவர் மகிழ்ச்சியடைவதால், என் நடைகள் தேவனால் உறுதிப்பட்டிருக்கிறது. நான் விழுந்தாலும், அவர் என்னைத் தாங்கி மீண்டும் எழும்பச் செய்கிறார். தேவனுடைய வார்த்தை என்னை வழிநடத்தும் தீபமாகவும் என் பாதைக்கு வெளிச்சமாகவும் இருக்கிறது. நான் அவருடைய வார்த்தையைப் பின்பற்றுகிறேன். (யோவான் 16:13; சங்கீதம் 32:8; சங்கீதம் 37:23,24; சங்கீதம் 119:105)

## ஆரோக்கியம் மற்றும் குணமாகுதல்

கர்த்தராகிய இயேசு தாமே என்னுடைய எல்லா பிணிகளையும், வியாதிகளையும் சிலுவையில் சுமந்தார். சிலுவையில் இயேசு எனக்காக ஏற்றுக்கொண்ட காயங்களால் நான் குணமடைந்திருக்கிறேன். என் தேவன் என் பரிகாரியாகிய கர்த்தராய் இருக்கிறார். கர்த்தர் என் அப்பத்தையும் தண்ணீரையும் ஆசீர்வதித்து என்னிடமிருந்து எல்லா நோய்களையும் நீக்குகிறார். அவர் என் பாவங்களையெல்லாம் மன்னித்து, என் நோய்களையெல்லாம் குணமாக்குகிறார். (மத்தேயு 8:17; 1 பேதுரு 2:24; யாத்திராகமம் 15:26; யாத்திராகமம் 23:25; சங்கீதம் 103:3)

### மகிழ்ச்சி

கர்த்தருடைய ஆவியானவர் என்னை மகிழ்ச்சியால் நிரப்புகிறார். நான் நீதியை விரும்பி, துன்மார்க்கத்தை வெறுக்கிறேன், ஆதலால் தேவன் என்னை மகிழ்ச்சியினாலும் ஆனந்தத்தினாலும் அபிஷேகம் செய்தார். கர்த்தருடைய மகிழ்ச்சி எனக்கு சத்துவமளித்து என்னை பெலத்தால் நிரப்புகிறது. நம்பிக்கையின் தேவன் என்னை மகிழ்ச்சியினாலும் சமாதானத்தினாலும் நிரப்புகிறார். நான் நீதியிலும், சமாதானத்திலும், பரிசுத்த ஆவியின் சந்தோஷத்திலும் வாழ்கிறேன். (கலாத்தியர் 5:22; சங்கீதம் 45:7; நெகேமியா 8:10; ரோமர் 15:13; ரோமர் 14:17)

### நீதிமானாக்கப்பட்டேன் மற்றும் நீதிமான்

கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தின் மூலம் நான் தேவனுடைய பார்வையில் நீதிமானாக்கப்பட்டேன். இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களிலிருந்தும் என்னைக் கழுவியதால், அவருடைய பார்வையில் நான் ஒருபோதும் “பாவம்-செய்யாதவனைப் போல்” இருக்கிறேன். நான் அவருடைய நீதியை அணிந்துகொண்டு, எவ்வித குற்றத்தீர்ப்பில்லாமல், நம்பிக்கையுடனும் உறுதியுடனும் தேவனுக்கு முன்பாக நிற்கிறேன். நான் அவருடைய பிள்ளை என்ற உறுதியால் பரிசுத்த ஆவியானவர் என்னை நிரப்புகிறார், மேலும் நான் அவரை “அப்பா, பிதாவே” என்று அழைக்கிறேன். (ரோமர் 3:22; 1 யோவான் 1:7; 2 கொரிந்தியர் 5:21; ரோமர் 8:1,15)

### அன்பு

தேவனுடைய ஆவியானவர் தேவனுடைய அன்பை என் இருதயத்தில் ஊற்றியிருக்கிறார். தேவனுடைய அன்பினால் ஜனங்களை நேசிக்க நான் உந்தப்படுகிறேன். என்னில் உள்ள தேவனுடைய அன்பு என்னை பொறுமையானவனாகவும், கனிவானவனாகவும்

மாற்றுகிறது, மேலும் பொறாமை, பெருமை, தவறான நடத்தை, சுயநலம் மற்றும் எரிச்சல் ஆகியவற்றிற்கு என்னை விலக்கிக் காத்துக்கொள்ளுகிறது. எனக்கு இழைக்கப்பட்ட தீமைகளை நான் மனதில் வைத்துக்கொள்வதில்லை. (ரோமர் 5:5; 1 கொரிந்தியர் 13:4,5)

## நீடிய ஆயுள்

தேவன் என்னை நீடித்த நாட்களால் திருப்திப்படுத்துகிறார். கர்த்தர் என் வாழ்க்கையை நன்மைகளால் நிரப்புகிறார், அதனால் நான் கழுகைப் போல இளமையாகவும் வலிமையாகவும் இருப்பேன். (சங்கீதம் 91:16; யாத்திராகமம் 23:26; சங்கீதம் 103:5)

## மனம் மற்றும் எண்ணங்கள்

என் மனம் பரிசுத்த பூமியாக இருக்கிறது. என் மனதில் தூய்மையான, உன்னதமான, நல்லொழுக்கமுள்ள, சரியான மற்றும் மரியாதைக்குரிய எண்ணங்களை மட்டுமே நான் அனுமதிக்கிறேன். எனக்குத் தெளிந்த புத்தியும், ஆரோக்கியமான நினைவாற்றலும், தெளிந்த கவனமும் மற்றும் நல்ல புரிதலும் உண்டு. நான் என் எண்ணங்கள், உணர்ச்சிகள் மற்றும் ஆசைகளை தேவனுக்கு அர்ப்பணிக்கிறேன், மேலும் ஒவ்வொரு எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் செய்கிறேன். (பிலிப்பியர் 4:8; 2 தீமோத்தேயு 1:7; 2 கொரிந்தியர் 10:4,5)

## உலகத்தையும் மாம்சத்தையும் ஜெயித்தல்

நான் தேவனால் பிறந்தேன், நான் உலகத்தையும் அதிலுள்ள அனைத்தையும் ஜெயிக்கிறேன். நான் மாம்சத்தின் பாவ இச்சைகளையும், கண்களின் இச்சைகளையும், ஜீவனத்தின் பெருமையையும் மேற்கொள்கிறேன். நான் தேவனின் தெய்வீக தன்மையில் பங்குகொள்கிறேன், உலகில் இருக்கும் ஒழுக்கக்கேட்டிலிருந்து விலகி இருக்கிறேன்.

பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால், என் சரீரத்தின் சகல பாவக் கிரியைகளுக்கும் முடிவு கட்டினேன். நான் ஆவியில் நடக்கிறேன், என் சரீரத்தின் பாவ இச்சைகளுக்கு நான் அடிபணிவதில்லை. (1 யோவான் 5:4; 2 பேதுரு 1:3,4; ரோமர் 8:13; கலாத்தியர் 5:16)

## சமாதானம், அமைதி, இளைப்பாறுதல்

நான் எனது எல்லா கவலைகளையும் கர்த்தருக்கு முன்பாக வைக்கிறேன், மனித புத்திக்கு அப்பாற்பட்ட தேவ சமாதானம், என் இருதயத்தையும் மனதையும் நிரப்புகிறது. நான் அமைதியாகவும் நம்பிக்கையுடனும் நடக்கத் தேர்வு செய்கிறேன், இது என்னை பெலத்தால் நிரப்புகிறது. கர்த்தர் எனக்குக் கொடுக்கும் இளைப்பாறுதலில் நான் நடக்கிறேன். (1 பேதுரு 5:7; பிலிப்பியர் 4:7; ஏசாயா 30:15; மத்தேயு 11:28,29)

## இரத்தத்தின் வல்லமை

இயேசுவின் இரத்தம் என்னை விலைக்கு வாங்கி என்னை மீட்டுக்கொண்டது, சகல பாவங்களிலிருந்தும் என்னைச் சுத்திகரித்தது, என்னைப் பரிசுத்தப்படுத்தியது, என்னை நீதிமானாக்கியது, தேவனுக்கு அருகில் என்னைக் கொண்டு வந்தது, தேவனுடைய பரிசுத்த பிரசன்னத்தில் பிரவேசிப்பதற்கு எனக்கு தைரியத்தைக் கொடுத்தது. இயேசுவின் இரத்தத்தால் நான் மூடப்பட்டு பாதுகாக்கப்பட்டேன். நான் இயேசுவின் இரத்தத்தின் மூலம் தேவனுடன் உடன்படிக்கை செய்திருக்கிறேன். என் முன்னோர்களின் தவறான வழிகளிலிருந்து அந்த இரத்தம் என்னை விடுவித்தது. நான் இயேசுவின் இரத்தத்தால் சத்துருவை ஜெயிப்பேன். (அப்போஸ்தலர் 20:28; எபேசியர் 1:7; 1 யோவான் 1:7; எபிரெயர் 13:12; யாத்திராகமம் 12:13; 1 பேதுரு 1:18-20; வெளிப்படுத்துதல் 12:11)

## செழிப்பு மற்றும் வெற்றி

நான் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்ட மரம் போன்றவன். நான் அதனதன் பருவத்திற்கேற்ற கனிகளை கொடுக்கிறேன். என் இலை உதிருவதில்லை, நான் செய்வதெல்லாம் செழிக்கும். என் கைகளின் பிரயாசங்கள் எல்லாவற்றிலும் நான் ஆசீர்வதிக்கப்பட்டவன். நான் கர்த்தரையும், அவருடைய வார்த்தை மற்றும் அவருடைய வழிகளை பின்பற்றுகிறேன், அவர் என்னை செழிக்கச் செய்து எனக்கு சிறந்த வெற்றியைத் தருகிறார். நான் தாழ்மையாக, தெய்வப் பயத்துடன் நடக்கும்போது, அவர் எனக்கு செழிப்பையும், கனத்தையும், நீடித்த ஆயுளையும் அளித்து ஆசீர்வதிக்கிறார். (சங்கீதம் 1:1-3; உபாகமம் 28:8; யோசுவா 1:8; நீதிமொழிகள் 22:4)

## பாதுகாப்பு மற்றும் விடுதலை

நான் கர்த்தரை என் பாதுகாவலராகவும் உன்னதமானவரை எனக்கு காப்பவராகவும் கொண்டிருக்கிறேன். எந்தப் பேரழிவும் என்னைத் தாக்குவதில்லை, எந்த வன்முறையும் என் வீட்டிற்கு அருகில் வருவதில்லை. ஆபத்தில் தேவன் என்னோடு கூட இருக்கிறார். அவர் எனக்குப் பதிலளித்து என்னைக் காப்பாற்றுகிறார். தேவ தூதன் என்னைச் சூழ்ந்து என்னை விடுவிக்கிறான். எனக்கு விரோதமாக உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் என்னைக் காயப்படுத்த முடியாது. தேவன் என்னைப் பாதுகாத்து எனக்கு வெற்றியைத் தருகிறார். எனக்கு எதிராக எழும் ஒவ்வொரு நாவையும் கர்த்தர் எனக்கு முன்பாக அவமாக்குகிறார். (சங்கீதம் 91:10,11,15; சங்கீதம் 34:7; ஏசாயா 54:17)

## உயர்வு

எனது விருத்தி, வளர்ச்சி மற்றும் பெருக்கம் தேவனிடத்திலிருந்து வருகிறது. எனது உயர்வுக்கு வழிவகுப்பவர் தேவனே. நான் கர்த்தருக்கு சமர்ப்பிக்கையில்,

அவர் தம் காலத்தில் என்னை உயர்த்துகிறார். என்னை தலைமைத்துவம், அதிகாரம் மற்றும் செல்வாக்கு நிறைந்த இடங்களில் வைப்பவர் தேவனே. (சங்கீதம் 7:6,7; யாக்கோபு 4:10; உபாகமம் 28:13)

## நன்மை மற்றும் வழங்கல்

என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி என்னுடைய சகல தேவைகளையும் இயேசு கிறிஸ்துவின் மூலமாக வழங்குகிறார். கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறார், நான் தாழ்ச்சியடைவதில்லை. கர்த்தர் எனக்கு சூரியனும் கேடகமுமாய் இருக்கிறார். அவர் எனக்கான நன்மையில் யாதொன்றையும் தடுப்பதில்லை. என் தேவையைக் காட்டிலும் தேவன் எனக்கு அதிகமாகவே கொடுக்கிறார், அதனால் எனக்குத் தேவையான அனைத்தையும் நான் எப்போதும் வைத்திருக்கிறேன், மற்றும் அவற்றைக்கொண்டு மற்றவர்களை ஆசீர்வதிக்க நிறைய பெற்றிருக்கிறேன். எனக்கு செல்வத்தை உண்டாக்கும் ஆற்றலைத் தந்தவர் தேவனே (பிலிப்பியர் 4:19; சங்கீதம் 23:1; சங்கீதம் 84:11; 2 கொரிந்தியர் 9:8; உபாகமம் 8:18)

## அடையாளங்கள், அதிசயங்கள் மற்றும் அற்புதங்கள்

அவருடைய நாமத்தில் விசுவாசிக்கிற—என்னை இந்த அடையாளங்கள் பின்தொடர்கின்றன, நான் புதிய பாஷைகளில் பேசுகிறேன், நான் பிசாசுகளைத் துரத்துகிறேன், வியாதியஸ்தர்கள் மீது நான் கைகளை வைக்கிறேன், அவர்கள் குணமடைகிறார்கள். தேவன் என்னுடன் இருக்கிறார், அடையாளங்கள், அதிசயங்கள் மற்றும் அற்புதங்களோடு நான் பேசும் அவருடைய வார்த்தையை அவர் உறுதிப்படுத்துகிறார். இயேசு பிதாவினிடத்தில் சென்றிருப்பதால், இயேசு செய்த கிரியைகளை நானும் செய்வேன், அவைகளைக் காட்டிலும் இன்னும் பெரிய கிரியைகளையும் செய்வேன். நான்

இயேசுவின் நற்செய்தியைப் பகிர்ந்து கொள்ளும்போது, தேவன்தாமே அடையாளங்கள், அதிசயங்கள், அற்புதங்கள் மற்றும் பரிசுத்த ஆவியானவரின் வரங்களால் சாட்சி கொடுக்கிறார். (மாற்கு 16:17,18; மாற்கு 16:20; யோவான் 14:12; எபிரேயர் 2:3,4)

### நித்திரை

கர்த்தர் எனக்கு நல்ல நித்திரையைத் தருகிறார். நான் படுத்துக்கொள்கிறேன், நான் பயப்படுவதில்லை. நான் படுத்துக்கொள்கிறேன், என் தூக்கம் இனிமையாக இருக்கிறது. நான் புத்துணர்ச்சியுடனும் புதுப்பொலிவுடனும் எழுந்திருக்கிறேன். (சங்கீதம் 127:2; சங்கீதம் 4:8; நீதிமொழிகள் 3:24; சங்கீதம் 3:5)

### என் வாழ்வில் தேவ ஆவியானவர்

நான் பரிசுத்த ஆவியானவரின் ஆலயமாக இருக்கிறேன். தேவனுடைய ஆவியானவர் என்னில் வாசமாயிருக்கிறார். அவர் என்னை வழிநடத்தி, எனக்கு வழிகாட்டுகிறார். அவர் எனக்கு சகலத்தையும் போதிக்கிறார். நான் ஆவியில் நடத்தப்படுகிறபடியால், மாம்சீக இச்சைகளுக்கு நான் அடிபணிவதில்லை. அவர் என்னோடு இருந்து என்னை பெலப்படுத்துகிறார். அவருடைய பிரசன்னமும் வல்லமையும் என்னிடமிருந்து ஆறுகள்போல பாய்ந்துசென்று என்னைச் சுற்றியுள்ள ஜனங்களை ஆசீர்வதித்து, குணப்படுத்தி, விடுவிக்கிறது. (1 கொரிந்தியர் 3:16; ரோமர் 8:14; 1 யோவான் 2:27; கலாத்தியர் 5:16; யோவான் 7:38,39)

### ஜெயம் மற்றும் வெற்றி

தேவன் எப்போதும் என்னை எல்லாவற்றிலும் வெற்றிசிறக்கச் செய்கிறார். என் கர்த்தராகிய இயேசு சிலுவையில் எனக்காக சம்பாதித்த வெற்றியில் நான் நடக்கிறேன். என் தேவனால், நான் வீரதீரத்துடன் செயல்படுகிறேன். (2 கொரிந்தியர்

2:14; கொலோசெயர் 2:14; ஏசாயா 53:12; சங்கீதம் 60:12)

### ஞானம், புரிதல் மற்றும் உத்வேகம்

கிறிஸ்து என் ஞானமாய் இருக்கிறார். ஞானம், புத்தி, ஆலோசனை மற்றும் பெலன் ஆகியவற்றை அருளும் ஆவி என் மீது தங்கியிருக்கிறது. கர்த்தர் எல்லாவற்றிலும் எனக்கு புரிதலைத் தருகிறார். அவருடைய வார்த்தை என்னை வெளிச்சத்தாலும், புரிதலினாலும் நிரப்புகிறது. எனது உள்ளான மனுஷனில் உள்ள தேவனுடைய ஏவுதலானது எனக்கு புரிதலைத் தருகிறது. (1 கொரிந்தியர் 1:30; ஏசாயா 11:1,2; 2 தீமோத்தேயு 2:7; சங்கீதம் 119:130; யோபு 32:8)

### சாட்சி

நான் இயேசு கிறிஸ்துவுக்கு ஒரு தைரியமான சாட்சியாக இருக்கிறேன். இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியைப் பற்றி நான் வெட்கப்படவில்லை. மனிதர்களுக்கு முன்பாக நான் அவரை ஒப்புக்கொள்வது போல, பரலோகத்திலுள்ள பிதாவுக்கு முன்பாக அவர் என்னை ஒப்புக்கொள்கிறார். (அப்போஸ்தலர் 1:8; ரோமர் 1:16; மத்தேயு 10:32)

### என் வாழ்வில் தேவனுடைய வார்த்தை

தேவனுடைய வார்த்தை சத்தியம் என்று நான் அறிவிக்கிறேன். அவருடைய வார்த்தை என் வாழ்வில் மேலோங்கி நிற்கிறது. அவருடைய வார்த்தையின் வல்லமையால் என் வாழ்க்கை ஸ்திரப்படுத்தப்பட்டு, நிலைநிறுத்தப்பட்டு, ஒழுங்குபடுத்தப்படுகிறது. என் உலகத்தில் உள்ள அனைத்தும் தேவனுடைய வார்த்தைக்குக் உட்பட்டதும், தேவனுடைய வார்த்தைக்கு ஏற்ப இசைவடையச் செய்கிறதுமாய் இருக்கிறது. (யோவான் 17:17; சங்கீதம் 119:128; எபிரெயர் 1:3; எபிரெயர் 11:3)

# எனது "கிறிஸ்துவில்" பிரகடனங்கள்

கிறிஸ்துவில் நான் யாராக இருக்கிறேனோ, உண்மையில் நான் அவ்வாறே இருக்கிறேன்! எனது அடையாளம், பாதுகாப்பு, முக்கியத்துவம் மற்றும் சுய மதிப்பு ஆகியவை அவரிடமும், அவரிடமிருந்தும், அவருக்காகவும் இருக்கின்றன. என் சுயரூபம், சுயமரியாதை மற்றும் நம்பிக்கை ஆகியவை தேவன் என்னை கிறிஸ்துவில் யாராக ஆக்கினார் என்பதன் அடிப்படையில் அமைந்துள்ளது. கிறிஸ்துவில் நான் யார் என்பது தேவன் என்மீது கொண்டிருந்த மகத்தான மற்றும் நிபந்தனையற்ற அன்பின் நிமித்தமாக எனக்கு என்ன செய்திருக்கிறார் என்பதை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது.

கிறிஸ்துவில் நான் யாராக இருக்கிறேனோ, உண்மையில் நான் அவ்வாறே இருக்கிறேன் என்பதை நான் அறிவிக்கிறேன்.

கிறிஸ்துவில், நான் புது சிருஷ்டியாக இருக்கிறேன். பழையவைகள் எல்லாம் ஒழிந்துபோயின. நான் உள்ளே புதிதாய் இருக்கிறேன் (2 கொரிந்தியர் 5:17). என் பழைய வாழ்க்கை முடிந்துவிட்டது, என் புதிய வாழ்க்கை கிறிஸ்துவில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. நான் வாழும் இந்த புதிய வாழ்க்கை கிறிஸ்துவிடமிருந்து வருகிறது (கொலோசெயர் 3:3). நான் என்ற புதிய சிருஷ்டியானது தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனின் குணாதிசயங்கள், நீதி மற்றும் பரிசுத்தம் ஆகியவற்றால் நிறைந்துள்ளது. நான் கிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டியாக வாழ்கிறேன் (எபேசியர் 4:24).

கிறிஸ்துவில், நான் தெய்வனுடைய பிள்ளையும்,

தெய்வனுடைய சுதந்தரனும், இயேசு கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரனாகவும் இருக்கிறேன். நான் தேவனின் குடும்பத்திலும், தேவனின் ராஜ்யத்திலும் ஓர் அங்கமாக இருக்கிறேன் (ரோமர் 8:17). கிறிஸ்துவில், பிதா தம்முடைய குமாரனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நேசிப்பதைப் போலவே என்னையும் நேசிக்கிறார். இந்த அன்பில் நான் நிச்சயத்துடன் அசைக்கப்படாதிருக்கிறேன் (யோவான் 16:27; யோவான் 17:23). கிறிஸ்துவிலுள்ள தேவனின் அன்பிலிருந்து எதுவும் என்னைப் பிரிக்க முடியாது. அவர் என்மீது கொண்ட அன்பினால் நான் எல்லா சூழ்நிலையிலும் வெற்றிசிறந்தவனாக இருக்கிறேன் (ரோமர் 8:37,39). கிறிஸ்துவுக்குள், நான் பரிசுத்த ஆவியால் முத்திரையிடப்பட்டிருக்கிறேன். தேவன் என் மீது உரிமையின் அடையாளத்தை வைத்திருக்கிறார் (எபேசியர் 1:13,14). கிறிஸ்துவில், நான் தேவனுடைய பரிசுத்த ஆலயத்தின் ஓர் அங்கமாக இருக்கிறேன், அவருடைய ஆவியால் தேவனுடைய வாசஸ்தலமாக இருக்கிறேன். தேவன் என்னில் வாசமாயிருக்கிறார், என் மூலமாக தம்மை வெளிப்படுத்துகிறார் (எபேசியர் 2:21,22).

நான் நீதிமானாக்கப்பட்டிருக்கிறேன், விடுவிக்கப்பட்டிருக்கிறேன், தேவனுடைய பார்வையில் செம்மையானவனாக மாற்றப்பட்டிருக்கிறேன், இயேசு கிறிஸ்துவின் மூலம் நான் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறேன். நான் கிறிஸ்துவுக்குள் தேவனோடு சரியான நிலையில் இருக்கிறேன் (ரோமர் 5:1,2). கிறிஸ்துவில் எனக்கு எதிராக எந்த ஆக்கினைத்தீர்ப்பும் இல்லை. வெட்கம், குற்ற உணர்வு அல்லது ஆக்கினைத்தீர்ப்பு போன்ற உணர்வுகள் இல்லாமல், நம்பிக்கையுடன் சுதந்திரமாக தேவனுடன் தொடர்புகொள்கிறன் (ரோமர் 8:1). கிறிஸ்துவில், நான் தேவனுடைய நீதியாக்கப்பட்டேன். இது எனக்கு தைரியம் தந்து, நம்பிக்கையுடன் அவருடைய பிரசன்னத்தில் பிரவேசிக்க செய்கிறது (2 கொரிந்தியர் 5:21).

தேவன் கிறிஸ்துவுக்குள் என்னைத் தெரிந்துகொண்டார், நான் பரிசுத்தமாகவும், அவருடைய கண்களுக்கு முன்பாக குற்றமில்லாமலும் அவருடைய அன்பினால் மூடப்பட்டிருக்கிறேன் (எபேசியர் 1:4). கிறிஸ்துவில், நான் தேவனுக்கு அருகில் கொண்டு வரப்பட்டேன், மேலும் நான் பிதாவையே ஆவியானவர் மூலமாக நேரடியாக அணுகுகிறேன் (எபேசியர் 2:13,18).

பழைய பாவ சுபாவமானது கிறிஸ்துவுடன் சிலுவையில் அறையப்பட்டுவிட்டது, என் வாழ்க்கையில் பாவத்தின் வல்லமை உடைக்கப்பட்டுவிட்டது, நான் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறேன். பாவம் இனி என்னை ஆண்டுகொள்வதில்லை (ரோமர் 6:6,14). கிறிஸ்துவில், நான் அந்தகார வல்லமைகளிலிருந்து விடுவிக்கப்பட்டு, இயேசு கிறிஸ்துவின் ராஜ்யத்திற்குள் வரவழைக்கப்பட்டேன். சாத்தானுக்கு என்னில் இடமில்லை, என் மீது உரிமை இல்லை, என் மீது அதிகாரம் இல்லை. நான் தேவனுடைய உரிமைச்சொத்தாக இருக்கிறேன், அதாவது என் ஆவி, ஆத்துமா மற்றும் சரீரம் தேவனுடைய உரிமைச்சொத்தாக இருக்கிறது (கொலோசெயர் 1:13,14; 1 கொரிந்தியர் 6:20). இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் நான் மீட்கப்பட்டிருக்கிறேன். தேவன் விலைக்கிரயம் செலுத்தி வாங்கிய உரிமைச்சொத்தாக நான் இருக்கிறேன். என்னுடைய முழுமையும் தேவனுடையது (எபேசியர் 1:7). கிறிஸ்துவில், நான் பாவத்தின் வல்லமையிலிருந்து விடுவிக்கப்பட்டேன். நான் கிறிஸ்துவோடு மரித்து, கிறிஸ்துவோடு உயிர்த்தெழுந்தேன். பழைய வாழ்க்கையின் வல்லமை உடைக்கப்பட்டுவிட்டது (கொலோசெயர் 2:11,12).

நான் இயேசுவோடு ஆவிக்குரிய நிலையில் இணைந்துள்ளேன். திராட்சை செடியாகிய அவரில், அவருடன் இணைந்திருக்கும் ஒரு கொடியாக நான்

இருக்கிறேன். அவர் என்னுள் இருக்கிறார் நான் அவருக்குள் இருக்கிறேன். அவருடைய ஜீவன் என் மூலமாய் பாய்கிறது மற்றும் என் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது.. என்னுள் பாய்கிற அவருடைய ஜீவனின் குணாதிசயத்தையும், வல்லமையையும் நான் வெளிப்படுத்துகிறேன். அவருடைய மகிமைக்காக நான் மிகுந்த கனிகளைக் கொடுக்கிறேன் (1 கொரிந்தியர் 6:17; யோவான் 15:1-7). நான் அவரில் முழுமையடைந்து, தேவனுடைய பரிபூரணத்தால் நிரப்பப்பட்டிருக்கிறேன். அவர் என்னைத் தம்முடனே பூரணப்படுத்துகிறார் (கொலோசெயர் 2:9,10). நான் இயேசுவில் இருக்கிறேன், இயேசு நடந்தபடியே நடக்கிறேன். நான் அவருடைய அன்பிலும், அவருடைய கிருபையிலும், அவருடைய வல்லமையிலும் நடக்கிறேன் (1 யோவான் 2:6). இயேசுவே தேவனுடைய குமாரன் என்று நான் அறிக்கையிடுகிறேன், நான் தேவனில் வசிக்கிறேன், தேவன் என்னில் வசிக்கிறார்.. நான் என் வாழ்க்கையை அவரோடு இணைந்தே வாழ்கிறேன் (1 யோவான் 4:15).

கர்த்தராகிய இயேசுதாமே என் ஞானமாய் இருக்கிறார். அவரில், நான் தேவனுடன் சரியான நிலையில் நிலைநிறுத்தப்பட்டுள்ளேன். நான் பரிசுத்தமானவனாகவும், தேவனுக்கென்று பிரித்தெடுக்கப்பட்டவனாகவும், விடுதலையாக்கப்பட்டவனாகவும் இருக்கிறேன் (1 கொரிந்தியர் 1:30). கிறிஸ்துவில், நான் அவருடைய கரத்தின் கிரியையாயிருக்கிறேன், நான் செய்ய வேண்டும் என்று திட்டமிட்டிருக்கிற நற்கிரியைகளைச் செய்யவே அவர் என்னை சிருஷ்டித்தார் (எபேசியர் 2:10).

நான் தேவனின் தாராளமான கிருபையையும் நீதியின் வரத்தையும் பெற்றேன், நான் ஜீவனில் ஆளுகை செய்கிறேன். இயேசு கிறிஸ்துவின் மூலமாக நான் வாழ்க்கையில் ஆளுகையைப் பெற்றிருக்கிறேன் (ரோமர் 5:17). ஒவ்வொரு சூழ்நிலையிலும் ஒவ்வொரு

சந்தர்ப்பத்திலும் கிறிஸ்துவுக்குள் தேவன் என்னை எப்போதும் வெற்றிசிறக்கச் செய்கிறார். தற்போதைய விஷயங்கள் எப்படி இருந்தாலும் சரி, நான் இயேசுவில் ஜெயித்து வருகிறேன் (2 கொரிந்தியர் 2:14). தேவனால் பிறந்த நான், உலகத்தின் மீதும், அந்தகாரத்தின் கிரியைகள் மீதும், உலகத்திலுள்ள தீமையின் மீதும் மேற்கொண்டு ஜெயித்தேன். கிறிஸ்துவில், நான் வெற்றிசிறந்தவன் (1 யோவான் 5:4). தேவன் என்னை எழுப்பி, கிறிஸ்துவுக்குள் பரலோகத்தில் அவருடைய வலதுபாரிசத்தில் உட்கார வைத்தார். நான் அந்தகார இருளின் அனைத்து வல்லமைகள் மீதும், சாத்தான் மீதும், சகல பிசாசுகள் மீதும் அதிகாரம் செலுத்தும் இடத்தில் அமர்ந்திருக்கிறேன் (எபேசியர் 2:4-6).

கிறிஸ்துவுக்குள் பரலோகத்திலிருந்து வரும் ஒவ்வொரு ஆசீர்வாதத்தாலும் நான் ஆசீர்வதிக்கப்படுகிறேன். தேவனுடைய ஆசீர்வாதங்கள் அனைத்தும் என்னுடையவை. விசுவாசத்தினாலே நான் அவைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளில் வாழ்கிறேன் (எபேசியர் 1:3). கிறிஸ்துவில், நான் ஆபிரகாமின் ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக்கொள்கிறேன். நான் நீதிமானாக்கப்பட்டேன். நான் தேவனின் சிநேகிதன். நான் எல்லாவற்றிலும் ஆசீர்வதிக்கப்பட்டவன். தேசங்களுக்கு ஆசீர்வாதமாக இருக்க நான் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறேன். என் சத்துருக்கள் மீது நான் ஜெயங்கொள்கிறேன் (கலாத்தியர் 3:29). தேவனுடைய வாக்குத்தத்தங்கள் அனைத்தும் அவருக்குள் ஆம் என்றும் ஆமென் என்றும் இருக்கிறது. அவருடைய வாக்குத்தத்தங்களின் நிறைவேறுதலை என் வாழ்வில் பெறுகிறேன் (2 கொரிந்தியர் 1:20).

கிறிஸ்துவில் நான் யாராக இருக்கிறேனோ, உண்மையில் நான் அவ்வாறே இருக்கிறேன்!

# பொருளடக்கம்


1. இரண்டு மண்டலங்களிலும் வார்த்தைகள் முக்கியம் 1
2. வார்த்தைகள் மூலம் ஆளுகை செயல்படுத்தப்படுகிறது 4
3. அவருடைய வார்த்தையின்படி உங்களை அழையுங்கள் 6
4. உங்கள் வார்த்தைகள் ஆசீர்வாதத்தை கட்டவிழ்கிறது 9
5. தேவனுடைய வார்த்தை முன்கூட்டியே எழுதப்பட்ட உங்கள் அறிக்கை, அதை பேசுங்கள்! 11
6. வார்த்தை உங்களுக்கு அருகில் உள்ளது—அவருடைய வார்த்தையைப் பேசுங்கள் 14
7. அவருடைய வார்த்தைகளை உங்கள் வாயில் வைத்திருங்கள் 16
8. அவரது வாக்குத்தத்தங்கள் நிலைத்திருக்கும்—எங்கள் அறிவிப்பும் அப்படியே உள்ளது 18
9. தேவனுடனான உங்கள் உடன்படிக்கையை அறிவியுங்கள் 20
10. தேவனுக்கு முன்பாக ஏற்றுக்கொள்ளக்கூடிய வார்த்தைகளைப் பேசுங்கள் 22
11. ஒவ்வொரு சூழ்நிலையிலும் தேவன் உங்களுக்கு யாராக இருக்கிறார் என்பதை அறிவியுங்கள் 24
12. கர்த்தரின் சத்தத்திற்கு இயற்கை உலகம் பதிலளிக்கிறது 26
13. இயற்கை உலகம் அவருடைய வார்த்தையால் வடிவமைக்கப்பட்டு உருவானது 29
14. உங்கள் நாவு உங்களுக்கு நல்ல நாட்களையும் நீண்ட ஆயுளையும் தரக்கூடியது 31
15. அவருடைய வார்த்தையை அறிவிப்பது என்பது அவருடைய உடன்படிக்கையை உரிமை கோருவதாகும் 33
16. கர்த்தரைப் பற்றி நான் சொல்வேன் 36
17. தேவதூதர்கள் அவருடைய வார்த்தையின் குரலைக் கேட்கிறார்கள் 40
18. கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் சொல்வார்களாக 43

19. மகிழ்ச்சி மற்றும் இரட்சிப்பின் சத்தத்தைக் காத்துக்கொள்ளுங்கள் 46

20. உங்கள் வாழ்க்கையை வடிவமைக்கும் சக்திகள் உங்கள் இதயத்திலிருந்து வெளிவருகின்றன 48

21. நீதியான வார்த்தைகள் ஜீவனையும் பெலனையும் வெளியிடுகின்றன 50

22. வார்த்தைகள் குணப்படுத்தி முழுமையடையச் செய்யும் 52

23. இனிமையான வார்த்தைகளின் வல்லமையை கட்டவிழ்த்துவிடுங்கள் 54

24. உங்கள் வார்த்தைகளின் பலன்களால் உங்கள் வாழ்க்கை நிரப்பப்படுகிறது 56

25. உங்கள் வார்த்தைகளுக்கு ஜீவன் மற்றும் மரணத்தின் மீது அதிகாரம் உண்டு 58

26. உங்கள் வாயில் உள்ள அவருடைய வார்த்தை தேசங்களை அசைக்கும் 60

27. உலர்ந்த எலும்புகளிடம் பேசுங்கள் அவை உயிரடையட்டும் 62

28. உங்கள் வார்த்தைகள் பரலோகத்தில் கேட்கப்படுகின்றன 64

29. வார்த்தைகள் ஆவிக்குரிய மண்டலத்திலிருந்து இயற்கைக்கு கடத்தப்படுகின்றது 66

30. பலவீனன் தன்னை பலவான் என்று சொல்லட்டும் 69

31. உங்கள் வார்த்தைகளால் தேவனைப் புண்படுத்தாதீர் 72

32. “இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது” என்று சொல்லக் கற்றுக்கொள்ளுங்கள்—இயேசு செய்தார் 74

33. வார்த்தையால் அசுத்த ஆவிகளைத் துரத்துங்கள் 76

34. நீங்கள் பூமியில் அவரை அறிக்கை செய்யும்போது, பரலோகத்தில் நீங்கள் குறிப்பிடப்படுகிறீர்கள் 78

35. வார்த்தைகள் உங்கள் இருதயத்தில் உள்ளதை உங்கள் வாழ்க்கையில் கட்டவிழ்க்கிறது 80

36. உங்கள் வார்த்தைகளால் நீங்கள் நீதிமான்களாக்கப்படுவீர்கள் அல்லது தீர்க்கப்படுவீர்கள் 82

37. கட்டுகிறதும் கட்டவிழ்ப்பதுமான ராஜ்யத்தின் அதிகாரத்தை வார்த்தைகள் வெளியிடுகிறது 84
38. மலையைப் பார்த்துப் பேசுங்கள் 86
39. நீங்கள் விரும்பிய முடிவைப் பேசுங்கள் 88
40. நீங்கள் சொல்வது நிறைவேறும் என்று விசுவாசியுங்கள் 90
41. ஜெபத்தில் விசுவாச வார்த்தைகளைப் பேசுங்கள் 92
42. அவருடைய வார்த்தையுடன் உடன்படுங்கள் 94
43. நோய்களை விட்டு வெளியேறுமாறு கட்டளையிடுங்கள் 96
44. புயலிடம் பேசுங்கள் 98
45. மக்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டனர் என்று அறிவியுங்கள் 100
46. அபிஷேகிக்கப்பட்ட வார்த்தைகள் ஆவியில் ஜீவனை சுமக்கிறது 102
47. விசுவாசத்தில் கட்டளையிடுங்கள் 104
48. வார்த்தை உங்களை உங்கள் சுதந்தர வீதத்திற்குள் கொண்டுவருகிறது 106
49. என்னிடம் சொன்னது போலவே இருக்கும் என்று நான் விசுவாசிக்கிறேன் 108
50. இல்லாதவைகளை இருக்கிறவைகளை போல அழையுங்கள் 110
51. அவருடைய வாக்குத்தத்தத்தின்படி பேசுங்கள் 112
52. வாழ்வில் ஆட்சி செய்யுங்கள்—ஆளுகை செலுத்தும் வார்த்தைகளைப் பேசுங்கள் 115
53. விசுவாசம் இப்படிப் பேசுகிறது 117
54. அறிக்கையிடுதலில் இரட்சிப்பு 119
55. அவருடைய எல்லா வாக்குத்தத்தங்களுக்கும் "ஆம் மற்றும் ஆமென்" என்று அறிவியுங்கள் 121
56. நாம் விசுவாசிக்கிறோம், எனவே பேசுகிறோம் 124

57. கிருபை செயலாற்ற வார்த்தைகளைப் பயன்படுத்துங்கள் 126

58. ஆவியின் பட்டயத்தைப் பயன்படுத்துங்கள் 128

59. தீர்க்கதரிசன வார்த்தைகளுடன் நல்லதொரு யுத்தம் செய்யுங்கள் 130

60. உங்களிலுள்ள ஒவ்வொரு நன்மையான காரியத்தையும் கிறிஸ்துவில் அங்கீகரியுங்கள் 132

61. அவருடைய வார்த்தை உங்கள் உலகத்தை நிலைநிறுத்தி ஒழுங்குபடுத்தும் 134

62. நாம் அறிக்கைபண்ணுகிற பிரதான ஆசாரியர் இயேசுவே 136

63. உங்கள் அறிக்கையை உறுதியாகப் பற்றிக்கொள்ளுங்கள் 138

64. அவரது வார்த்தைகள் உலகை வடிவமைத்தது 140

65. தேவன் சொல்லியிருக்கிறார், ஆகவே நாம் தைரியமாகச் சொல்கிறோம் 142

66. உங்கள் நாவை ஆளுங்கள், உங்களை முழுமையாக ஆளுங்கள் 144

67. உங்கள் வார்த்தைகள் உங்கள் வாழ்க்கையை வழிநடத்துகிறது, ஆளுகிறது மற்றும் ஆசீர்வதிக்கிறது 147

68. விசுவாசத்தை தொடர்ந்து பேசுங்கள் 150

69. பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள் 152

70. ஆசீர்வாத வார்த்தைகளை வெளியிடுங்கள் 154

71. வெற்றிக்கான உங்கள் விசுவாசத்தை வார்த்தைகள் வெளியிடுகிறது 156

72. நாம் தேவனால் உண்டானவர்கள், ஆகவே நாம் தேவனிடத்திலிருந்து வந்தவர்களைப்போல பேசுகிறோம் 158

73. ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் நம்முடைய சாட்சியின் வார்த்தையினாலும் நாம் ஜெயிக்கிறோம் 160

# அறிமுகம்

இயேசுவில் எனது தனிப்பட்ட ஆவிக்குரிய பயணத்தை நான் திரும்பிப் பார்க்கையில், என்னை உறுதியாக வைத்திருக்க உதவிய ஒழுக்கங்கள் அல்லது நடைமுறைகளில் ஒன்று என் விசுவாசத்தைப் பேசுவதாகும். எனது இளம் வயது முதல், தேவனுடனான எனது தினசரி நேரத்தின் ஒரு பகுதியாக, சுமார் 30 நிமிடங்கள் அல்லது அதற்கு மேல் ஒதுக்கி, எனது வாழ்க்கை, எனது நிகழ்காலம் மற்றும் எனது எதிர்காலம் ஆகியவற்றைக் குறித்த தேவனுடைய வார்த்தையை அறிக்கையிட்டு வந்ததை நான் நினைவுகூருகிறேன். நான் ஆதி முதல் அந்தம் வரை, என் வாழ்வின் பல்வேறு பகுதிகளில் தேவனுடைய வார்த்தையைப் பேசி, கிறிஸ்துவில் நான் யார் என்பதை அறிக்கையிடுவேன். இது என் விசுவாசத்தை தினமும் வளர்த்தது. ஒவ்வொரு சூழ்நிலையிலும் இந்த வார்த்தைகளில் சிந்திப்பதும், தேவன் சொல்வதைச் சொல்வதும், என் விசுவாசத்தைப் பேசுவதும் இயல்பான சிந்தனையாக மாறியது. இவ்வாறு செய்வது ஒவ்வொரு சூழ்நிலையிலும் நான் எழுந்து வெற்றியடைய உதவியது. நான் கடைசிவரை அவருடைய வல்லமைவாய்ந்த, வாக்குமாறாத வார்த்தையைக் குறித்த என் விசுவாசத்தைப் பேசி—இவ்வாறே நான் வாழ விரும்புகிறேன். இந்தப் புத்தகம், என்னைப் பெரிதும் வளரச் செய்த ஒன்றை உங்களுக்கும் கொண்டுசேர்க்கும் வகையில்வடிவமைக்கப்பட்டுள்ளது—தேவனக் குறித்தும் அவருடைய வார்த்தையைக் குறித்தும் எப்போதும் உங்கள் விசுவாசத்தைப் பேசும் எளிய பயிற்சிதான் அது. இதை உங்கள் வாழ்க்கை முறையாக்குங்கள்.

தேவன் சகல சிருஷ்டிகளையும் வடிவமைத்தார். அவர் உருவாக்கிய உலகங்களை நிர்வகிக்கும் விதிகளை

அவர் ஏற்படுத்தினார். இயற்கையிலும், இயற்பியல் துறைகளிலும் நாம் விதிகளைப் புரிந்துகொள்கிறோம். இயற்பியல், வேதியியல் மற்றும் பிற துறைகளில் இந்த விதிகளில் பலவற்றை நாம் அளவீடு செய்து, அவற்றை நமது நன்மைக்காக பயன்படுத்துகிறோம், மேலும் அதன் விளைவுகள் பேரழிவை ஏற்படுத்தும் என்பதை அறிந்து இந்த விதிகளை மீறாமல் கவனமாக இருக்கிறோம். இதேபோல், ஆவிக்குரிய மற்றும் இயற்கை மண்டலங்களுடனான நமது இடையீடுகளை நிர்வகிக்கும் ஆவிக்குரிய விதிகள் உள்ளன. இயற்கையானது ஆவிக்குரிய மண்டலத்திலிருந்து உண்டானதால், இந்த ஆவிக்குரிய விதிகள் நமது இயற்கை மண்டலத்தையும் பாதிக்கிறது. நாம் அவற்றைப் புரிந்துகொண்டு வாழும்படி, இந்த ஆவிக்குரிய விதிகளில் சில, தேவனுடைய வார்த்தையில் நமக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

வேத வாக்கியங்களில் வெளிப்படுத்தப்பட்ட பல ஆவிக்குரிய விதிகள் அல்லது ஆவிக்குரிய சத்தியங்களிலிருந்து, தேவனுடைய வார்த்தையின் வல்லமை, நாம் பேசும் வார்த்தைகளின் வல்லமை, விசுவாசத்தில் நம்மால் பேசப்பட்ட தேவனுடைய வார்த்தையின் வல்லமை மற்றும் பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலால் பேசப்படும் வார்த்தைகளின் (தீர்க்கதரிசன வார்த்தைகள்) வல்லமை ஆகியவற்றைக் கற்றுக்கொள்கிறோம். தேவனுடைய வார்த்தையில் இயல்பாகவே வல்லமை இருக்கிறது. வேதாகமம் என்பது தேவனுடைய வார்த்தையாக இருக்கிறது, நாம் அதைப் பெற்றுக்கொள்ளும்படி, அது நமக்கு எழுதப்பட்ட வடிவத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. நம் வாழ்க்கையை தனிப்பட்டமுறையில் பாதிக்கும் வல்லமை நம் வாயின் வார்த்தைகளில் இருக்கிறது. தேவன் மீதும் அவருடைய வார்த்தையின் மீதும் விசுவாசம் வைத்துப் பேசும் வார்த்தைகளில் வல்லமை உண்டு. நம்முடைய விசுவாசம் தேவனிலும் அவருடைய வார்த்தையிலும்

இருக்கிறது. விசுவாசத்தில் பேசப்படும் வார்த்தைகள், தேவனுடைய வார்த்தையிலிருந்து நம் இருதயங்களில் பிறந்து, மலைகளை நகர்த்துகின்றது, புயல்களை அமைதிப்படுத்துகின்றது, மேலும் நமது மண்டலத்தில் இயற்கைக்கு அப்பாற்பட்டவைகளை கட்டவிழ்க்கிறது. பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலால் வரும் வார்த்தைகளைப் பேசுவதில் வல்லமை உண்டு. பரிசுத்த ஆவியானவர், தம்முடைய நோக்கங்களை நமது ஆவிக்குரிய மண்டலத்தில் பேசும்படி தூண்டுகிறார் மற்றும் அறிவுறுத்துகிறார். நாம் அவருடைய கட்டளையை நிறைவேற்றும்போது, யதார்த்த உலகில் வல்லமைவாய்ந்த காரியங்கள் நடக்கின்றது. இவை அனைத்தும் நமது வார்த்தைகளோடு, அதாவது நாம் பேசும் வார்த்தைகளோடு தொடர்புடையவை.

வேதாகமம் முழுவதும், தேவன் தம்முடைய வார்த்தையைப் பேசும்படி தம்முடைய ஜனங்களுக்கு அறிவுறுத்துகிறார். நம் வாயிலிருந்து வார்த்தைகளாகவும், நம் இருதயங்களில் விசுவாசத்துடன் பேசப்படும் அவருடைய வார்த்தையும், அவருடைய சிருஷ்டிப்பையும் அற்புதம் செய்யும் வல்லமையையும் நமது இயற்கை மண்டலத்தில் கட்டவிழ்க்கிறது. நம் வாயிலிருந்து வெளிப்பட்டு வார்த்தைகளாகப் பேசப்படும் அவருடைய வார்த்தையே சத்துருவுக்கு எதிரான ஆயுதமாக இருக்கிறது.

நம்முடைய நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் தேவனுடைய வார்த்தையைப் பேசுவதன் மூலம் நம் உலகத்தை வடிவமைக்க முடியும். எப்பொழுதும் எல்லாச் சூழ்நிலைகளிலும் விசுவாசம் நிறைந்த வார்த்தைகளைப் பேச நாம் கற்றுக்கொள்ள வேண்டும். விசுவாசத்துடன் பேசுவது என்பது மலை இருப்பதையோ அல்லது நிலவுகிற புயலின் உக்கிரத்தையோ மறுப்பது அல்ல. மாறாக, தொடர்ந்து வழியில் குறுக்கிடும் மலையின் உரிமையை மறுத்து பேசுவதே விசுவாசமாகும். விசுவாசம் என்பது காற்று மற்றும்

புயல்களைப் பார்த்துப் பேசி, அழிவை ஏற்படுத்தும்படி அவைகள் பெற்றிருக்கிற உரிமையைப் பறித்து, அதற்குப் பதிலாக, தேவன் வழங்கும் சமாதானம் மற்றும் அமைதிக்கு வழிவகுப்பதாய் இருக்கிறது. நோயைப் பார்த்துப் பேசி, அது சரீரத்தை விட்டு வெளியேறவும், தேவனிடத்திலிருந்து வரும் குணப்படுத்துதலையும் ஆரோக்கியத்தையும் ஏற்றுக்கொள்ள வழிவகுக்குமாறு விசுவாசம் கட்டளையிடுகிறது.

அநேகர் சுயமரியாதை குறைவுடனும், தன்னம்பிக்கை இல்லாமலும், பயம், அச்சம், பதட்டம், மனச்சோர்வு மற்றும் பிற உணர்ச்சி சம்பந்தமான சிக்கல்களுடனும் அடிமைத்தனங்களுடனும் போராடுகிறார்கள். நம் வாழ்வின் ஒவ்வொரு சூழ்நிலையிலும் ஒரு நோக்கத்தோடு தேவனுடைய வார்த்தையைப் பேசும் பழக்கமானது முழுமையான விடுதலைக்கும் உணர்வுப்பூர்வமான ஆரோக்கியத்திற்கும் முக்கியமானதாகும். அதைப் பயிற்சி செய்யுங்கள். அது இலவசம்! அதற்கு தேவையானது கொஞ்சம் விசுவாசமும் ஒழுக்கமும் மட்டுமே. நீங்கள் மீண்டும் அதே போல் இருக்க மாட்டீர்கள்!

நம்முடைய வார்த்தைகளின் முக்கியத்துவம், தேவனுடைய வார்த்தையைப் பேசும் வல்லமை, விசுவாசம் நிறைந்த வார்த்தைகளைப் பேசும் வல்லமை, ஆவியானவரால் ஏவப்பட்ட வார்த்தைகளைப் பேசும் வல்லமை ஆகியவற்றைப் பற்றிய நுண்ணறிவைத் தரும் பல முக்கிய வேத வசனங்களைப் பற்றிக்கொள்ள முயற்சித்தோம். (நீங்கள் இந்தப் பட்டியலில் சேர்க்க விரும்பும் வேறு வேதாகமப் பகுதிகள் இருக்கலாம். தயவுசெய்து அவற்றையும் சேர்த்துக்கொள்ளவும்.) இவை சுருக்கமாகவும், எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் அத்தியாயங்களாகத் தொகுக்கப்பட்டுள்ளது. உங்களின் தனிப்பட்ட தியானத்திற்கும், குடும்ப ஜெபத்திற்கு அல்லது சிறு-குழு தியானத்திற்கும் இந்த புத்தகத்தை

அனுதின தியான நூலாக பயன்படுத்துங்கள். உங்கள் நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தின் மீது விசுவாசத்துடன் தேவனுடைய வார்த்தையைப் பேசுவதன் வல்லமையை உங்களுக்கு நினைவூட்டுவதற்கு இதை அடிக்கடி வாசியுங்கள். உங்கள் விசுவாசத்தை நீங்கள் பேசும்போது தேவனுடைய வார்த்தையின் வல்லமை உங்கள் உலகத்தை வடிவமைக்கட்டும்.

தேவன் ஆசீர்வதிப்பாராக!

ஆசிஷ் ராய்ச்சூர்

# 1

# இரண்டு மண்டலங்களிலும் வார்த்தைகள் முக்கியம்

**ஆதியாகமம் 1:1-5**

**1ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்.**

**2பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது. ஆழத்தின்மேல் இருள் இருந்தது; தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருந்தார்.**

**3தேவன்: வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார், வெளிச்சம் உண்டாயிற்று.**

**4வெளிச்சம் நல்லது என்று தேவன் கண்டார்; வெளிச்சத்தையும் இருளையும் தேவன் வெவ்வேறாகப் பிரித்தார்.**

**5தேவன் வெளிச்சத்துக்குப் பகல் என்று பேரிட்டார், இருளுக்கு இரவு என்று பேரிட்டார்; சாயங்காலமும் விடியற்காலமுமாகி, முதலாம் நாள் ஆயிற்று.**

தேவன் சிறந்த வடிவமைப்பாளரும், கட்டிடக் கலைஞரும், எல்லாவற்றையும் சிருஷ்டிப்பவருமாய் இருக்கிறார். பரந்து விரிந்திருக்கும் சிருஷ்டிப்பில் நாம் இன்னும் பல விஷயங்களைக் கண்டுபிடித்துப் புரிந்துகொள்ள முயற்சிக்கிறோம். தேவன் எல்லையற்றவராய் இருக்கிறார், அவருடைய சிருஷ்டிப்பு பல வழிகளில் அவரது எல்லையற்ற தன்மையை அறிவிக்கிறது. தேவன் தமது சிருஷ்டிப்பின் செயல்முறையை பல வழிகளில் செய்திருக்கலாம். ஒருவேளை அவருக்கு எண்ணங்கள் இருந்திருக்கலாம், அத்தகைய எண்ணங்களை பௌதீக உலகில் வடிவம் பெற அவர் அனுமதித்திருக்கலாம். ஒருவேளை அவர் தமது வரைபடத்தின்படி இயற்கையான சாம்ராஜ்யத்தை வடிவமைக்கவும், உருவாக்கவும், விநியோகிக்கவும் ஒரு கூட்ட தேவதூதர்களை வேலை செய்ய வைத்திருக்கலாம்.

எனினும், தேவன் வார்த்தைகளைப் பயன்படுத்தி எல்லாவற்றையும் உருவாக்கினார். தேவன் தம்முடைய வார்த்தைகளால் சகலத்தையும் சிருஷ்டித்தார் என்பதை வேதாகமம் நமக்கு வெளிப்படுத்துகிறது. “தேவன் சொன்னார் ... அப்படியே உண்டாயிற்று ...”

அவரது வார்த்தைகள் அவரது வடிவமைப்பையும், அவர் மனதில் இருந்த அவரது படைக்கும் திறனும் முழுமைக்கு கொண்டு சென்றது. இந்த உண்மை வேத வாக்கியங்களில் நமக்குத் தொடர்ந்து குறிப்பிடப்படுவதை காண்கிறோம். தேவன் தம் வார்த்தைகள் மூலம் கிரியை செய்கிறார். அவர் பேசுகிறார், அவர் பேசுவது நிறைவேற்றப்படுகிறது. இயற்கை உலகில் உள்ள அனைத்தும் அவருடைய வார்த்தைக்கு அடிபணிகிறது மற்றும் அவருடைய வார்த்தைகளுக்குப் பதிலளிக்கிறது.

தேவன் ஆவியாய் இருக்கிறார், மேலும் இயற்கை உலகை முழுமைக்குக் கொண்டுவர அவர் வார்த்தைகளைப் பயன்படுத்தினார். எனவே, இந்த இரண்டு மண்டலங்களையும் வார்த்தைகள் இணைக்கின்றது. ஆவிக்குரிய உலகத்திலிருந்து வரும் வார்த்தைகளுக்கு இயற்கை உலகம் பதிலளிக்கிறது.

மனிதர்களாகிய நாம் தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம் என்று வேதாகமம் நமக்குக் கற்பிக்கிறது. ஆவிக்குரியவர்களாகிய நாம் ஆத்துமாவுடன் (மனம், விருப்பம், உணர்ச்சிகள்) சரீரத்தில் குடியிருக்கிறோம் (1 தெசலோனிக்கேயர் 5:23). நமது வார்த்தைகள் ஆவிக்குரிய மற்றும் இயற்கை உலகங்களாகிய இரண்டு மண்டலங்களையும் இணைக்கிறது. நமது வார்த்தைகள் நம்மை தேவனுடன் இணைக்கிறது (அல்லது வேறு சிலர், உதாரணமாக, மந்திரவாதிகள் தங்கள் வார்த்தைகளைத் தீய சக்திகளுடன் இணைக்கப் பயன்படுத்துகின்றனர்). தேவன்

தம்முடைய வார்த்தைகளை நம் மூலமாகப் பேசும்போது, அவருடைய வல்லமை நம் மூலம் வெளிப்பட்டு நம் உலகத்தை அசைக்கிறது!

# 2

# வார்த்தைகள் மூலம் ஆளுகை செயல்படுத்தப்படுகிறது

**ஆதியாகமம் 1:26-28**

**[26]பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும்,ஆகாயத்துப்பறவைகளையும்,மிருகஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார்.**
**[27]தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார்; அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்.**
**[28]பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்.**

**ஆதியாகமம் 2:19,20**

**[19]தேவனாகிய கர்த்தர் வெளியின் சகலவித மிருகங்களையும், ஆகாயத்தின் சகலவிதப் பறவைகளையும் மண்ணினாலே உருவாக்கி, ஆதாம் அவைகளுக்கு என்ன பேரிடுவான் என்று பார்க்கும்படி அவைகளை அவனிடத்தில் கொண்டுவந்தார்; அந்தந்த ஜீவஜந்துக்கு ஆதாம் எந்தெந்தப் பேரிட்டானோ அதுவே அதற்குப் பேராயிற்று.**
**[20] அப்படியே, ஆதாம் சகலவித நாட்டு மிருகங்களுக்கும், ஆகாயத்துப் பறவைகளுக்கும், சகலவித காட்டுமிருகங்களுக்கும் பேரிட்டான்; ஆதாமுக்கோ ஏற்ற துணை இன்னும் காணப்படவில்லை.**

தேவன் மனுஷனையும் மனுஷியையும் உருவாக்கி அவர்களுக்கு ஒரு கட்டளைக் கொடுத்தார், அதை நாம் ஆதியாகமத்தின் முதல் இரண்டு அதிகாரங்களில் வாசிக்கிறோம், அதை ஆதியாகமக் கட்டளை என்று குறிப்பிடுகிறோம். பூமியில் உள்ள அனைத்து

உயிரினங்களின் மீதும் மக்கள் ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்பது ஆதியாகமக் கட்டளையின் ஒரு பகுதியாகும். ஆதிக்கம் செலுத்துவது என்றால் ஆளுகை செய்வதாகும். இந்த உயிரினங்கள் ஒவ்வொன்றையும் தேவன் ஆதாமிடம் கொண்டு வந்து அவற்றிற்கு ஒரு பெயரைக் கொடுக்கச் செய்தார் என்பது மிகவும் சுவாரஸ்யமானது. அத்தகைய செயலின் விளைவுகளில் ஒன்று, ஒவ்வொரு உயிரினமும் தனக்கு யார் பொறுப்பாளி என்பதை புரிந்துகொள்வதாகும். தேவன் ஆதாமை பூமியின் பொறுப்பாளராக நியமித்திருந்தார். பூமியில் உள்ள ஒவ்வொரு உயிரினமும் ஆதாமின் ஆளுகையின் கீழ் இருந்தது, எந்த கேள்வியும் கேட்கப்படவில்லை! ஆதாமின் ஆதிக்கம் அல்லது ஆளுகை தேவனிடத்திலிருந்து வந்தது. ஆதாம் ஒவ்வொரு உயிரினத்திற்கும் ஒரு பெயரைக் குறிப்பிட்டு, பெயரிட்டதால், அவன் தன் வார்த்தைகள் மூலம், பூமியில் தேவனால் கொடுக்கப்பட்ட தனது ஆளுகை மற்றும் ஆதிக்கத்தை வெளிப்படுத்தி செயல்படுத்தினான். இந்தச் செயல்பாட்டில் தேவன் அவனுக்கு ஆதரவாக இருந்தார்.

தேவன் ஆதியாகமக் கட்டளையைத் திரும்பப் பெறவில்லை. நாம் ஆளுகை செய்யும்படி தேவனால் வடிவமைக்கப்பட்டு நியமிக்கப்பட்டுள்ளோம். ஆளுகை வார்த்தைகள் மூலம் வெளிப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. இந்த உலகில் உள்ள விஷயங்களின் மீது தேவன் உங்களுக்கு கொடுத்த ஆளுகையை உங்கள் வார்த்தைகள் வெளிப்படுத்தட்டும்.

# 3

# அவருடைய வார்த்தையின்படி உங்களை அழையுங்கள்

**ஆதியாகமம் 17:4,5,15,16**

**4நான் உன்னோடே பண்ணுகிற என் உடன்படிக்கை என்னவென்றால், நீ திரளான ஜாதிகளுக்குத் தகப்பனாவாய்.**

**5இனி உன் பேர் ஆபிராம் என்னப்படாமல், நான் உன்னைத் திரளான ஜாதிகளுக்குத் தகப்பனாக ஏற்படுத்தினபடியால், உன் பேர் ஆபிரகாம் என்னப்படும்.**

**15பின்னும் தேவன் ஆபிரகாமை நோக்கி: உன் மனைவி சாராயை இனி சாராய் என்று அழையாதிருப்பாயாக; சாராள் என்பது அவளுக்குப் பேராயிருக்கும்.**

**16நான் அவளை ஆசீர்வதித்து, அவளாலே உனக்கு ஒரு குமாரனையும் தருவேன். அவள் ஜாதிகளுக்குத் தாயாகவும், அவளாலே ஜாதிகளின் ராஜாக்கள் உண்டாகவும், அவளை ஆசீர்வதிப்பேன் என்றார்.**

புதிய ஏற்பாட்டில் ஆபிரகாம் விசுவாசத்தின் தகப்பன் என்று குறிப்பிடப்படுகிறார். ஆபிராம் மற்றும் சாராய் ஆகியோரிடத்தில் தேவன் தமது செயல்பாட்டில், அவர்களின் பெயர்களை மாற்றும்படி அவர்களுக்கு அறிவுறுத்துவது அவசியமானது என்பதை கவனத்தில் கொள்வது சுவாரஸ்யமானது, இதன் மூலம் அவர்கள் தங்கள் வாழ்க்கையில் அவர் வாக்குத்தத்தம் பண்ணியபடி தங்களை அழைக்கத் தொடங்கலாம்.

ஆபிராம் என்றால் “உயர்த்தப்பட்ட தகப்பன்” என்றும், அதே நேரத்தில் ஆபிரகாம் என்றால் “அநேக ஜாதிகளுக்குத் தகப்பன்” என்றும் அர்த்தமாகும்.

சாராய் என்பதற்கு “இளவரசி அல்லது ஆளுகை செய்பவள்” என்றும், அதே நேரத்தில் சாராள் என்றால்

“ராணி அல்லது இளவரசிகளின் தாய்” என்றும் அர்த்தமாகும்.

ஒவ்வொரு முறையும் ஆபிரகாம் தன்னை அந்த பெயரால் அழைக்கும்போது, அவன் தன் வாழ்க்கையில் தேவனுடைய வாக்குத்தத்தத்தை அறிக்கையிட்டான். தேவன் என்னை குறித்துச் சொன்னபடியே, “நான் அநேக ஜாதிகளுக்குத் தகப்பன்” என்று சொல்லிக்கொண்டிருந்தான். ஒவ்வொரு முறையும் சாராள் அந்த பெயரால் தன்னை அழைத்தபோது, அவள் தன் வாழ்க்கையில் தேவனுடைய வாக்குத்தத்தத்தை அறிவித்துக்கொண்டிருந்தாள். தேவன் என்னைக் குறித்துப் பேசியபடியே, “நான் தேசங்களுக்கும், ராஜாக்களுக்கும், பிரபுக்களுக்கும் தாய்” என்று சொல்லிக்கொண்டிருந்தாள். அவர்களுக்கு இன்னும் குழந்தை பிறக்கவில்லை. ஆனால் அவர்கள் தேவன் சொன்னதை உண்மை என்று அறிவித்தார்கள். தேவனுடைய வாக்குத்தத்தத்தின்படி அவர்கள் தங்களை அழைக்க ஆரம்பித்தபோது, அது ஆரம்பத்தில் முட்டாள்தனமாகவும் கேலிக்குரியதாகவும் தோன்றியிருக்கலாம். ஆனால் வாக்குத்தத்தம் நிறைவேறி, தேவன் சொன்னபடியே அவர்கள் ஆனார்கள்!

தேவனுடைய வாக்குத்தத்தத்தின்படி தங்களை அழைத்ததில் அவர்கள் ஏதாவது தவறு செய்தார்களா? நிச்சயமாக இல்லை! அவ்வாறு செய்யும்படி தேவன் அவர்களுக்கு அறிவுறுத்தியிருந்தார். இதை ரோமர் 4 இல் பவுல் மேலும் விளக்குகிறார், அதை நாம் பின்னர் சிந்திப்போம். ஆபிரகாமின் விசுவாசத்தின் படிகளைப் பின்பற்றும்படி நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது.

தேவனால்எழுதப்பட்டவார்த்தைநம்மிடம்உண்டு,அதில் தேவன் தம்முடைய ஜனங்களுக்கும் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட அனைவருக்கும் வாக்குத்தத்தங்களை அறிவித்திருக்கிறார். இந்த வாக்குத்தத்தங்கள் தேவனுடைய மக்கள் அனைவருக்கும் கிடைக்கின்றது தம்முடைய

மக்களுக்காக அவர் வைத்திருக்கும் சுதந்தரத்தில் பங்குகொள்ள அவர் நம்மைத் தகுதிப்படுத்தினார் (கொலோசெயர் 1:12). உங்கள் வாழ்க்கையில் தேவனுடைய வாக்குத்தத்தங்களின் உண்மையை அறிவியுங்கள். தேவனுடைய வார்த்தையின்படி உங்களை அழையுங்கள். நீங்கள் யார் என்று தேவன் சொன்னப்பிரகாரம் நீங்கள் இருக்கிறீர்கள். உங்களால் முடியும் என்று தேவன் சொல்வதை உங்களால் செய்ய முடியும். நீங்கள் அவர் வாக்களித்த அனைத்தும் ஆகிவிடுவீர்கள்.

# 4

# உங்கள் வார்த்தைகள் ஆசீர்வாதத்தை கட்டவிழ்கிறது

**எண்ணாகமம் 6:22-27**

**22 பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி:**

**23நீ ஆரோனோடும் அவன் குமாரரோடும் சொல்லவேண்டியது என்னவென்றால்: நீங்கள் இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதிக்கும்போது, அவர்களைப் பார்த்துச் சொல்லவேண்டியதாவது:**

**24கர்த்தர் உன்னை ஆசீர்வதித்து, உன்னைக் காக்கக்கடவர்.**

**25கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரகாசிக்கப்பண்ணி, உன்மேல் கிருபையாயிருக்கக்கடவர்.**

**26கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரசன்னமாக்கி, உனக்குச் சமாதானம் கட்டளையிடக்கடவர் என்பதே.**

**27இவ்விதமாய் அவர்கள் என் நாமத்தை இஸ்ரவேல் புத்திரர்மேல் கூறக்கடவர்கள்; அப்பொழுது நான் அவர்களை ஆசீர்வதிப்பேன் என்று சொல் என்றார்.**

வார்த்தைகள் ஆசீர்வாதத்தைக் கடத்தும் ஊர்திகளாக இருக்கின்றன. தேவன் இதை ஏற்படுத்தினார். இந்த நிகழ்வில், பிரதான ஆசாரியர் எவ்வாறு தேவனுடைய மக்களை ஆசீர்வதிக்க வேண்டும் என்பதற்கான தெளிவான வழிமுறைகளை தேவன் அளிக்கிறார், எப்படியெனில் பிரதான ஆசாரியர் தேவனுடைய நாமத்தை மக்கள்மேல் கூறுவதின்மூலம், தேவன் தம் மக்களை ஆசீர்வதிப்பதை நாம் காண்கிறோம். பிரதான ஆசாரியன் “அவர்களிடம் கூறுவார்,” அவர்கள்மேல் பேசுவார், கர்த்தருடைய நாமத்தில் அவர்கள்மேல் ஆசீர்வாத வார்த்தைகளை அறிவிப்பார்.

பழைய உடன்படிக்கையின் தேவனுடைய மக்கள் ஆசீர்வாதத்தை வெளியிட்ட விதம் இதுவே. ஈசாக்கு யாக்கோபின்மேல் ஆசீர்வதிக்கும் வார்த்தைகளை சொல்லி

அவனை ஆசீர்வதித்தான் (ஆதியாகமம் 27:27-29). யாக்கோபு தன் மகன்களை ஆசீர்வாத வார்த்தைகளால் ஆசீர்வதித்தான் (ஆதியாகமம் 48,49).

புதிய உடன்படிக்கையில் ஆசாரியர்களாக, கர்த்தருடைய நாமத்தில் ஆசீர்வாத வார்த்தைகளைப் பேசுவதன் மூலம், நம்முடைய சொந்த வாழ்க்கையின் மீதும், நம் குடும்பத்தின் மீதும், மற்றவர்களின் வாழ்வின் மீதும் ஆசீர்வாதத்தை வெளியிடுவதற்கான வாய்ப்பும் நமக்கு இருக்கிறது. உங்களைப் பற்றியும், உங்கள் நிகழ்காலம் மற்றும் உங்கள் எதிர்காலத்தைப் பற்றியும் நீங்கள் எவ்வகையான வார்த்தைகளை பேசுகிறீர்கள்? உங்கள் குடும்பத்தினர் மற்றும் அவர்களின் எதிர்காலம் குறித்து நீங்கள் எப்படிப்பட்ட வார்த்தைகளைப் பேசுகிறீர்கள்? உங்கள் ஆசீர்வாத வார்த்தைகள் அவர்கள் மீது கர்த்தருடைய ஆசீர்வாதத்தைக் கட்டவிழ்க்க முடியும்.

# 5

# தேவனுடைய வார்த்தை முன்கூட்டியே எழுதப்பட்ட உங்கள் அறிக்கை, அதை பேசுங்கள்!

**எண்ணாகமம் 13:30-33**

**[30]அப்பொழுது காலேப் மோசேக்கு முன்பாக ஜனங்களை அமர்த்தி: நாம் உடனே போய் அதைச் சுதந்தரித்துக்கொள்வோம்; நாம் அதை எளிதாய் ஜெயித்துக்கொள்ளலாம் என்றான்.**

**[31]அவனோடேகூடப் போய்வந்த மனிதரோ: நாம் போய் அந்த ஜனங்களோடே எதிர்க்க நம்மாலே கூடாது; அவர்கள் நம்மைப்பார்க்கிலும் பலவான்கள் என்றார்கள்.**

**[32] நாங்கள் போய்ச் சுற்றிப் பார்த்து வந்த அந்த தேசம் தன் குடிகளைப் பட்சிக்கிற தேசம்; நாங்கள் அதிலே கண்ட ஜனங்கள் எல்லாரும் மிகவும் பெரிய ஆட்கள்.**

**[33]அங்கே இராட்சதப் பிறவியான ஏனாக்கின் குமாரராகிய இராட்சதரையும் கண்டோம்; நாங்கள் எங்கள் பார்வைக்கு வெட்டுக்கிளிகளைப்போல் இருந்தோம், அவர்கள் பார்வைக்கும் அப்படியே இருந்தோம் என்று சொல்லி, இப்படி இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே தாங்கள் சுற்றிப் பார்த்துவந்த தேசத்தைக்குறித்து துர்ச்செய்தி பரம்பச்செய்தார்கள்.**

**எண்ணாகமம் 14:11**

**கர்த்தர் மோசேயை நோக்கி: எதுவரைக்கும் இந்த ஜனங்கள் எனக்குக் கோபம் உண்டாக்குவார்கள்? தங்களுக்குள்ளே நான் காட்டின சகல அடையாளங்களையும் அவர்கள் கண்டும், எதுவரைக்கும் என்னை விசுவாசியாதிருப்பார்கள்?**

பன்னிரண்டு வேவுக்காரரின் சம்பவத்தை நாம் நன்கு அறிந்திருக்கிறோம், அவர்களில் இருவர் யோசுவா மற்றும் காலேப். யோசுவாவும் காலேபும் அதே இராட்சதர்களைப் பார்த்தார்கள், ஆனால் தேவன் யார் மற்றும் தேவன் அவர்களுக்கு என்ன வாக்குப்பண்ணியிருந்தார் என்பதன்

அடிப்படையில் அவர்களின் இறுதி மதிப்பீட்டைச் செய்தனர். காலேப், “நம்மால் மேற்கொள்ள முடியும்” என்று சொன்னான். 45 ஆண்டுகளுக்குப் பிறகு, இதே காலேப், *“ஆகையால் கர்த்தர் அந்நாளிலே சொன்ன இந்த மலைநாட்டை எனக்குத் தாரும்; ... கர்த்தர் சொன்னபடி, அவர்களைத் துரத்திவிடுவேன்”* (யோசுவா 14:12). என்று சொன்னான். அவன் தேவனுடைய வாக்குத்தத்தத்தைப் பற்றிக்கொண்டான், 45 ஆண்டுகளுக்குப் பிறகும் அவன் சொன்னதை ஒருபோதும் மாற்றவில்லை!

தேவனுடைய வார்த்தை என்பது முடிவாகவும், அறிக்கையாகவும்,முன்கூட்டியேஎழுதப்பட்டவிளைவாகவும் இருக்கிறது. தேவனுடைய வார்த்தையின்படி பேசுங்கள். ஆம், நிச்சயமாக, நாம் எதிர்கொள்ளும் இராட்சதர்கள் இருப்பார்கள், இந்த இராட்சதர்கள் அச்சுறுத்தும் வகையில் தோன்றுவார்கள். போராட யுத்தங்கள் இருக்கும். நாம் சுதந்தரிக்க வேண்டும் என்று தேவன் விரும்பும் பாதைகளில் இராட்சதர்களும் யுத்தங்களும் இல்லாமல் போவதில்லை. ஆனால் இராட்சதர்களின் முன்பாகவும், யுத்தங்களின் நடுவிலும், தேவன் யார் என்பதையும், தேவன் உங்களுக்கு என்ன வாக்குப்பண்ணியிருக்கிறார் என்பதையும் அறிவியுங்கள். தேவனால் பிறந்தவன் எவனும் உலகத்தை ஜெயிப்பதால் உங்களாலும் உலகத்தை ஜெயிக்க முடியும் என்று அறிவியுங்கள் (1 யோவான் 5:4). தேவன் எப்போதும் உங்களை வெற்றிசிறக்க செய்கிறார் என்று அறிவியுங்கள் (2 கொரிந்தியர் 2:14). தேவன் உங்களை உளையான சேற்றிலிருந்து தூக்கியெடுத்து, உங்கள் கால்களை கன்மலையின்மேல் நிறுத்தி, உங்கள் வாயில் புதுப்பாட்டைக் கொடுத்தார் என்று அறிவியுங்கள் (சங்கீதம் 40:1-4). வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடமிருந்தே உங்களுக்கு ஒத்தாசை வருகிறது என்று அறிவியுங்கள். உங்களைக் காக்கிறவர்

உறங்குவதுமில்லை, தூங்குவதுமில்லை (சங்கீதம் 121). உங்கள் தேவன் யார் என்பதையும், அவர் உங்களுக்கு என்ன வாக்குப்பண்ணியிருக்கிறார் என்பதையும் அறிவியுங்கள். இது முன்கூட்டியே எழுதப்பட்ட உங்கள் முடிவாகும்.

# 6

# வார்த்தை உங்களுக்கு அருகில் உள்ளது—அவருடைய வார்த்தையைப் பேசுங்கள்

**உபாகமம் 30:11-14**

**[11]நான் இன்று உனக்கு விதிக்கிற கட்டளை உனக்கு மறைபொருளும் அல்ல, அது உனக்குத் தூரமானதும் அல்ல.**
**[12] நாங்கள் அதைக் கேட்டு, அதின்படி செய்யும்பொருட்டு, எங்கள்நிமித்தம் வானத்துக்கு ஏறி, அதை எங்களுக்குக் கொண்டுவருகிறவன் யாரென்று நீ சொல்லத்தக்கதாக, அது வானத்திலுள்ளதும் அல்ல;**
**[13] நாங்கள் அதைக் கேட்டு, அதின்படி செய்யும்பொருட்டு, எங்கள்நிமித்தம் சமுத்திரத்தைக் கடந்து, அதைக் கொண்டுவருகிறவன் யார் என்று நீ சொல்லத்தக்கதாக, அது சமுத்திரத்திற்கு அப்புறத்திலுள்ளதும் அல்ல;**
**[14] நீ அந்த வார்த்தையின்படியே செய்யும்பொருட்டு, அது உனக்கு மிகவும் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது.**

ஜனங்கள் தம்முடைய வார்த்தையை தங்கள் வாயிலும் இருதயத்திலும் வைத்திருக்க வேண்டும் என்று தேவன் விரும்பினார். அவர்கள் வாயிலும் இருதயத்திலும் தம்முடைய வார்த்தை இருக்க வேண்டும் என்றும், அதனால் அவர்கள் அதைக் கடைப்பிடித்து அதன்படி வாழ வேண்டும் என்றும் அவர் விரும்பினார். தேவனுடைய வார்த்தை நம் இருதயங்களிலும் வாயிலும் நீங்காமல் நிலைபெற்றிருக்க வேண்டும். அவருடைய வார்த்தை நம் இருதயங்களை நிரப்ப வேண்டும். அவருடைய வார்த்தையால் நம் இருதயத்தில் விசுவாசம் பிறக்கிறது. அவருடைய வார்த்தையை நம் இருதயத்தில் விசுவாசிக்கிறோம். அவருடைய வார்த்தையும் நம்வாயில்இருக்கவேண்டும்.நாம்அதைச்சொல்கிறோம்.நாம்

அதைப் பேசுகிறோம். அவருடைய வாயின் வார்த்தைகளை நம் வாயின் வார்த்தைகளாக இருக்க அனுமதிக்கிறோம். அவருடைய வார்த்தை இரகசியமானதாகவோ அல்லது நாம் அடைய முடியாததாகவோ இல்லை. அவருடைய வார்த்தை நம்மிலும்—நம் இருதயங்களிலும் வாயிலும் இருக்கிறது. நாம் இவ்விதமாக வாழும்போது, அவருடைய வார்த்தை நம் வாழ்க்கைமுறையாக மாறுகிறது. நாம் அவருடைய வார்த்தையின்படி வாழ்கிறோம்.

அவருடைய வார்த்தை நம்மில் நிலைத்திருக்கவும், நம்மில் மாம்சமாக நம்மில் மாம்சமாக மாறவும் இதுவே தேவனின் வழி. இந்த முறையை அவர் நமக்குக் கொடுத்தார். அவருடைய வார்த்தையை நமக்குக் கிடைக்கச் செய்திருக்கிறார் என்று அவர் சொன்னார். நாம் அவருடைய வார்த்தையை நம் வாயிலும் (நம் பேச்சின் ஒரு பகுதியாக) மற்றும் நம் இருதயத்திலும் (சிந்தனை மற்றும் விசுவாசத்தின் ஒரு பகுதியாக) வைத்திருக்கும்போது, அவருடைய வார்த்தை நம் அன்றாட வாழ்க்கையின் ஒரு பகுதியாக மாறும்.

# 7

# அவருடைய வார்த்தைகளை உங்கள் வாயில் வைத்திருங்கள்

**யோசுவா 1:8**

**இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக்கொண்டிருப்பாயாக; அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்துகொள்ளுவாய்.**

தேவனுடைய மக்களை வாக்குத்தத்த தேசத்திற்கு அழைத்துச்செல்லும்மகத்தானபணியோசுவாவுக்குஇருந்தது. அவன் மோசேயின் ஸ்தானத்திலிருந்து தேவனுடைய மக்களை முன்னோக்கி வழிநடத்த வேண்டியிருந்தது. தேவன் அவனுக்கு வழங்கிய அறிவுரைகளில் ஒன்று, புஸ்தகத்தின் வார்த்தைகளை எப்போதும் அவனது பேச்சில் மற்றும் சிந்தனையின் (தியானம்) ஒரு பகுதியாக வைத்திருக்க வேண்டும். அதன் சாராம்சம் என்னவென்றால், தேவன் யோசுவாவிடம், “இந்த நியாயப்பிரமாண வார்த்தைகள் எப்போதும் உன் வாயில் இருப்பதாக. வார்த்தையைப் பேசு. வார்த்தையைத் தொடர்ந்து தியானம் செய். இதன் மூலம் வார்த்தை சொல்வதை நீ கவனமாக செய்வாய். இது உனக்கு செழிப்பையும் நல்ல வெற்றியையும் கொண்டுவரும்” என்று சொன்னார்.

காலங்கள் மாறிவிட்டன, ஆனால் தேவனுடைய வார்த்தையும் அவருடைய வார்த்தையில் உள்ள வல்லமையும் குறையவில்லை. யோசுவாவின் நாளிலும், அவனுடைய காலத்திலும், அவனுடைய வாழ்க்கையில் செய்ய வேண்டிய

காரியங்களுக்காகவும் தேவனுடைய வார்த்தை என்ன செய்ததோ, அதையே நம் நாட்களிலும், காலத்திலும், நம் ஒவ்வொருவருக்கும் இருக்கும் செயல்களிலும் தேவனுடைய வார்த்தையால் செய்ய முடியும். தேவனுடைய புஸ்தகத்தின் வார்த்தைகளை எப்போதும் நம் வாயில் இருக்க அனுமதித்து, இரவும் பகலும் நம் சிந்தனையை (தியானம்) அவற்றால் நிரப்பினால், நாம் அவருடைய வார்த்தையின்படி நடப்போம். அதன்மூலம், நம் வழியை செழிக்கச் செய்வோம், நமக்கு நியமிக்கப்பட்ட காரியங்களில் நல்ல வெற்றியைப் பெறுவோம்.

யோசுவா 1:8ல் உள்ள கொள்கையை உங்கள் வாழ்க்கையில் அப்பியாசப்படுத்துங்கள். அவருடைய புஸ்தகத்தின் வார்த்தைகள் உங்கள் வாயின் வார்த்தைகளாக இருக்கட்டும். தேவன் சொல்வதைச் சொல்லுங்கள். வேதத்தை தியானித்து அவருடைய வார்த்தைக்கு ஏற்ப சிந்தியுங்கள். அவருடைய வார்த்தைக்கு ஏற்ப வாழுங்கள். உங்கள் பணிகளில் செழிப்பையும் நல்ல வெற்றியையும் பெறுவீர்கள்.

# 8

# அவரது வாக்குத்தத்தங்கள் நிலைத்திருக்கும்—எங்கள் அறிவிப்பும் அப்படியே உள்ளது

**யோசுவா 14:10-12**

**[10] இப்போதும், இதோ, கர்த்தர் சொன்னபடியே என்னை உயிரோடே காத்தார்; இஸ்ரவேலர் வனாந்தரத்தில் சஞ்சரிக்கையில், கர்த்தர் அந்த வார்த்தையை மோசேயோடே சொல்லி இப்போது நாற்பத்தைந்து வருஷமாயிற்று; இதோ, இன்று நான் எண்பத்தைந்து வயதுள்ளவன்.**
**[11] மோசே என்னை அனுப்புகிற நாளில், எனக்கு இருந்த அந்தப் பெலன் இந்நாள்வரைக்கும் எனக்கு இருக்கிறது; யுத்தத்திற்குப் போக்கும் வரத்துமாயிருக்கிறதற்கு அப்போது எனக்கு இருந்த பெலன் இப்போதும் எனக்கு இருக்கிறது.**
**[12] ஆகையால் கர்த்தர் அந்நாளிலே சொன்ன இந்த மலைநாட்டை எனக்குத் தாரும்; அங்கே ஏனாக்கியரும், அரணிப்பான பெரிய பட்டணங்களும் உண்டென்று நீர் அந்நாளிலே கேள்விப்பட்டீரே; கர்த்தர் என்னோடிருப்பாரானால், கர்த்தர் சொன்னபடி, அவர்களைத் துரத்திவிடுவேன் என்றான்.**

45ஆண்டுகளுக்குப்பிறகு, காலேப், தனது 85வது வயதில், தேவன் தனக்கு வாக்குப்பண்ணினதைச் சொந்தமாக்க வேண்டும் என்ற ஆர்வத்தாலும் வைராக்கியத்தாலும் நிறைந்திருந்தான். போராடி மேற்கொள்வதற்கு இன்னும் சில இராட்சதர்கள் இருந்தனர், ஆனாலும் அவன் ஆயத்தமாக இருந்தான். அவன் 45 ஆண்டுகளுக்கு முன்பு செய்ததைப் போலவே, இப்போதும் தன் தேவன் மீதான விசுவாசத்தை அறிவித்தான்.

உங்கள் வாழ்க்கையில் தேவனுடைய வார்த்தையை எவ்வளவு காலம் உண்மையாக அறிவிக்கப்போகிறீர்கள்? உண்மை என்னவென்றால், தேவன் பொய் சொல்ல ஒரு

மனிதன் அல்ல. அவருடைய வார்த்தை சத்தியம். அவருடைய வார்த்தைஎன்றென்றைக்கும்நிலைத்திருக்கிறது.அவருடைய வார்த்தை ஒருபோதும் மாறாது. தேவன் தம்முடைய வார்த்தையில் உங்களைப் பற்றி வாக்குப்பண்ணினது மற்றும் அறிவித்தது உண்மையாகும். அது ஸ்தாபிக்கப்பட்டு என்றென்றும் பரலோகத்தில் நிலைத்திருக்கிறது. நமது தேவன் மிகப் பெரியவராய், இருக்கிறவராக இருக்கிறார். அவர் ஒருபோதும் மாறுவதில்லை. எனவே, நம்முடைய தேவனைப் பற்றி நாம் சொல்வதையும், அவர் வாக்குப்பண்ணினதையும் நாம் ஒருபோதும் மாற்றுவதில்லை. நமது தேவன் யார் என்று நாம் தொடர்ந்து கூறி வருகிறோம். அவர் இன்னும் நம் இரட்சகர், குணப்படுத்துபவர், மீட்பர், விடுவிப்பவர், வழங்குபவர், வழி-செய்பவர், அற்புதம் செய்பவர். அவர் இன்னமும் நமது பரலோக பிதாவாய் இருக்கிறார். நம் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் அவர் நமக்காய் வாக்குப்பண்ணியிருப்பது நன்மைகேதுவாகவும், உண்மையாகவும் இருக்கிறது என்று நாம் அறிக்கையிடுகிறோம். வாழ்க்கையின் எல்லா காலங்களிலும் அது நன்மையாகவும், உண்மையாகவும் இருக்கும். எனவே, அவர் வாக்குப்பண்ணினதைப் பற்றிக்கொள்கிறோம்.

காலேப்பைப் போலவே, தேவன் வாக்குப்பண்ணினதில் நீங்கள் காலடி வைக்க (சுதந்தரிக்க) சிறிது காலமாகலாம். நினைவில் கொள்ளுங்கள், அவருடைய வாக்குத்தத்தங்கள் என்றென்றும் நிலைத்திருக்கும். அவை காலத்தால் மாறுவதில்லை. அவருடைய வாக்குத்தத்தங்களைக் குறித்த உங்கள் அறிவிப்பைத் தொடருங்கள்.

# 9

# தேவனுடனான உங்கள் உடன்படிக்கையை அறிவியுங்கள்

**1 சாமுவேல் 17:26,36,45**

**26அப்பொழுது தாவீது தன்னண்டையிலே நிற்கிறவர்களைப் பார்த்து, இந்தப் பெலிஸ்தனைக் கொன்று இஸ்ரவேலுக்கு நேரிட்ட நிந்தையை நீக்குகிறவனுக்கு என்ன செய்யப்படும்; ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளை நிந்திக்கிறதற்கு விருத்தசேதனம் இல்லாத இந்தப் பெலிஸ்தன் எம்மாத்திரம் என்றான்.**

**36அந்தச் சிங்கத்தையும் அந்தக் கரடியையும் உம்முடைய அடியானாகிய நான் கொன்றேன்; விருத்தசேதனமில்லாத இந்தப் பெலிஸ்தனும் அவைகளில் ஒன்றைப் போல இருப்பான்; அவன் ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளை நிந்தித்தானே என்றான்.**

**45அதற்குத் தாவீது: பெலிஸ்தனை நோக்கி: நீ பட்டயத்தோடும், ஈட்டியோடும், கேடகத்தோடும் என்னிடத்தில் வருகிறாய்; நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்தினாலே உன்னிடத்தில் வருகிறேன்.**

தாவீது கோலியாத்தை எதிர்கொள்ளத் தயாரானபோது, தாவீது அறிந்திருந்த ஒரு முக்கியமான உண்மை இருந்தது. தாவீது விருத்தசேதனமுள்ளவன், அதாவது தேவனுடன் உடன்படிக்கை செய்தவன். அவன் கோலியாத்தை "இந்த விருத்தசேதனமில்லாத பெலிஸ்தியன்" என்று குறிப்பிட்டான், அதாவது தேவனுடன் உடன்படிக்கையில் இல்லாத மனிதன். தாவீது தேவனுடன் உடன்படிக்கையில் இருந்ததால், ஜீவனுள்ள தேவன் தன் பக்கம் இருப்பதை அவன் அறிந்திருந்தான். வானோர் மற்றும் பூலோகத்தாரின் சேனைகளின் தேவனாகிய, சேனைகளின் கர்த்தர் தாவீதுடன் இருந்தார். இது எல்லா வித்தியாசத்தையும் ஏற்படுத்தியது.

தாவீது கோலியாத்தை சந்திக்க ஓடியபோது, தேவனுடன் செய்த உடன்படிக்கையின் அடிப்படையில்தான் அவ்வாறு செய்தான். தேவன் யார், தேவன் என்ன செய்தார், தன் மூலமாக தேவன் என்ன செய்வார் என்பதை தாவீது தைரியமாக அறிவித்தான். தாவீது தேவனுடன் உடன்படிக்கையில் இருந்ததால், அவனால் தைரியமாகப் பேச முடிந்தது.

நீங்கள் எதிர்கொள்ளும் இராட்சதர்கள் யார்? தேவனுக்கு முன்பாக எந்தவொரு இராட்சதனும் பெரியவனல்ல. சவுலின் படையிலிருந்த நன்கு பயிற்சி பெற்ற வீரர்கள், அந்த இராட்சதனை தங்களுடன் ஒப்பிட்டுக் கொண்டனர். அதனால், அவர்கள் அச்சமடைந்தனர். அவர்கள் போரில் ஈடுபடவில்லை. ஆனால் தாவீது அந்த இராட்சதனைப் பார்த்து, அந்த இராட்சதன் சேனைகளின் கர்த்தருக்கு இணையானவன் இல்லை என்பதை உணர்ந்தான். நீங்கள் எதிர்கொள்ளும் இராட்சதர்கள் எதுவாக இருந்தாலும்—நோய், நிதிப் பிரச்சனைகள், கடன், உங்கள் குடும்ப பிரச்சனை, பணியிட பிரச்சனை, சட்ட போராட்டங்கள், எதுவாக இருந்தாலும்—நினைவில் கொள்ளுங்கள், உங்கள் இராட்சதர்கள் தேவனுக்கு இணையானவர்கள் அல்ல. நீங்கள் தேவனுடன் உடன்படிக்கையில் உள்ளீர்கள். தேவன் உங்கள் பக்கம் இருக்கிறார். உங்கள் இராட்சதர்களை ஜெயிப்பீர்கள் என்று அறிவியுங்கள். உங்கள் இராட்சதர்கள் தோற்கடிக்கப்பட்டனர் என்றும், நீங்கள் வெற்றிசிறந்தீர்கள் என்றும் அறிவியுங்கள். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வெற்றியை அறிவியுங்கள். தேவன் உங்கள் பட்சத்தில் இருக்கிறார், அவர் உங்களுக்காக போராடுகிறார்.

# 10

# தேவனுக்கு முன்பாக ஏற்றுக்கொள்ளக்கூடிய வார்த்தைகளைப் பேசுங்கள்

**சங்கீதம் 19:14**

**என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக.**

சங்கீதம் 19-இல், தேவனுடைய மகத்துவத்தையும் அவருடைய வார்த்தையின் தூய்மையையும் அறிவித்த பிறகு, தாவீது தனது வாயின் வார்த்தைகள் தேவனுடைய பார்வையில் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று ஜெபிக்கிறான். எபிரேய மொழியில் "ஏற்றுக்கொள்ளக்கூடிய" என்ற வார்த்தைக்கு "மகிழ்வூட்டுகிற, களிப்பூட்டுகிற, விரும்பப்படத்தக்க" என்றும் பொருள்படும்.

நாம் பேசும் வார்த்தைகளை நாம் தேர்ந்தெடுக்கலாம். தேவனுடைய பார்வையில் ஏற்றுக்கொள்ளக்கூடிய, மகிழ்வூட்டுகிற மற்றும் களிப்பூட்டுகிற வார்த்தைகளைப் பேச நாம் தேர்ந்தெடுக்கலாம். நம்முடைய வார்த்தைகள் தூய்மையான, பரிபூரணமான, சரியான தேவனுடைய வார்த்தையுடன் இணைக்கப்படும்போது, நம்முடைய வார்த்தைகள் நிச்சயமாக தேவனுடைய பார்வையில் ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவும், மகிழ்வூட்டுகிறதாகவும், களிப்பூட்டுகிறதாகவும் இருக்கும். அவருடைய மகிமையைப் பறைசாற்றும் வார்த்தைகளை நாம் பேசும்போது, நம்முடைய வார்த்தைகள் அவருடைய பார்வையில் பிரியமாயிருக்கும். நம் தேவன் என்ன செய்ய முடியும் என்பதைப் பற்றி

நாம் பேசும்போது, நம் வார்த்தைகள் அவருடைய பார்வையில் மகிழ்ச்சிகரமானதாக இருக்கின்றது. நம் தேவனுடைய அதிசயமான இயல்புகளாகிய, அவருடைய அன்பு, அவருடைய இரக்கங்கள் மற்றும் அவருடைய மனதுருக்கங்கள் ஆகியவற்றைப் பற்றி நாம் பேசும்போது, அவருடைய பார்வையில் நம் வார்த்தைகள் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

விசுவாசம் தேவனைப் பிரியப்படுத்துகிறது என்பதை எபிரெயர் 11:6 நமக்குப் போதிக்கிறது. விசுவாச வார்த்தைகளைப் பேசுங்கள். தேவன் யார், அவர் தமது மக்களுக்கு என்ன செய்கிறார் என்பதில் உங்கள் விசுவாசத்தை வெளிப்படுத்தும் வார்த்தைகளைப் பேசுங்கள். தேவன், அவருடைய வார்த்தை மற்றும் உங்கள் வாழ்க்கையில் செயல்படும் அவருடைய வல்லமை ஆகியவற்றில் உங்கள் விசுவாசத்தை அறிவிக்கும் வார்த்தைகளைப் பேசுங்கள். விசுவாசம் தேவனைப் பிரியப்படுத்துகிறது. விசுவாச வார்த்தைகள் தேவனுக்கு ஏற்றதாகவும், மகிழ்வூட்டுகிறதாகவும் மற்றும் களிப்பூட்டுகிறதாகவும் இருக்கிறது.

ஒவ்வொரு சூழ்நிலையிலும், தேவனுடைய பார்வையில் ஏற்றுக்கொள்ளக்கூடிய, மகிழ்வூட்டுகிற மற்றும் களிப்பூட்டுகிற வார்த்தைகளைப் பேசுங்கள். விசுவாசத்தின் இருதயத்திலிருந்து விசுவாச வார்த்தைகளைப் பேசுங்கள்.

# 11

# ஒவ்வொரு சூழ்நிலையிலும் தேவன் உங்களுக்கு யாராக இருக்கிறார் என்பதை அறிவியுங்கள்

**சங்கீதம் 27:1-3**

**1 கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர்,**
**யாருக்குப் பயப்படுவேன்?**
**கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர்,**
**யாருக்கு அஞ்சுவேன்?**
**2 என் சத்துருக்களும்**
**என் பகைஞருமாகிய பொல்லாதவர்கள்**
**என் மாம்சத்தைப் பட்சிக்க,**
**என்னை நெருக்குகையில்**
**அவர்களே இடறிவிழுந்தார்கள்.**
**3 எனக்கு விரோதமாக ஒரு பாளயமிறங்கினாலும்,**
**என் இருதயம் பயப்படாது;**
**என்மேல் யுத்தம் எழும்பினாலும்,**
**இதிலே நான் நம்பிக்கையாயிருப்பேன்.**

கடினமான சூழ்நிலைகளில் தாவீது என்ன சொல்கிறான் என்பதைக் கவனியுங்கள். சத்துருக்களும் விரோதிகளும் இருப்பதை அவன் உணர்கிறான். எனினும், தேவன் அவனுக்கு யார் என்பதை அவன் அறிவிக்கிறான்—கர்த்தர் என் வெளிச்சம், என் இரட்சிப்பு, என் ஜீவனின் பெலன்! மேலும் தேவன் தனக்கு யாராக இருக்கிறார் என்பதை அறிந்து வைத்திருப்பதாலேயே, “யாருக்கு நான் பயப்படுவேன்?”, “யாருக்கு நான் அஞ்சுவேன்?”, “என் இருதயம் பயப்படாது”, “நான் நம்பிக்கையாய் இருப்பேன்” என்ற தைரியமான பிரகடனைகளை தாவீதால் கூற முடிந்தது. தேவன் தன்னுடன் இருப்பதால் சத்துருக்களின்

தோல்வியை அவன் அறிவித்து அறிக்கையிடுகிறான்.

தாவீதின் முன்மாதிரியைப் பின்பற்றுவது சரியாக இருக்குமா? நிச்சயமாக, சரியாக இருக்கும். ஒவ்வொரு சூழ்நிலையிலும், தேவன் நமக்கு யாராக இருக்கிறார் என்பதை அறிந்து தைரியமாக நிற்க வேண்டும். நாமும், “கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர்; நான் யாருக்கு பயப்படுவேன்? கர்த்தர் என் வாழ்வின் பெலனாய் இருக்கிறார்; நான் யாருக்கு அஞ்சுவேன்?” என்று அறிவிக்கலாம். துன்பத்தின் மத்தியில் தேவன் நம்மை விடுவிப்பவர் என்று அறிவிக்கலாம். நோய்களுக்கு மத்தியில், தேவன் நம்மைக் குணப்படுத்துபவர் என்று அறிவிக்கலாம். தேவையின் மத்தியில், தேவன் நமக்கு அருளுவார் என்று அறிவிக்கலாம். நம்பிக்கையற்ற சூழ்நிலைகளுக்கு மத்தியில், தேவன் நம் புலம்பலை ஆனந்தக் களிப்பாக மாற்றுகிறார் என்று அறிவிக்கலாம். மாலையில் அழுகை என்றாலும், காலையில் மகிழ்ச்சி வரும் என்று நாம் அறிவிக்கலாம்.

நாம் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை நாம் மறுக்கிறோம் என்று அல்ல. சத்துருக்களும் எதிர்ப்பவர்களும் இருப்பதை நாம் மறுக்கிறோம் என்றும் அல்ல. ஆனால் தேவன் நமக்கு யாராக இருக்கிறார் என்பதையும், அவரில் நமக்கு என்ன இருக்கிறது என்பதையும், நாம் என்ன எதிர்கொள்கிறோம் என்ற போதிலும் அவர் மூலமாய் நமக்கு கிடைக்கும் நம்பிக்கையையும் நாம் அறிவிக்கிறோம். ஒவ்வொரு சூழ்நிலையிலும், தேவன் உங்களுக்கு யாராக இருக்கிறார் என்பதை நீங்கள் அறிவியுங்கள். ஒவ்வொரு சூழ்நிலையிலும், அவரிடம் உங்களுக்கு என்ன இருக்கிறது என்பதை அறிவியுங்கள். ஒவ்வொரு சூழ்நிலையிலும், அவரால் உங்களுக்கு கிடைத்த தைரியத்தையும், நம்பிக்கையையும், மகிழ்ச்சியையும், வெற்றியையும், ஜெயத்தையும் அறிவியுங்கள். தாவீது அப்படியே செய்தான். உங்களாலும் முடியும்!

# 12

# கர்த்தரின் சத்தத்திற்கு இயற்கை உலகம் பதிலளிக்கிறது

**சங்கீதம் 29:3-9**

**3கர்த்தருடைய சத்தம் தண்ணீர்களின்மேல் தொனிக்கிறது; மகிமையுள்ள தேவன் முழங்குகிறார்;**
**கர்த்தர் திரளான தண்ணீர்களின்மேல் இருக்கிறார்,**
**4கர்த்தருடைய சத்தம் வல்லமையுள்ளது;**
**கர்த்தருடைய சத்தம் மகத்துவமுள்ளது.**
**5கர்த்தருடைய சத்தம் கேதுரு மரங்களை முறிக்கிறது;**
**கர்த்தர் லீபனோனின் கேதுருமரங்களை முறிக்கிறார்.**
**6அவைகளைக் கன்றுக்குட்டிகளைப் போலவும்,**
**லீபனோனையும் சீரியோனையும் காண்டாமிருகக் குட்டிகளைப்போலவும் துள்ளப்பண்ணுகிறார்.**
**7கர்த்தருடைய சத்தம் அக்கினி ஜுவாலைகளைப் பிளக்கும்.**
**8கர்த்தருடைய சத்தம் வனாந்தரத்தை அதிரப்பண்ணும்;**
**கர்த்தர் காதேஸ் வனாந்தரத்தை அதிரப்பண்ணுகிறார்.**
**9கர்த்தருடைய சத்தம் பெண்மான்களை ஈனும்படி செய்து, காடுகளை வெளியாக்கும்;**
**அவருடைய ஆலயத்திலுள்ள யாவரும் அவருடைய மகிமையைப் பிரஸ்தாபிக்கிறார்கள்.**

இந்த சங்கீதத்தில், தேவனின் மகத்துவத்தை அறிவிப்பதன் மூலமாக, தாவீது கர்த்தருடைய சத்தத்தின் மகத்துவத்தையும் வல்லமையையும் அறிவிக்கிறான். கர்த்தருடைய வார்த்தையின் மூலமாக கர்த்தருடைய சத்தம் வெளியாகிறது. தேவன் தாம் பேசும் வார்த்தைகளின் மூலம் தம்முடைய சத்தத்தை வெளிப்படுத்துகிறார். இந்த இயற்கை உலகில் உள்ள அனைத்தும் கர்த்தருடைய சத்தத்திற்கு, அதாவது கர்த்தருடைய வார்த்தைக்குப் பதிலளிக்கிறது என்பதை இந்தப் பகுதி மீண்டும் நமக்கு வெளிப்படுத்துகிறது.

தண்ணீர்களின்மேல் நகரும் தேவனுடைய வார்த்தை (சத்தம்) என்பது தேவன் தண்ணீர்களின் மேல் நகர்கிறார் என்பதாகும். கர்த்தருடைய வார்த்தை (சத்தம்) என்பது அவருடைய வல்லமை மற்றும் மகத்துவத்தின் வெளிப்பாடாகும். உயிருள்ள மற்றும் உயிரற்ற படைப்புகள் அனைத்தும் கர்த்தருடைய வார்த்தைக்குப் (சத்தத்திற்கு) பதிலளிக்கிறது.

பரிசுத்த ஆவியானவர் மக்கள் மீது அசைவாடினபோது, கர்த்தருடைய சத்தம் மனிதர்களின் சத்தம் மூலமாக வெளியிடப்பட்ட காலங்கள் வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலால் அவர்கள் பேசினபோது கர்த்தருடைய வார்த்தை (சத்தம்) அவர்கள் மூலமாக வெளிப்பட்டது. கர்த்தருடைய வார்த்தை (சத்தம்) அவர்களுக்குள் இருந்ததாக அவர்களைக் குறித்து சொல்லப்பட்டது. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தின் கீழ் கர்த்தருடைய சத்தம் (வார்த்தை) மனுஷர்களின் சத்தம் (வார்த்தை) மூலம் வெளப்பட்டபோது, ஆச்சரியமான காரியங்கள் நடந்தது. கன்மலையிலிருந்து தண்ணீர் பாய்ந்து வந்தது, கடல்களும் ஆறுகளும் இரண்டாகப் பிரிந்தன, சூரியன் அசையாமல் நின்றது, சூரியன் பத்துப் பாகை பின்னோக்கிச் சென்றது, எண்ணெயும் மாவும் பெருகியது, ஒரு கோடாரி தண்ணீரில் மிதந்தது, இன்னும் பல அதிசயங்கள் நிகழ்ந்தன.

விசுவாசிகளாக, விசுவாசத்தினால் கர்த்தருடைய வார்த்தையைப் பேசும் பாக்கியம் நமக்கு இருக்கிறது. தேவன் ஏற்கனவே பேசியதை நாம் எடுத்துக்கொள்கிறோம், அந்த வார்த்தையை விசுவாசிக்கிறோம், இன்று பேசுகிறோம். கடந்த காலங்களைப் போலவே, தேவனுடைய ஆவியானவர் நம்மீது அசைவாடும் நேரங்களும் உள்ளன, அதனால் அவர் நம்மைப் பேசத் தூண்டும் வார்த்தையைப் பேசுகிறோம். நாம் அந்த வார்த்தையைப் பேசும்போது, கர்த்தருடைய சத்தம் (வார்த்தை) நமது சத்தத்தின்

(வார்த்தைகள்) மூலம் வெளிப்படுகிறது. இயற்கை உலகம் கர்த்தருடைய சத்தத்திற்கு பதிலளிக்கிறது. இரண்டையும் செய்யக் கற்றுக்கொள்ளுங்கள். உங்கள் இருதயத்தில் விசுவாசத்துடன் தேவனுடைய வார்த்தையைப் பேசுங்கள். பரிசுத்த ஆவியானவர் ஏவுகிறபடியே கர்த்தருடைய சத்தத்தைப் பேசுங்கள்.

# 13

# இயற்கை உலகம் அவருடைய வார்த்தையால் வடிவமைக்கப்பட்டு உருவானது

**சங்கீதம் 33:6,9**

**[6]கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டது. [9]அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும்.**

தேவன் தம்முடைய வார்த்தையால் சகலத்தையும் சிருஷ்டித்தார் என்பது வேதாகமம் முழுவதிலும் நமக்கு முன்வைக்கப்பட்ட உண்மைகளில் ஒன்றாகும். அவர் பேசினார். அவர் கட்டளையிட்டார். அவர் வாயின் சுவாசத்தை வெளியிட்டார். வார்த்தைகளை வெளிப்படுத்தினார். அவர் இயற்கையாக காணக்கூடிய மண்டலம் உருவாகும்படிக்குப் பேசினார். இதை நாம் புரிந்துகொள்வது அவசியம்.

இயற்கை, காணக்கூடிய மற்றும் பொருள் உலகில் உள்ள அனைத்தும் தேவனுடைய வார்த்தைக்கு அடிபணிகின்றன.

தேவனுடைய வார்த்தை இன்னமும் உருவாக்குகிறது. தேவனுடைய வார்த்தை நம் "உலகில்" (நமது வாழ்க்கை, நமது அன்றாட வாழ்க்கை மண்டலம்) இல்லாததைக் கொண்டுவர முடியும். தேவனுடைய வார்த்தையின் வல்லமையை நம் உலகத்தில் எவ்வாறு வெளிப்படுத்துவது என்பதை நாம் கற்றுக்கொண்டால், தேவன் வாக்குப்பண்ணினதைப் பெறலாம்.

தேவனுடைய வார்த்தை மாற்றுகிறது மற்றும் உருமாற்றுகிறது. தேவனுடைய வார்த்தையால் நம் உலகில்

உள்ள விஷயங்களை மாற்றவும் மாறச் செய்யவும் முடியும் (நமது வாழ்க்கை, நமது அன்றாட வாழ்க்கை மண்டலம்), மேலும் தேவன் நமக்கு வாக்குப்பண்ணியவைகளுடன் அவற்றை சீரமைக்க முடியும். ஆனால் தேவனுடைய வார்த்தையின் வல்லமையை நம் வாழ்வில் வெளிப்படுத்த நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

தேவனுடைய வார்த்தையின் வல்லமையை நம் வாழ்வில் வெளிப்படுத்துவதற்கு வேதாகமம் முழுவதிலும் வைக்கப்பட்டுள்ள முக்கியத் திறவுகோல்களில் ஒன்று, நாம் அவருடைய வார்த்தையை விசுவாசத்தால் பேசுவதாகும். நாம் அவருடைய வார்த்தையை விசுவாசித்து, அவருடைய வார்த்தையை நம் வாழ்வில் பேசும்போது—நமது நிலைமைகள், நமது சூழ்நிலைகள், நம் மனம், சரீரங்கள், நிதி, குடும்பம், பணியிடங்கள் போன்ற எல்லாவற்றிலும்—அவருடைய வார்த்தையின் வல்லமை நம் உலகில் வெளிப்படுகிறது. நம் உலகில் உள்ள அனைத்தும் அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிகிறது மற்றும் அவருடைய வார்த்தைக்கு இணங்க வைக்கப்படுகிறது. உங்கள் உலகம் அவருடைய வார்த்தையால் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்படுவதாக.

# 14

# உங்கள் நாவு உங்களுக்கு நல்ல நாட்களையும் நீண்ட ஆயுளையும் தரக்கூடியது

**சங்கீதம் 34:12-14**
**12 நன்மையைக் காணும்படி,**
**ஜீவனை விரும்பி,**
**நீடித்த நாட்களை அபேட்சிக்கிற மனுஷன் யார்?**
**13 உன் நாவைப் பொல்லாப்புக்கும்,**
**உன் உதடுகளைக் கபட்டுவசனிப்புக்கும்**
**விலக்கிக் காத்துக்கொள்.**
**14 தீமையை விட்டு விலகி,**
**நன்மை செய்;**
**சமாதானத்தைத் தேடி,**
**அதைத் தொடர்ந்துகொள்.**

நம்முடைய வார்த்தைகள் நம் வாழ்க்கையின் நீளத்தையும் தரத்தையும் பாதிக்கின்றன என்பதை வேதவாக்கியங்கள் இங்கே நமக்குக் கற்பிக்கிறது. நல்ல நாட்களையும் நீண்ட ஆயுளையும் அனுபவிக்க, இந்த பத்தியிலே, தாவீது சுட்டிக்காட்டும் முதல் விஷயம், பொல்லாப்பானதும், சீர்கேடு நிறைந்ததும், அவதூறு மற்றும் கொடூரம் நிறைந்ததுமான விஷயங்களை பேசுவதிலிருந்து நம்மை காத்துக்கொள்ள வேண்டும். பொய் பேசுவதையும் வஞ்சக வார்த்தையையும் தவிர்க்க வேண்டும். நாவை அடக்க வேண்டும். சரியான வார்த்தைகளை பேச வேண்டும். சத்திய வார்த்தைகளை பேச வேண்டும். ஜீவனுக்கேதுவான வார்த்தைகளைப் பேச வேண்டும். அதுவே முதன்மையானது. மேலும் தீமை செய்வதிலிருந்து விலக வேண்டும். மாறாக, நன்மை செய்து,

சமாதானத்தைப் பின்தொடர வேண்டும்.

நம் வார்த்தைகள் நம் உலகத்தை பாதிக்கின்றன. அவை நன்மை, ஜீவன் மற்றும் ஆசீர்வாதத்தை ஏற்படுத்தும் அல்லது அவை, தீமை, மரணம் மற்றும் சாபத்தை ஏற்படுத்தும். நமது வார்த்தைகள் மிகவும் முக்கியமற்றதாகத் தோன்றினாலும், பல வழிகளில், அவை நம் வாழ்க்கை அனுபவத்தின் கட்டுமான தொகுதிகளாக அமைகின்றன. அவை நாம் விதைக்கும் விதைகள் போன்றது, அது ஒரு நாள் நம் வாழ்வில் தம் சொந்த தன்மைக்கேற்ப விளைந்து பலனைத் தரும். நம் வார்த்தைகள் நம் வாழ்வில் முக்கிய பங்கு வகிக்கும்படியாக தேவன் அதை வடிவமைத்திருக்கிறார். உங்கள் வார்த்தைகளை சாதாரணமாக எடுத்துக்கொள்ளாதீர்கள். அவைகளை கவனமாகப் பேசுங்கள். உங்கள் வார்த்தைகளை கவனமாகத் தேர்ந்தெடுங்கள், ஏனென்றால் உங்கள் வாழ்க்கை அந்த வார்த்தைகளால் வடிவமைக்கப்படும்.

நாம் தேவனுடைய வார்த்தையை அவ்வாறே பேசினால், நம்முடைய வார்த்தைகள் எவ்வளவு வல்லமை வாய்ந்ததாக இருக்கும்! நம் வாழ்வில் நாம் பேசுவதும் அறிவிப்பதும் தேவனுடைய வார்த்தையாகவே இருந்தால் நம் வாழ்க்கை எவ்வளவு ஆசீர்வதிக்கப்பட்டதாக இருக்கும்! தேவனுடைய சொந்த வார்த்தையிலிருந்து பிறப்பிக்கப்படுகிற வார்த்தைகள், நமது வாழ்க்கையைக் கட்டமைக்கிற கட்டுமானத் தொகுதிகளாக மாற அனுமதியுங்கள். தேவனுடைய சொந்த வார்த்தையிலிருந்து பிறந்த வார்த்தைகள் நம் வாழ்வில் விதைக்கப்படும் விதைகளாக மாறட்டும், அதன் பலன் பின்வரும் நாட்களில் நமக்குத் தரப்படும். உங்கள் நாவு உங்களுக்கு நல்ல நாட்களையும் நீண்ட ஆயுளையும் கொடுக்கட்டும். அவருடைய வார்த்தையைப் பேசுங்கள்.

# 15

# அவருடைய வார்த்தையை அறிவிப்பது என்பது அவருடைய உடன்படிக்கையை உரிமை கோருவதாகும்

**சங்கீதம் 50:14-17**

**14 நீ தேவனுக்கு ஸ்தோத்திரபலியிட்டு,**
**உன்னதமானவருக்கு உன் பொருத்தனைகளைச் செலுத்தி;**
**15 ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு;**
**நான் உன்னை விடுவிப்பேன்,**
**நீ என்னை மகிமைப்படுத்துவாய்.**
**16 தேவன் துன்மார்க்கனை நோக்கி:**
**நீ என் பிரமாணங்களை எடுத்துரைக்கவும்,**
**என் உடன்படிக்கையை உன் வாயினால் சொல்லவும்,**
**உனக்கு என்ன நியாயமுண்டு.**
**17 சிட்சையை நீ பகைத்து,**
**என் வார்த்தைகளை உனக்குப் பின்னாக எறிந்துபோடுகிறாய்.**

உங்கள் வாயால் தேவனுடைய வார்த்தையைப் பேசுவது என்பது அவருடைய உடன்படிக்கையை உங்கள் வாயினால் அறிக்கையிடுவதாகும்,அதாவது,அவருடையஉடன்படிக்கை அல்லது வாக்குத்தத்தங்களை வேண்டிக்கொள்வதும் கோருவதுமாகும். தேவபக்தியற்றவர்களை தேவன் கடிந்துகொள்கிறார், ஏனென்றால் அவர்கள் அவருடைய வார்த்தையை வெறுக்கிறார்கள். அவர்கள் தேவனுடைய வார்த்தையைக் கனம்பண்ணுவதில்லை. அவர்கள் அவருடைய வார்த்தையை மதிப்பற்றதாக ஒதுக்கித்

தள்ளுகிறார்கள். எனவே, தேவனுடைய வார்த்தையைப் புறக்கணிக்கும் இவர்களுக்கு, தங்கள் வாயால் அவருடைய வார்த்தையைப் பேசுவதற்கும் அவருடைய உடன்படிக்கையின் பலன்களைப் பெறுவதற்கும் எந்த உரிமையும் இல்லை.

எனினும், அவருடைய வார்த்தையை விசுவாசித்து கனம்பண்ணுகிற நாம், அவருடைய வார்த்தையை அறிவிக்கும்போது, நாம் அவருடன் செய்துள்ள உடன்படிக்கையை உரிமை கோருவதாகக் தேவன் பார்க்கிறார். அவருடைய வார்த்தையை நாம் அறிக்கையிடுவதன் மூலம், அவருடைய உடன்படிக்கையை நம் வாயினால் சொல்லி, தேவன் நம்முடன் செய்த உடன்படிக்கையினால் வரும் நன்மைகளை நாம் உரிமை கோருகிறோம்.

யெகோவா தேவன், நித்தியமானவரும், தன்னிருப்பானவரும்,உடன்படிக்கையைக்காத்துக்கொண்டு வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுகிற மாறாத தேவனாக இருக்கிறார். அவர் தமது உடன்படிக்கையை ஒருபோதும் மீறுவதில்லை அல்லது தாம் பேசிய வார்த்தைகளை மாற்றுவதுமில்லை. அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் சர்வவல்லமையுள்ள தேவனுடன் நாம் இரத்தத்தினாலாகிய உடன்படிக்கையில் இணைக்கப்பட்டிருக்கிறோம். அவர் நம்முடன் செய்திருக்கிற இரத்தத்தினாலாகிய உடன்படிக்கையின் மூலம், அவர் தம்மை முழுமையாகவும், அவர் என்னவெல்லாம் ஆகயிருக்கிறாரோ, சகலத்தையும் நமக்குக் கிடைக்கச் செய்தார்.இதில்சிலவற்றை,அவருடையஉடன்படிக்கையின் நாமங்கள் மூலம் நாம் புரிந்துகொள்கிறோம். உங்கள் உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களை நீங்கள் அறிந்துகொள்ளுங்கள். எந்த சூழ்நிலையிலும், அவருடைய

வார்த்தையை அறிவியுங்கள். உங்கள் உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களைப் பற்றிக்கொண்டு அவற்றைப் பெற்று அனுபவியுங்கள்.

# 16
# கர்த்தரைப் பற்றி நான் சொல்வேன்

**சங்கீதம் 91:1,2**

**[1]உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வவல்லவருடைய நிழலில் தங்குவான்.**

**[2]நான் கர்த்தரை நோக்கி: நீர் என் அடைக்கலம், என் கோட்டை, என் தேவன், நான் நம்பியிருக்கிறவர் என்று சொல்லுவேன்.**

கர்த்தரைக் குறித்து என்ன சொல்வீர்கள்? சங்கீதக்காரன் கர்த்தரைக் குறித்து, தேவன் தன்னுடைய அடைக்கலமும் கோட்டையுமாய் இருக்கிறார் என்று சொன்னான். அவன் தனது விசுவாசத்தையும், நம்பிக்கையையும், தன்னம்பிக்கையையும் அவர் மீது வைத்து, தன்னைப் பாதுகாக்கும்படியாக கர்த்தரை சார்ந்து இருந்தான்.

கர்த்தரைக் குறித்து நீங்கள் என்ன சொல்வீர்கள்?

- நான் கர்த்தரைக் குறித்துச் சொல்வேன். அவர் என் இரட்சகர். என்னுடைய எல்லா பாவங்களிலிருந்தும் அவர் என்னை இரட்சித்தார். அவர் என் வாழ்வின் மீது இருந்த பாவத்தின் வல்லமையை உடைத்துவிட்டார். நான் பாவத்தின் பிடியிலிருந்து விடுபட்டேன்.
- நான் கர்த்தரைக் குறித்துச் சொல்வேன். அவர் என் பரலோகப் பிதா. அவர் என்னைத் தமது சொந்தமாகக் கவனித்துக்கொள்கிறார். அவருடைய அன்பு ஒருபோதும் தணிந்துபோவதில்லை, ஒருபோதும் குறைந்துபோவதுமில்லை. நான் அவருடைய சொந்தமாக ஏற்றுக்கொள்ளப்பட்டேன்.
- நான் கர்த்தரைக் குறித்துச் சொல்வேன். அவர் என் பரிகாரியும், என்னை விடுவிப்பவருமாய்

இருக்கிறார். என்னுடைய எல்லா நோய்களையும் அவர் குணப்படுத்துகிறார். என்னுடைய எல்லா இக்கட்டுகளிலிருந்தும் துன்பங்களிலிருந்தும் அவர் என்னை விடுவிக்கிறார்.

- நான் கர்த்தரைக் குறித்துச் சொல்வேன். அவர் என் மீட்பர். அவர் என்னை அந்தகார வல்லமைகளிலிருந்து விடுவித்து, தம்முடைய சொந்த ராஜ்யத்திற்குள் என்னை மாற்றினார். அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் நான் மீட்கப்பட்டேன்!
- நான் கர்த்தரைக் குறித்துச் சொல்வேன். அவர் என் நீதிபரர். குற்ற உணர்வு, அவமானம், தாழ்வுமனப்பான்மை, ஆக்கினைத்தீர்ப்பு போன்ற எதுவுமின்றி அவருடைய நீதியை அணிந்துகொண்டு இருக்கிறேன். நான் பரிசுத்தமாயும், அவருக்கு முன்பாகக் குற்றமில்லாமலும் இருக்கிறேன்.
- நான் கர்த்தரைக் குறித்துச் சொல்வேன். அவர் என் தேவைகளை சந்திப்பவர். அவர் தமது மகிமையின் ஐசுவரியத்தின்படி என் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்கிறார். அவர் என்னிடமிருந்து எந்த நன்மையையும் விலக்கி வைப்பதில்லை, சகல கிருபையையும் எனக்குப் பெருகச் செய்கிறார்.
- நான் கர்த்தரைக் குறித்துச் சொல்வேன். அவர் பரிசுத்தபடுத்துபவர், என்னை தமக்கென்று பிரித்தெடுத்தவர். அவர் பரிசுத்தமாக இருப்பதுபோல நானும் பரிசுத்தமாய் இருக்கிறேன். தம்முடைய சொந்த மக்களின் ஓர் அங்கமாய் இருக்கும்படி அவர் என்னை சுத்திகரித்தார்.
- நான் கர்த்தரைக் குறித்துச் சொல்வேன். அவர் என்னை நடத்துகிறவரும், என் தேவைகளை சந்திக்கிறவரும், என்னைப் பாதுகாக்கிறவரும், என்னை வழிநடத்துகிறவரும், என்னை மீட்டுக்கொள்பவருமான

மேய்ப்பராய் இருக்கிறார். என் சத்துருக்கள் முன்பாக அவர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தம் செய்கிறார்!

- நான் கர்த்தரைக் குறித்துச் சொல்வேன். அவர் என்னை வழிநடத்தி, என் நடைகளை செவ்வைபடுத்துகிற என் ஆலோனைக் கர்த்தர். என் நடைகள் கர்த்தரால் ஒழுங்குபடுத்தப்படுகிறது, நான் விழுந்தாலும், அவர் என்னைத் தாங்குகிறார்.
- நான் கர்த்தரைக் குறித்துச் சொல்வேன். அவர் என் சகாயர். வானத்தையும் பூமியையும் உண்டாக்கினவரிடமிருந்து எனக்கு ஒத்தாசை வருகிறது. அவர் என்னை ஒருபோதும் தாழ்ச்சியடைய விடுவதில்லை.
- நான் கர்த்தரைக் குறித்துச் சொல்வேன். அவர் என் நீதியுள்ள நியாயாதிபதி, என் வழக்கை விசாரிப்பவர். என் காரியங்களை நான் அவர் முன் வைக்கிறேன். நான் யாருக்கும் தீமைக்குத் தீமை செய்வதில்லை. நான் தீமையை நன்மையால் வெல்கிறேன். என் தேவன் என் வழக்கை விசாரிப்பவராய் இருக்கிறார்.
- நான் கர்த்தரைக் குறித்துச் சொல்வேன். அவர் என் ஜெயக்கொடி, அவருடைய நாமத்தினாலே நான் ஜெயம் பெறுவேன். எல்லா சூழ்நிலைகளிலும் அவர் என்னை வெற்றிபெறச் செய்கிறார். நான் எல்லாவற்றையும் அவர் மூலமாக தைரியமாக செய்கிறேன், ஏனென்றால் அவர் எனக்கு வெற்றியைத் தருகிறார்.
- நான் கர்த்தரைக் குறித்துச் சொல்வேன். அவர் என் சமாதானம். அவர் என் வாழ்க்கையை பரிபூரண சமாதானத்தினாலும், பரிபூரண ஷாலோமினாலும், பூரண நல்-வாழ்வினாலும் நிரப்புகிறார்.
- நான் கர்த்தரைக் குறித்துச் சொல்வேன். அவர் என்னைக் காக்கிறவர். எந்தத் தீமையும் எனக்கு நேரிடாது. என்னைக் காக்கிறவர் ஒருபோதும் உறங்குவதில்லை.

அவருடைய தேவதூதர்கள் என்னைக் காக்கும் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

- நான் கர்த்தரைக் குறித்துச் சொல்வேன். அவர் என்னைப் பலப்படுத்துபவர். அவர்தான் என் வாழ்வின் பெலனானவர். நான் அவருக்காகக் காத்திருக்கையில், கழுகுபோல் செட்டைகளை அடித்து எழும்ப அவர் எனக்கு பெலமளிக்கிறார்.
- நான் கர்த்தரைக் குறித்துச் சொல்வேன். அவர் எனக்குப் பலன் அளிப்பவர். அவருடைய நாமத்தின் நிமித்தமாக நான் செய்திருக்கிற அன்பின் பிரயாசத்தை என் தேவன் மறந்துபோவதில்லை. அவரே எனக்கு பலன் அளிப்பவர், அவர் எனக்கு பெருக்கத்தை தருகிறார், என்னை கனிகொடுக்க செய்கிறார்.

இதனுடன் கூடுதலாக சேர்க்கலாம். கர்த்தரைப் பற்றி நீங்கள் என்ன சொல்வீர்கள்?

# 17

# தேவதூதர்கள் அவருடைய வார்த்தையின் குரலைக் கேட்கிறார்கள்

**சங்கீதம் 103:20,21**

**[20]கர்த்தருடைய வார்த்தையைக்கேட்டு,**
**அவருடைய வசனத்தின்படி செய்கிற பலத்த சவுரியவான்களாகிய அவருடைய தூதர்களே,**
**அவரை ஸ்தோத்திரியுங்கள்.**
**[21]கர்த்தருக்குப் பிரியமானதைச்செய்து,**
**அவர் பணிவிடைக்காரராயிருக்கிற அவருடைய சர்வசேனைகளே,**
**அவரை ஸ்தோத்திரியுங்கள்.**

தேவனுடைய தூதர்கள் வலிமை மற்றும் பெலன் கொண்டவர்கள். அவர்கள் அவருடைய வார்த்தையைச் செய்கிறார்கள். அவர்கள் அவருடைய வார்த்தையின் சத்தத்திற்கு கவனம் செலுத்துகிறார்கள் மற்றும் தேவனுடைய வார்த்தை சொல்லுவதை நிறைவேற்றுகிறார்கள்.

இந்த இரண்டு வசனங்களிலிருந்தும் உறுதியாக நிரூபிக்க முடியாவிட்டாலும், தேவதூதர்களைப் பற்றியும் வேதத்தில் சொல்லப்பட்டுள்ள அவர்களது செயல்பாடுகளைப் பற்றியும் நமக்குத் தெரிந்தவற்றின் சாராம்சத்தைக் கொண்டு நாங்கள் அனுமானிக்கிறோம். தேவன் சொன்னதை நம்முடையது என்று அறிவிக்கும் வார்த்தையை நாம் பேசும்போது, நாம் அறிவிக்கும் அவருடைய வார்த்தையின் தொனியை தேவதூதர்கள் கேட்கிறார்கள், எனவே, இரட்சிப்பின் சுதந்திரவாளிகளான நமக்கு, தேவனுடைய வார்த்தையின்படியே தங்கள்

ஊழியத்தை நிறைவேற்றுகிறார்கள். இது நாம் செய்யும் ஒரு அனுமானம், ஆனால் சரியானது.

இரட்சிப்பின் சுதந்தவாளிகளாகிய நமக்கு ஊழியம் செய்ய தேவதூதர்கள் அனுப்பப்படுகிறார்கள் (எபிரேயர் 1:14). தேவன் தம்முடைய பரிசுத்தவான்களாகிய நமக்காக அறிவித்ததை அவர்கள் நமக்கு பணிவிடை செய்கிறார்கள். தேவன் தம்முடைய மக்களாகிய நமக்காகச் செய்ய விரும்புவதை தேவதூதர்கள் செய்கிறார்கள். தானியேலின் அனுபவத்திலும் (தானியேல் 10), ஆரம்பகால திருச்சபையின் அனுபவத்திலும் (அப்போஸ்தலர் 12:5-7) காண்பதுபோல், நம் சார்பாக பணியாற்ற தேவதூதர்களை வரவேற்கும் ஆவிக்குரிய நடவடிக்கைகள் உள்ளன என்பதை நாம் ஊகிக்க முடியும். ஜெபமும் அப்படிப்பட்ட ஒன்றாகும். நமது ஆராதனை, நாம் கொடுப்பது, மற்றும் நாம் தேவனுக்குக் கீழ்ப்படிவது போன்றவையும் கூட தேவதூதர்களை நம் சார்பாக பணிவிடை செய்யத் தூண்டுகிறது என்று உறுதியாகச் சொல்லலாம். தேவதூதர்கள் தேவனுடைய வார்த்தைக்கு கவனம் செலுத்துகிறார்கள், மற்றும் அவருடைய வார்த்தையை நிறைவேற்றுகிறார்கள் என்பதை நாம் அறிந்திருப்பதால், தேவனுடைய வார்த்தையிலும், தேவனுடைய வாக்குத்தத்தத்திலும் நம்முடைய விசுவாசத்தை அறிவிக்கும்போது, தேவதூதர்கள் நமக்காக பணிவிடை செய்யத் தூண்டப்படுவார்கள் என்ற முடிவுக்கு வருவது பாதுகாப்பானது. தேவதூதர்கள் தேவனுடைய வார்த்தைக்கு முரணான எதிலும் ஈடுபட மாட்டார்கள். எனவே, நாம் தேவனுடைய வார்த்தைக்கு மாறாக பேசும்போது, அந்த வார்த்தைகளை அடிப்படையாகக் கொண்டு தேவதூதர்கள் செயல்பட மாட்டார்கள்.

உங்கள் வாழ்க்கையில் தேவனுடைய வார்த்தை நிறைவேறும் என்ற எதிர்பார்ப்போடு நீங்கள் செயல்படுகிறீர்கள் என்பதை தேவதூதர்களுக்கு

தெரியப்படுத்துங்கள். அந்த வார்த்தையைப் பேசுங்கள். எந்த சூழ்நிலையிலும், ஒரு நோக்கத்தோடு அவருடைய வார்த்தையை அறிவியுங்கள். தேவையுள்ள சூழ்நிலையில், “என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி எங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்” என்று அறிவியுங்கள். குழப்பமான சூழ்நிலையில், “இந்த சூழ்நிலையை சந்திக்கையில் நான் பரிபூரண சமாதானம், நல்ல புரிதல் மற்றும் ஒத்துழைப்பைக் கட்டளையிடுகிறேன். என் தேவன் சமாதானக்காரணர், குழப்பத்திற்கு அவர் காரணர் அல்ல” என்று அறிவியுங்கள். தேவதூதர்கள் அவருடைய வார்த்தையின் சத்தத்தை உங்கள் குரல் மூலம் கேட்கட்டும், மேலும் அந்த வார்த்தையின்படி அவர்கள் செயல்படுவார்களாக.

# 18

# கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் சொல்வார்களாக

**சங்கீதம் 107:2**

**கர்த்தரால் சத்துருவின் கைக்கு நீங்கலாக்கி மீட்கப்பட்டு, ... சேர்க்கப்பட்டவர்கள், அப்படிச் சொல்லக்கடவர்கள்.**

நாம் கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள், நாம் அப்படிச் சொல்ல வேண்டும்!

சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட கைதி தன்னைக் கைதி என்று சொல்லிக்கொண்டு அலைவதில்லை. அவன் தன்னை ஒரு சுதந்திர மனிதன் என்று தைரியமாகவும் பெருமையாகவும் அறிவிக்கிறான்! அவன் கைதியாக இருந்தான். அது கடந்த காலத்தில். இப்போது அவன் யார் என்பதுதான் முக்கியம்! அவன் ஒரு சுதந்திர மனிதன். அவன் தனது சுதந்திரத்தின் முழு உரிமையையும் பயன்படுத்த முடியும்.

விசுவாசிகளாகிய நாம் இருளின் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டு இயேசு கிறிஸ்துவின் இராஜ்யத்திற்குள் மறுபெயர்ப்புச் செய்யப்பட்டோம். தேவன் தம்முடைய மக்களாகிய பரிசுத்தவான்களுக்குக் கொடுத்த சுதந்தரத்தில் பங்குபெற நாம் தகுதி பெற்றிருக்கிறோம். இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தால் நாம் மீட்கப்பட்டுள்ளோம் (கொலோசெயர் 1:12-14). மீட்பது என்பதற்கு “மறுபடியும் வாங்குதல்”, சிறையிலிருந்து விடுவித்தல் மற்றும் மகிமையின் ஆதி நிலைக்குத் திரும்புதல் என்று அர்த்தமாகும். நாம் கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள். சாத்தானுக்கு நம்மீது எந்த உரிமையும் இல்லை, நம்மீது எந்த

ஆதிக்கமும் இல்லை, நம்மீது எந்த அதிகாரமும் இல்லை. நாம் தேவனால் கிரயத்திற்கு வாங்கப்பட்ட உரிமைசொத்தாக இருக்கிறோம் (1 கொரிந்தியர் 6:20).

- நான் கர்த்தரால் மீட்கப்பட்டவன், நான் அப்படியே சொல்கிறேன்!
- நான் சாத்தானுடைய வல்லமையிலிருந்தும் அவனுடைய சகல பிசாசுகளிடமிருந்தும் மீட்கப்பட்டுள்ளேன் (கொலோசெயர் 1:13). அந்தகார இருளின் வல்லமைகளுக்கு என் மீது எந்த உரிமையும் இல்லை, அவைகளுக்கு என் மீது எந்த அதிகாரமும் இல்லை.
- பாவத்தின் வல்லமையிலிருந்து நான் மீட்கப்பட்டேன் (ரோமர் 6:6,14). பாவம் என் மீது ஆதிக்கம் செலுத்த முடியாது.
- நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்து நான் மீட்கப்பட்டேன் (கலாத்தியர் 3:13). நான் இப்போது ஆபிரகாமின் ஆசீர்வாதத்தில் வாழ்கிறேன்.
- தற்போதைய பொல்லாத உலகத்திலிருந்து நான் மீட்கப்பட்டேன் (கலாத்தியர் 1:4). இந்த யுகத்தின் வழிகள், செல்வாக்குகள் மற்றும் தீமைகளுக்கு என் மீது எந்த அதிகாரம் இல்லை.
- ஒவ்வொரு பாவச்செயலிலிருந்தும் நான் மீட்கப்பட்டேன் (தீத்து 2:14). கடந்த காலத்தின் பாவ வாழ்க்கைமுறைகள் என் மீது எந்த வலிமையும் கொண்டிருக்கவில்லை. நான் அவருடையவனாக, நற்கிரியைகளுக்காக சுத்திகரிக்கப்பட்டிருக்கிறேன்.
- முந்தைய தலைமுறைகளின் இலக்கற்ற மற்றும் பாவ வாழ்க்கைமுறையிலிருந்து நான் மீட்கப்பட்டேன் (1 பேதுரு 1:18,19). நான் புது சிருஷ்டி மற்றும் புதிய வாழ்க்கையில் நடக்கிறேன்.

- ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால் நான் மீட்கப்பட்டு சத்துருவை ஜெயிக்கிறேன் (வெளிப்படுத்துதல் 12:11). சாத்தானும் அவனுடைய பிசாசுகளும் என் கால்களின் கீழே நசுக்கப்பட்டுவிட்டன (லூக்கா 10:19; ரோமர் 16:20).
- நான் கர்த்தரால் மீட்கப்பட்டவன், நான் அப்படியே சொல்கிறேன்!

# 19

# மகிழ்ச்சி மற்றும் இரட்சிப்பின் சத்தத்தைக் காத்துக்கொள்ளுங்கள்

**சங்கீதம் 118:15-17**
**15நீதிமான்களுடைய கூடாரங்களில்**
**இரட்சிப்பின் கெம்பீரசத்தம் உண்டு;**
**கர்த்தரின் வலதுகரம் பராக்கிரமஞ்செய்யும்.**
**16கர்த்தரின் வலதுகரம் உயர்ந்திருக்கிறது;**
**கர்த்தரின் வலதுகரம் பராக்கிரமஞ்செய்யும்.**
**17நான் சாவாமல், பிழைத்திருந்து,**
**கர்த்தருடைய செய்கைகளை விவரிப்பேன்.**

நீதிமான்களுடைய வீடுகளில் மகிழ்ச்சி மற்றும் இரட்சிப்பின் கெம்பீரசத்தம் உண்டு. "இரட்சிப்பு" என்ற வார்த்தை எபிரேய மொழியில் *'யேசுவா'* என்று அழைக்கப்படுகிறது, இது (கிரேக்கத்தில் *'சோசோ'* போன்று) ஒரு விரிவான வார்த்தையாகும், இதில் இரட்சிப்பு, பாதுகாப்பு, விடுதலை, வெற்றி, செழிப்பு, ஆரோக்கியம், உதவி, நலன், நல்வாழ்வு மற்றும் முழுமை ஆகியவை அடங்கும்.

இந்த உலகத்தின் சவால்கள் ஒவ்வொரு வீட்டிலும் ஏதோ ஒரு வகையில் வர முயற்சி செய்கின்றன. நீதிமான்களின் வீடுகள் சவால்களையும் வாழ்வின் புயல்களையும் எதிர்கொள்கின்றன. எனினும், "கர்த்தருடைய வலது கரம்" நீதிமான்களுக்காகப் பராக்கிரம் செய்கிறது. "கர்த்தருடைய வலது கரம்" என்பது தேவனுடைய வல்லமையாகும், அது எப்போதும் ஜெயிக்கிறதும் மற்ற எல்லாவற்றையும் விட அதிக வல்லமை வாய்ந்ததுமாய் இருக்கிறது. ஆகையால், நீதிமான்கள் தங்கள் வீடுகளில் மகிழ்ச்சி, வெற்றி,

கொண்டாட்டம் மற்றும் இரட்சிப்பின் முழக்கங்களை உடையவர்களாய் இருக்கிறார்கள். ஆகையால், “நான் சாவாமல், பிழைத்திருந்து, கர்த்தருடைய செய்கைகளை விவரிப்பேன்” என்று சொல்லலாம்.

சில சவால்களை சந்திக்கும்போது நாம் என்ன செய்கிறோம்? நாம் நம் குரலை மாற்றுகிறோமா? இல்லை! எங்கள் வீடுகளில் மகிழ்ச்சி மற்றும் இரட்சிப்பின் சத்தத்தை நாங்கள் தொடர்ந்து தக்கவைக்கிறோம். எங்கள் தேவன் வலிமைமிக்கவர் என்று நாங்கள் தொடர்ந்து அறிவிக்கிறோம். இரட்சிப்பின் சத்தத்தை நாங்கள் தொடர்ந்து தக்கவைக்கிறோம், ஏனென்றால் நம் தேவன் நம்மை இரட்சிக்கிறார், நம்மைக் காப்பாற்றுகிறார், நம்மைப் பத்திரப்படுத்துகிறார், நம்மைக் குணப்படுத்துகிறார், நம்மை விடுவிக்கிறார், செழிக்கச் செய்கிறார், மற்றும் வெற்றியைத் தருகிறார்! கர்த்தருடைய வலது கரம் எப்பொழுதும் வல்லமை வாய்ந்தது மற்றும் எல்லா காலங்களிலும் ஜெயத்தை தருகிறது. நமது வீட்டில் மகிழ்ச்சி மற்றும் இரட்சிப்பின் சத்தம் ஒலிக்கட்டும். ஒவ்வொரு பருவகாலங்களிலும் மகிழ்ச்சி மற்றும் இரட்சிப்பின் சத்தத்தைப் பேணுங்கள்.

# 20

# உங்கள் வாழ்க்கையை வடிவமைக்கும் சக்திகள் உங்கள் இதயத்திலிருந்து வெளிவருகின்றன

**நீதிமொழிகள் 4:20-23**

**[20]என் மகனே, என் வார்த்தைகளைக் கவனி;**
**என் வசனங்களுக்கு உன் செவியைச் சாய்.**
**[21]அவைகள் உன் கண்களை விட்டுப் பிரியாதிருப்பதாக;**
**அவைகளை உன் இருதயத்துக்குள்ளே காத்துக்கொள்.**
**[22]அவைகளைக் கண்டுபிடிக்கிறவர்களுக்கு அவைகள் ஜீவனும்,**
**அவர்கள் உடலுக்கெல்லாம் ஆரோக்கியமுமாம்.**
**[23]எல்லாக் காவலோடும்**
**உன் இருதயத்தைக் காத்துக்கொள்,**
**அதனிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்.**

தேவனுடைய வார்த்தையால் நம் இருதயங்களை நிரப்புவதே இங்குள்ள அறிவுறுத்தலாகும். நாம் அவருடைய வார்த்தையில் மிகுந்த கவனம் செலுத்துகிறோம், அதில் சார்ந்து, அவருடைய வார்த்தைக்குச் செவிகொடுக்கிறோம், அவருடைய வார்த்தை நம் உள்ளிந்திரியங்களில் இருக்கும்படி அவருடைய வார்த்தைக்குக் கவனம் செலுத்துகிறோம். அவருடைய வார்த்தை நமக்கு ஜீவனையும், ஆரோக்கியத்தையும் சுகத்தையும் கொடுத்து நம்மை ஆசீர்வதிக்கிறது. நம் இருதயங்களைக் காத்துக்கொள்ளும்படி அவர் அறிவுறுத்துகிறார். தேவனுடைய வார்த்தைக்கு முரணான எதையும் நம் இருதயங்களுக்குள் பிரவேசிக்க நாம் அனுமதிக்கக் கூடாது. நாம் நம் இருதயங்களைப் பாதுகாக்க வேண்டும், உண்மையில், நாம் அதில் பதிந்துள்ள வார்த்தையைப் பாதுகாக்க வேண்டும்.

இருதயம், நமது உள்ளான நபராக உள்ளது, அது மிகவும் முக்கியமானது. நம் இருதயத்திலிருந்து நம் வாழ்க்கையை வடிவமைக்கும் வல்லமைகள் வெளிவருகின்றன. நம் இருதயத்தில் உள்ளதை நம் வாழ்வில் வெளியிடுவதற்கான வழிகளில் ஒன்று நாம் பேசும் வார்த்தைகள். நம் வாழ்க்கையை வடிவமைக்கும் வல்லமைகள், நமது உள்ளான மனிதனிடமிருந்து வருகிறது, நாம் பேசும் வார்த்தைகள் மூலம் அவை வெளியிடப்படுகின்றன.

நம் இருதயங்கள் அவருடைய வார்த்தையால் நிறைந்திருந்தால், நாம் பேசும் வார்த்தைகள் அவருடைய வார்த்தையுடன் ஒத்துப்போவதாய் இருக்கும். அவருடைய வார்த்தையைப் பேசுகிறோம். நம் வாழ்க்கையை வடிவமைக்கும்வல்லமைகள்அவருடையவார்த்தையிலிருந்து வருகின்றன. தேவனுடைய வார்த்தையின் வல்லமையானது நம் வாழ்வில் கிரியை செய்கிறது, நம் வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும், நமது நிகழ்காலம் மற்றும் நமது எதிர்காலத்திலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

தேவனுடைய வார்த்தையால் உங்கள் இருதயத்தை நிரப்புங்கள். அவருடைய வார்த்தையைப் பேசுங்கள். உங்கள் வாழ்க்கையை வடிவமைக்கும் வல்லமைகள் உங்களில் உள்ள தேவனின் வார்த்தையிலிருந்து வெளிப்படட்டும்.

# 21

# நீதியான வார்த்தைகள் ஜீவனையும் பெலனையும் வெளியிடுகின்றன

**நீதிமொழிகள் 10:11,20,21,31,32**

**[11]நீதிமானுடையவாய்ஜீவஊற்று;கொடுமையோதுன்மார்க்கனுடைய வாயை அடைக்கும்.**
**[20]நீதிமானுடைய நாவு சுத்தவெள்ளி;**
**துன்மார்க்கனுடைய மனம் அற்ப விலையும் பெறாது.**
**[21]நீதிமானுடைய உதடுகள் அநேகரைப் போஷிக்கும்;**
**மூடரோ மதியீனத்தினால் மாளுவார்கள்.**
**[31]நீதிமானுடைய வாய் ஞானத்தை வெளிப்படுத்தும்;**
**மாறுபாடுள்ள நாவோ அறுப்புண்டுபோம்.**
**[32]நீதிமான்களுடைய உதடுகள் பிரியமானவைகளைப் பேச அறியும்;**
**துன்மார்க்கருடைய வாயோ மாறுபாடுள்ளது.**

நீதிமான்களின் வார்த்தைகளுக்கும் துன்மார்க்கருடைய வார்த்தைகளுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை இந்த வசனங்களில் காண்கிறோம். நீதிமான்களின் வார்த்தைகள் "ஜீவ ஊற்று". அவை ஜீவனையும், சுகத்தையும், நல்வாழ்வையும் மற்றும் "ஜீவனுடன்" தொடர்புடைய நமக்குத் தெரிந்த அனைத்தையும் பகிர்ந்து கொடுக்கின்றன. நீதிமான்களின் வார்த்தைகள் "சுத்த வெள்ளி" போன்றது, அதாவது "மிகவும் தூய்மையானது, மதிப்புமிக்கது மற்றும் விலையேறப்பெற்றது." நீதிமான்களின் வார்த்தைகள் "அநேகரை போஷிக்கின்றது." அவைகள் பல மக்களுக்கு ஊட்டமளித்து, வலிமை, ஜீவன், சகாயம் மற்றும் ஆசீர்வாதத்தை பகிர்ந்து கொள்கின்றது. இரண்டு கூடுதல் விஷயங்கள் நீதிமான்களின் வார்த்தைகளை வகைப்படுத்துகின்றன—ஞானம் மற்றும் ஏற்றுக்கொள்ளத்தக்கது (மகிழ்வூட்டுகிறது).

வார்த்தைகள் மற்றவர்களுக்கு ஜீவனையும் ஆசீர்வாதத்தையும் செயலாற்றும். நம்மிலிருந்து வெளிவரும் வார்த்தைகள் சிலருக்கு ஜீவ ஊற்றாக இருக்கும். நம் வார்த்தைகள் ஒருவர் தேடும் சுத்தமான வெள்ளியாக இருக்கலாம், மற்றவர்களுக்கு ஊட்டமளிப்பாகவும் பெலனாகவும் இருக்கலாம்.

உங்கள் வார்த்தைகள் சரியானவை (நீதியான வார்த்தைகள்) என்பதை உறுதிப்படுத்த ஒரு திட்டவட்டமான வழி, தேவனுடைய வார்த்தையுடன் இணக்கமாக பேசுவதாகும். அப்படிச் செய்தால், நமது வார்த்தைகள் ஞானச் சொற்களாகவும், மக்களுக்கு மகிழ்ச்சி, சுதந்திரம் மற்றும் விடுதலை தரும் வார்த்தைகளாகவும் இருக்கும். நீதியுள்ள வார்த்தைகளை பேசுவதைத் தேர்ந்தெடுங்கள். தேவனுடைய வார்த்தைக்கு ஏற்ப பேசுங்கள்.

# 22

# வார்த்தைகள் குணப்படுத்தி முழுமையடையச் செய்யும்

**நீதிமொழிகள் 12:18**
**பட்டயக்குத்துகள்போல் பேசுகிறவர்களும் உண்டு: ஞானமுள்ளவர்களுடைய நாவோ ஔஷதம்.**

**நீதிமொழிகள் 15:4**
**ஆரோக்கியமுள்ள நாவு ஜீவவிருட்சம்; நாவின் மாறுபாடோ ஆவியை நொறுக்கும்.**

நீதிமொழிகள் 12:18 இல், ஞானிகளின் நாவு ஆரோக்கியத்தை உண்டாக்குகிறது என்பதை நாம் கற்றுக்கொள்கிறோம். "ஆரோக்கியம்" என்ற வார்த்தை எபிரேய மொழியில் *'மார்ப்பே'*, என்று அழைக்கப்படுகிறது, அதற்கு "சுகமாகுதல், மருந்து, நிவாரணம், குணப்படுத்துதல், விடுதலை, மனவுறுதி, முழுமை" போன்ற அர்த்தங்கள் உண்டு. வார்த்தைகள் சரியாகவும் ஞானத்துடனும் பயன்படுத்தப்பட்டால், உங்களுக்கும் உங்கள் வார்த்தைகளைக் கேட்பவர்களுக்கும் அது குணமாக்குதலையும் ஆரோக்கியத்தையும் கொண்டுவரும்.

நீதிமொழிகள் 15:4 இல் *'மார்ப்பே'* என்ற அதே வார்த்தை மீண்டும் பயன்படுத்தப்பட்டுள்ளது, இங்கு இது "ஆரோக்கியம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆரோக்கியமான வார்த்தைகளைப் பேசும் நாவு—எழுத்தின்படியே, குணப்படுத்துதல் மற்றும் விடுதலைக்கான வார்த்தைகள்—ஜீவ விருட்சம். வெளிப்படுத்துதல் 22:1,2 இல், ஜீவ விருட்சத்தைப் பற்றி நாம் வாசிக்கிறோம்—*"பின்பு, பளிங்கைப்போல் தெளிவான ஜீவத்தண்ணீருள்ள*

*சுத்தமான நதி தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டுவருகிறதை எனக்குக் காண்பித்தான். நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையிலும், பன்னிரண்டுவிதமான கனிகளைத்தரும் ஜீவவிருட்சம் இருந்தது, அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும்; அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள்."* ஜீவ விருட்சத்தின் இலைகள் ஆரோக்கியத்தைக் கொண்டுவந்தன. சுகப்படுத்துதல், சொஸ்தமடைதல், விடுதலை மற்றும் ஆரோக்கியமான வார்த்தைகளை நாம் பேசும்போது, நாமும் குணமடைவோம், நாம் யாருடன் பேசுகிறோமோ அவர்களும் குணமடைவார்கள்.

வார்த்தைகள் நம்மை குணப்படுத்தி ஆரோக்கியமடையச் செய்யும். அவருடைய வார்த்தை நம் முழு சரீரத்திற்கு ஜீவனும் (புத்துணர்ச்சி, பெலன்) ஆரோக்கியமுமாய் (*'மார்ப்பே'*) இருக்கிறது என்று தேவன் கூறுகிறார் (நீதிமொழிகள் 4:22). ஜனங்கள் அவரை நோக்கிக் கூப்பிட்டபோது, தேவன் தம்முடைய வார்த்தையை அனுப்பி அவர்களைக் குணப்படுத்தினார் (*'ராஃப்பா'* குணமாக்குதல், ஆரோக்கியமடைய செய்தல்) (சங்கீதம் 107:20). தேவனுடைய வார்த்தை முழு மனிதனையும் குணப்படுத்தும் மற்றும் ஆரோக்கியமடையச் செய்யும் வல்லமை கொண்டது. எனவே, தேவனுடைய வார்த்தையைப் பேசுங்கள், அவருடைய வார்த்தையின் குணப்படுத்தும் வல்லமை உங்கள் வாயின் வார்த்தைகள் மூலம் வெளிப்படுவதாக. குணமளிக்கும், நல் ஔஷதமான, ஜீவ விருட்சத்தைப் போன்ற வார்த்தைகள் உங்கள் வாயிலிருந்து வெளிப்படுவதாக. தேவனுடைய குணப்படுத்தும் வார்த்தையைப் பேசுவதன் மூலம் உங்களுக்கும் உங்களைச் சுற்றியுள்ளவர்களுக்கும் ஆரோக்கியத்தையும் சுகத்தையும் அளிக்க உங்கள் வார்த்தைகளைப் பயன்படுத்துங்கள்.

# 23

# இனிமையான வார்த்தைகளின் வல்லமையை கட்டவிழ்த்துவிடுங்கள்

**நீதிமொழிகள் 16:21,24**
**21இருதயத்தில் ஞானமுள்ளவன்**
**விவேகியென்னப்படுவான்;**
**உதடுகளின் மதுரம் கல்வியைப் பெருகப்பண்ணும்.**
**24 இனிய சொற்கள் தேன்கூடுபோல்**
**ஆத்துமாவுக்கு மதுரமும்,**
**எலும்புகளுக்கு ஔஷதமுமாகும்.**

எந்த சூழ்நிலையிலும் நாம் பேசும் வார்த்தைகளைத் நாம் தேர்ந்தெடுக்கலாம். கனிவான, மென்மையான, இனிமையான, செழுமையாக்கும், மேம்படுத்தும் மற்றும் நேர்மறையான வார்த்தைகள் வல்லமையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. மென்மையாக மற்றும் அன்பாக பேசப்படும் வார்த்தைகள் கற்றுக்கொள்ளுதலை அதிகரிக்கும். இந்த வார்த்தைகள் மூலம் மக்கள் அறிவுறுத்தல்களை அதிகமாக ஏற்றுக்கொள்வார்கள், மேலும் அவை மிகவும் நம்பத்தக்கதும் வற்புறுத்தக்கூடியதுமாய் இருக்கிறது. அன்பான, இனிமையான மற்றும் செழிப்பான வார்த்தைகள் உள்ளான மனிதனுக்கு பெலனையும் ஆரோக்கியத்தையும் அவனது உள்ளத்தின் மையத்திற்கு கொண்டு வருகிறது. நாம் முகஸ்துதி பற்றி பேசவில்லை, அவை நேர்மையற்றதும், அந்த வார்த்தைகளுக்குப் பின்னால் உண்மை எதுவும் இல்லாமல், கேட்போரை நன்றாக உணர வைப்பதாய் மட்டுமே இருக்கின்றன. அக்கறையுடனும், இரக்கத்துடனும், மென்மையாகவும் பேசப்படும் யதார்த்தமும் உண்மையுமான வார்த்தைகளைப் பேசுவதையே நாங்கள் குறிப்பிடுகிறோம்.

நம்முடைய பேச்சின் ஒரு பகுதியாக தேவனுடைய வல்லமை வாய்ந்த வார்த்தையை நாம் சேர்க்கும்போது, நாம் நம்முடைய வார்த்தைகளின் மூலம் விசுவாசம், நம்பிக்கை, பலம், தைரியம், குணப்படுத்துதல், ஞானம் மற்றும் ஆலோசனையை வழங்க முடியும். இனிமையுடன் பேசுங்கள். இனிமையாகப் பேசுங்கள். மக்களை மேம்படுத்தும் வார்த்தைகளை பேசுங்கள். மக்களை வளப்படுத்தும் மற்றும் குணப்படுத்தும் வார்த்தைகளை பேசுங்கள். தேவனைப் பற்றி நீங்கள் பேசும்போது, அவரால் என்ன செய்ய முடியும், அவர் என்ன வாக்குப்பண்ணியிருக்கிறார் என்பதை மக்களுக்குச் சொல்லி, ஊழியம் செய்யுங்கள். இனிய சொற்களின் வல்லமையை வெளிப்படுத்துங்கள்.

# 24

# உங்கள் வார்த்தைகளின் பலன்களால் உங்கள் வாழ்க்கை நிரப்பப்படுகிறது

**நீதிமொழிகள் 12:14**
**அவனவன் தன் தன் வாயின் பலனால் திருப்தியடைவான்; அவனவன் கைக்கிரியையின் பலனுக்குத்தக்கதாக அவனவனுக்குக் கிடைக்கும்.**

**நீதிமொழிகள் 18:20**
**அவனவன் வாயின் பலனால் அவனவன் வயிறு நிரம்பும்; அவனவன் உதடுகளின் விளைவினால் அவனவன் திருப்தியாவான்.**

நம் வார்த்தைகள் நம் வாழ்க்கையை எல்லா வகையிலும் பாதிக்கின்றது. அவை நம் உள்ளான மனிதனை பாதிக்கின்றது. ஒரு மனிதனின் வயிறு என்பது அவனது உள்ளத்தைக் குறிக்கிறது. உணவு வயிற்றிற்குச் செய்வதைப் போலவே, நம் உள்ளான மனிதன் நன்மையால் நிரம்பவும், திருப்தியடையவும், போஷிக்கவும், நம் வார்த்தைகளால் ஆசீர்வதிக்கப்படவும் முடியும். வாழ்க்கையில் நமக்கு நேரிடுபவைகள் நம் வார்த்தைகளின் தாக்கத்தினால்தான் நேரிடுகின்றன. நாம் பேசும் வார்த்தைகளின் விளைவுகளால் வாழ்க்கை நிரம்பியுள்ளது. காலங்காலமாக நாம் பேசிக்கொண்டிருக்கும் வார்த்தைகளின் விளைவுகளுடன் வாழ்கிறோம்.

உங்கள் உள்ளான மனுஷன் எப்படி நிறைந்திருக்க வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள்? தன்நம்பிக்கை, தைரியம், விசுவாசம், நம்பிக்கை, நீதி, சமாதானம், மகிழ்ச்சி, அமைதி, ஞானம், வல்லமை மற்றும் தேவனுடைய குமாரர்களாக, குமாரத்திகளாக நமக்குக் கிடைக்கும்

அனைத்து நன்மைகளாலும் நிரப்பப்படுவது எவ்வளவு நன்றாக இருக்கும்? நிச்சயமாக! அப்படியானால், தேவனுடைய வார்த்தை மற்றும் அவருடைய ஆவியின் வல்லமையினாலும் வரும் இத்தகைய நற்பண்புகளால் நம்மை நிரப்பும் வார்த்தைகளை நாம் பேச வேண்டும். தேவனுடைய வார்த்தையைப் பேசுங்கள். கிறிஸ்துவுக்குள் உங்களுக்குரியதை அறிவியுங்கள். நீங்கள் அவருடைய ராஜ்யத்தில் ஓர் அங்கமாக இருக்கிறீர்கள் என்பதை அறிவியுங்கள், ஆகவே, பரிசுத்த ஆவியின் நீதி, சமாதானம் மற்றும் மகிழ்ச்சி உங்களுக்கு உள்ளது. இருதயத்தையும் சிந்தையும் காத்துக்கொள்கிற, எல்லா புத்திக்கும் மேலான சமாதானம், உலகத்தால் கொடுக்க முடியாத, இயேசுவின் சமாதானம் உங்களுக்கு உண்டு என்று அறிவியுங்கள். உங்களிடம் வல்லமை, அன்பு மற்றும் ஆரோக்கியமான மனம் உண்டு என்று அறிவியுங்கள். கர்த்தர் உங்கள் நம்பிக்கையாய் இருக்கிறார் என்று அறிவியுங்கள். நீங்கள் சிங்கம்போல் தைரியமானவர்களாய் இருக்கிறீர்கள். நீங்கள் எங்கு சென்றாலும் கர்த்தர் உங்களுடன் இருப்பதால் நீங்கள் பலமாகவும் தைரியமாகவும் இருக்கிறீர்கள். உங்கள் உள்ளான மனிதனில் நன்மையான விஷயங்களை உருவாக்கும் வார்த்தைகளைப் பேசுங்கள்.

உங்கள் வாழ்க்கை அனுபவங்கள் என்ன நிறைந்ததாக இருக்க வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள்? உங்களின் நிகழ்காலமும் எதிர்காலமும் எவற்றால் நிறைந்ததாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள்? உங்கள் வாழ்க்கை, உங்கள் நிகழ்காலம் மற்றும் உங்கள் எதிர்காலத்தின் மீது தேவனுடைய வாக்குத்தத்தங்களைப் பேசுங்கள். நீங்கள் பேசும் வார்த்தைகளின் பலன்களால் உங்கள் வாழ்க்கை நிரம்புகிறது.

# 25

# உங்கள் வார்த்தைகளுக்கு ஜீவன் மற்றும் மரணத்தின் மீது அதிகாரம் உண்டு

**நீதிமொழிகள் 18:21**
**மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும்; அதில் பிரியப்படுகிறவர்கள் அதின் கனியைப் புசிப்பார்கள்.**

ஜீவன் மற்றும் மரணம் பற்றிய விஷயங்களை நமது நாவின் வல்லமையில், அதாவது நாம் பேசும் வார்த்தைகளில் தேவன் வைத்திருக்கிறார். நம் வார்த்தைகளால் ஜீவனையும் மரணத்தையும் கொண்டுவர முடியும். நம் வார்த்தைகளின் விளைவுகளை ஏற்க நாம் தயாராக இருக்க வேண்டும். நம் வார்த்தைகளின் பலனால் நாம் வாழ வேண்டும்.

“மரணம்” என்பது “சரீர மரணத்தைக்” குறிக்கிறது மற்றும் கொள்ளைநோய், வியாதி மற்றும் அழிவைக் உருவப்படுத்திக்காட்டுகிறது. ஜீவன் என்பது நேர்மறையான வழியில் வாழ்வதுடன் புத்துணர்ச்சி மற்றும் வலிமையை உள்ளடக்கிய அனைத்தையும் குறிக்கிறது.

நாம் பேசும் வார்த்தைகள் நம்மை அழிக்கலாம் அல்லது நம்மை ஆசீர்வதிக்கலாம். நாம் பேசும் வார்த்தைகள் ஜீவனையும் பெலனையும் கொண்டு நம்மை உற்சாகப்படுத்தலாம் அல்லது நம் வாழ்க்கையை நாசம்பண்ணி, நம்மை பலவீனமாக்கி திவாலாக்கிவிடும். நம் வார்த்தைகள் நம்மீது இத்தகைய தாக்கத்தையும் ஆதிக்கத்தையும் ஏற்படுத்துவதற்காக தேவன்தாமே இவ்வாறு வடிவமைத்திருக்கிறார். நீங்கள் சொல்வது

உங்களைக் கட்டியெழுப்பும் அல்லது அழிக்கும்.

எனவே, நம் மீதும் பிறர் மீதும் ஜீவனையும் ஆசீர்வாதத்தையும் வெளிப்படுத்தும் வார்த்தைகளை நாம் பேச வேண்டும். தேவனுடைய வார்த்தையைப் பேசுவதை விட சிறந்தது எதுவும் இருக்க முடியாது. உங்கள் வாழ்க்கையில் தேவனுடைய வாக்குத்தத்தங்களைப் பேசுங்கள். கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய சிருஷ்டியாக தேவன் உங்களைப் பற்றி அறிவித்ததைப் பேசுங்கள். அவருடைய வார்த்தையின்படியே, உங்கள் வாழ்க்கையில் ஆசீர்வாதத்தையும், செழிப்பையும், வெற்றியையும், பெருக்கத்தையும், நன்மையையும் பேசுங்கள். நீங்கள் பலருக்கு ஆசீர்வாதமாக இருப்பீர்கள் என்று அறிவியுங்கள். நீங்கள் ஒரு ஆசீர்வாதமாக இருக்க ஆசீர்வதிக்கப்பட்டீர்கள் என்று அறிவியுங்கள். உங்களுக்கான தேவனுடைய நோக்கங்கள் மற்றும் பணிகள் அனைத்தையும் நீங்கள் நிறைவேற்றுவீர்கள் என்று அறிவியுங்கள். உங்கள் வாழ்க்கையின் மூலம் தேவன் மகிமைப்படுத்தப்படுவார் என்று அறிவியுங்கள். உங்கள் நிகழ்காலத்திலும் உங்கள் எதிர்காலத்திலும் ஜீவனையும் ஆசீர்வாதத்தையும் வெளிப்படுத்த உங்கள் வார்த்தைகளைப் பயன்படுத்துங்கள்.

# 26

# உங்கள் வாயில் உள்ள அவருடைய வார்த்தை தேசங்களை அசைக்கும்

**எரேமியா 1:9,10**

**[9]கர்த்தர் தமது கரத்தை நீட்டி, என் வாயைத் தொட்டு;**
**இதோ, என் வார்த்தைகளை உன் வாயிலே வைக்கிறேன்.**
**[10]பார் பிடுங்கவும், இடிக்கவும், அழிக்கவும், கவிழ்க்கவும், கட்டவும், நாட்டவும் உன்னை நான் இன்றையதினம் ஜாதிகளின் மேலும் ராஜ்யங்களின்மேலும் ஏற்படுத்தினேன் என்று கர்த்தர் என்னுடனே சொன்னார்.**

இந்த இரண்டு வசனங்களில் தீர்க்கதரிசன வார்த்தையின் வல்லமையைக் காண்கிறோம். தேசங்கள் மற்றும் ராஜ்யங்களைக் குறித்து தேவன் தமது வாயில் வைத்த வார்த்தைகளை எரேமியா பேசும்போது, வேரோடு பிடுங்கப்பட்டு, இடிக்கப்பட்டு, அழிக்கப்பட்டு, கீழே கவிழ்த்துப்போடப்படும் என்று கூறினார். தேவன் எரேமியாவுக்குக் கொடுத்த வார்த்தைகளை அவன் பேசியதால், தேவன் அழித்துப்போட விரும்பிய தேசங்களும் ராஜ்யங்களும் இடிந்து கவிழ்த்துப்போடப்படும். மேலும் எரேமியா பேசின தீர்க்கதரிசன வார்த்தையை போலவே, தேசங்களிலும், ராஜ்யங்களிலும் கட்டமைக்கப்படும், ஸ்தாபிக்கப்படும், எழுப்பப்படும்.

தீர்க்கதரிசன வார்த்தை என்பது பரிசுத்த ஆவியின் ஏவுதலால் கொடுக்கப்பட்டு, மக்கள் மூலமாக வெளியிடப்படும் வார்த்தையாகும். பரிசுத்த ஆவியானவர் இன்னும் தேவனுடைய மக்களின் வாழ்வில் கிரியை செய்துகொண்டிருக்கிறார். தேசங்கள் மற்றும் மக்களைக் குறித்து ஏவப்பட்ட வார்த்தைகளை அல்லது தீர்க்கதரிசன

வார்த்தைகளை தீர்க்கதரிசனமாக சொல்லவும் வெளியிடவும் அவர் இன்னும் நம்மை ஏவிக்கொண்டிருக்கிறார். தேவன் தம்முடைய வார்த்தைகளை நம் வாயில் வைத்து, நாம் அவற்றைப் பேசும்போது, தேசங்கள் மற்றும் ராஜ்யங்கள் மீது நிலவும் நிலைமைகளில் (ஆன்மீகம், சமுதாயம், பொருளாதாரம், முதலிய) நாம் தாக்கத்தை ஏற்படுத்துகிறோம். நம் வாயால் வெளியிடப்படும் அவருடைய வார்த்தைகள் தேசங்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்துகிறது. தேவன் தம்முடைய வார்த்தைகளை நிறைவேற்றும்படி கவனமாய் இருக்கிறார் (எரேமியா 1:12).

# 27

# உலர்ந்த எலும்புகளிடம் பேசுங்கள் அவை உயிரடையட்டும்

**எசேக்கியேல் 37:1-7**

**1கர்த்தருடைய கை என்மேல் அமர்ந்து, கர்த்தர் என்னை
ஆவிக்குள்ளாக்கி வெளியே கொண்டுபோய், எலும்புகள் நிறைந்த
ஒரு பள்ளத்தாக்கின் நடுவில் நிறுத்தி,**

**2என்னை அவைகளின் அருகே சுற்றி நடக்கப்பண்ணினார்; இதோ,
பள்ளத்தாக்கின் வெட்டவெளியிலே அந்த எலும்புகள் மகா திரளாய்க்
கிடந்தது; அவைகள் மிகவும் உலர்ந்ததுமாயிருந்தது.**

**3அவர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, இந்த எலும்புகள்
உயிரடையுமா என்று கேட்டார், அதற்கு நான்: கர்த்தராகிய
ஆண்டவரே, தேவரீர் அதை அறிவீர் என்றேன்.**

**4அப்பொழுது அவர்: நீ இந்த எலும்புகளைக் குறித்துத் தீர்க்கதரிசனம்
உரைத்து, அவைகளைப் பார்த்துச் சொல்லவேண்டியது
என்னவென்றால்: உலர்ந்த எலும்புகளே, கர்த்தருடைய
வார்த்தையைக் கேளுங்கள்.**

**5கர்த்தராகிய ஆண்டவர் இந்த எலும்புகளை நோக்கி: இதோ, நான்
உங்களுக்குள் ஆவியைப் பிரவேசிக்கப்பண்ணுவேன், அப்பொழுது
உயிரடைவீர்கள்.**

**6நான் உங்கள்மேல் நரம்புகளைச்சேர்த்து, உங்கள்மேல் மாம்சத்தை
உண்டாக்கி, உங்களைத் தோலினால் மூடி, உங்களில் ஆவியைக்
கட்டளையிடுவேன்; அப்பொழுது நீங்கள் உயிரடைந்து, நான்
கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்களென்று உரைக்கிறார் என்று
சொல் என்றார்.**

**7எனக்குக் கட்டளையிட்டபடியே நான் தீர்க்கதரிசனம் உரைத்தேன்;
நான் தீர்க்கதரிசனம் உரைக்கையில் ஒரு இரைச்சல் உண்டாயிற்று;
இதோ, அசைவுண்டாகி, ஒவ்வொரு எலும்பும் தன்தன் எலும்போடே
சேர்ந்துகொண்டது.**

இந்தப் பகுதி எசேக்கியேலின் தீர்க்கதரிசன அனுபவத்தின் ஒரு பகுதியை வெளிப்படுத்துகிறது. இந்த உலர்ந்த எலும்புகள் தங்கள் சொந்த தேசத்திலிருந்து

சிதறடிக்கப்பட்டு, நம்பிக்கையற்றவர்களாக உணர்ந்திருந்த இஸ்ரவேலரின் சித்திரமாக இருக்கிறது (எசேக்கியேல் 37:11,12). இந்த உலர்ந்த எலும்புகளுக்கு—தேவன் கொடுத்த வார்த்தைகளை—தீர்க்கதரிசன வார்த்தையைப் பேச தேவன் எசேக்கியேலைப் பயன்படுத்தினார். எலும்புகள் ஒன்றோடொன்று இணைந்தன, அவைகளின் மேல் சதை உருவானது, அவற்றிற்குள் ஜீவன் வந்தது, அவை ஒரு பெரிய சேனையாக எழும்பின (எசேக்கியேல் 37:10). ஒரு முழு தேசத்தின் தலைவிதியும் தீர்க்கதரிசன வார்த்தையின் மூலம் பாதித்தது. தீர்க்கதரிசன வார்த்தை என்பது தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்ற, பூமியில் தேவனுடைய வல்லமை வெளியிடும் ஊர்தியாய் இருக்கிறது.

இன்றும், பரிசுத்த ஆவியானவர் நம்மை ஏவி தீர்க்கதரிசனமாகப் பேச வார்த்தைகளைத் தருகிறார். இது நமது சொந்த வாழ்க்கையின் மீதும், பிற மக்கள் மீதும், நகரங்கள், மண்டலம் மற்றும் தேசங்கள் மீதும் இருக்கலாம். அவர் நம்மைப் பேசத் தூண்டும் வார்த்தைகளைப் பேசும்போது, உலர்ந்த எலும்புகள் உயிரடைகின்றன! மரித்தவை மீண்டும் உயிர்ப்பிக்கப்படுகின்றன! மக்களும், தேசங்களும் நம்பிக்கையுடனும் ஜீவனுடனும் எழுகின்றனர். நினைவில்கொள்ளுங்கள், பரிசுத்த ஆவியானவர் உங்களை ஏவுகிறபடியே, உலர்ந்த எலும்புகளைப் பார்த்துப் பேசுங்கள், அவை உயிரடையும்!

# 28

# உங்கள் வார்த்தைகள் பரலோகத்தில் கேட்கப்படுகின்றன

**தானியேல் 10:12**

**அப்பொழுது அவன் என்னை நோக்கி: தானியேலே, பயப்படாதே; நீ அறிவை அடைகிறதற்கும், உன்னை உன்னுடைய தேவனுக்கு முன்பாகச் சிறுமைப்படுத்துகிறதற்கும், உன் மனதைச் செலுத்தின முதல்நாள் துவக்கி உன் வார்த்தைகள் கேட்கப்பட்டது; உன் வார்த்தைகளினிமித்தம் நான் வந்தேன்.**

பூமியில் நாம் பேசும் வார்த்தைகள் பரலோகத்தில் கேட்கப்படுகின்றன. நாம் பேசும் வார்த்தைகளுக்கு பதிலளிக்கும் விதமாக தேவதூதர்கள் தேவனால் அனுப்பப்படுகிறார்கள்.

நாம் ஜெபத்தில் வார்த்தைகளைப் பேசுகிறோம். நம்முடைய விசுவாசத்தை நடைமுறைப்படுத்த நாம் வார்த்தைகளைப் பேசுகிறோம். இருளின் வல்லமைகளுக்கு எதிரான யுத்தத்தில் ஆவியின் பட்டயத்தை பயன்படுத்தும்போது நாம் வார்த்தைகளைப் பேசுகிறோம். மக்களை ஆசீர்வதிக்க வார்த்தைகளைப் பேசுகிறோம். மக்களை குணப்படுத்த, விடுவிக்க மற்றும் அற்புதங்களைக் கொண்டுவர நாம் வார்த்தைகளைப் பேசுகிறோம். மலைகளை நகர்த்துவதற்கும், புயல்களை அமைதிப்படுத்துவதற்கும் நாம் வார்த்தைகளைப் பேசுகிறோம். நாம் கட்டவும் கட்டவிழ்க்கவும், பூமியில் நமது அதிகாரத்தை நடைமுறைப்படுத்த வார்த்தைகளைப் பேசுகிறோம். நமது வார்த்தைகள் பரலோகத்தில் கேட்கப்படுகின்றன! நமது வார்த்தைகளுக்குப் பதில் அளிக்கும்படியாக தேவதூதர்கள் அனுப்பப்படுகிறார்கள்.

உங்கள்வார்த்தைகள்பரலோகத்தில்கேட்கப்படுகின்றன என்பதை அறிந்த பிறகு நீங்கள் என்ன வார்த்தைகளைப் பேசுவீர்கள்? பரலோகத்தில், தேவனுடைய வார்த்தையே மேலோங்கி நிற்கிறது. *"கர்த்தாவே, உமது வசனம் என்றென்றைக்கும் வானங்களில் நிலைத்திருக்கிறது"* (சங்கீதம் 119:89). ஜெபத்தில், விசுவாசத்தில், யுத்தத்தில், ஊழியத்தில், அதிகாரத்தைப் பிரயோகிப்பதில் நாம் பேசும் வார்த்தைகள்—எல்லா சூழ்நிலைகளிலும்—பரலோகத்தில் ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்ட தேவனுடைய வார்த்தையுடன் இணைக்கப்பட்ட வார்த்தைகளாக இருக்க வேண்டும். உங்கள் வார்த்தைகள் பரலோகத்தில் கேட்கப்படுகிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள். எப்பொழுதும் பரலோகத்துடன் இணைந்தே பேசுங்கள், உங்கள் சார்பாக பரலோகம் செயல்படும்.

# 29

# வார்த்தைகள் ஆவிக்குரிய மண்டலத்திலிருந்து இயற்கைக்கு கடத்தப்படுகின்றது

**தானியல் 10:17-19**

**17 ஆகையால் என் ஆண்டவனுடைய அடியேன் என் ஆண்டவனோடே பேசக்கூடுவதெப்படி? இனி என்னில் பெலனில்லை, என்னில் மூச்சுமில்லை என்றேன்.**

**18 அப்பொழுது மனுஷ ரூபமான ஒருவன் திரும்ப என்னைத் தொட்டு, என்னைத் திடப்படுத்தி,**

**19 பிரியமான புருஷனே, பயப்படாதே, உனக்குச் சமாதானமுண்டாவதாக, திடங்கொள், திடங்கொள் என்றான்; இப்படி அவன் என்னோடே பேசுகையில் நான் திடங்கொண்டு அவனை நோக்கி: என் ஆண்டவன் பேசுவாராக; என்னைத் திடப்படுத்தினீரே என்றேன்.**

தானியல் இந்த தேவதூதனின் சந்திப்பை பெற்றதால், அவன் உணர்ச்சிவசப்பட்டவனாய், பலவீனனாய், வலிமையற்றவனாய், ஒருவேளை பயத்தையும் உணர்ந்திருக்கலாம். தேவதூதன் அவனைத் தொட்டு, “பயப்படாதே, உனக்கு சமாதானமுண்டாவதாக, திடங்கொள்” என்று அவனுக்குள் வார்த்தைகளைப் பேசினான். மேலும் தானியல் பலப்படுத்தப்பட்டான். தானியலிடம் தேவதூதன் பேசிய வார்த்தைகள் தானியலுக்கு சமாதானத்தையும் பெலத்தையும் கடத்தியது. வார்த்தைகள் ஆவிக்குரிய மண்டலத்தையும் இயற்கை மண்டலத்தையும் இணைக்கின்றன. வார்த்தைகள் ஆவிக்குரிய மண்டலத்திலிருந்து இயற்கை மண்டலத்திற்கு கடத்தப்படுகின்றது.

மனிதர்களாகிய நாம், இயற்கை மண்டலம் மற்றும் ஆவிக்குரிய மண்டலம் ஆகிய இரண்டிலும் செயல்படும் வகையில் தேவனால் வடிவமைக்கப்பட்டுள்ளோம். விசுவாசிகளாக, ஆவிக்குரிய மண்டலத்தில் இயேசு கிறிஸ்துவுக்குள் நாம் தேவனுடைய வலது பாரிசத்தில் அமர்ந்திருக்கிறோம். நாம் கிறிஸ்துவில் இருக்கிறோம். நாம் தேவனுடைய சுதந்தரரும் இயேசுவின் உடன் சுதந்தரருமாயும் இருக்கிறோம். ஆவிக்குரிய மண்டலத்தில் நாம் இவ்வாறே இருக்கிறோம். ஆவிக்குரிய மண்டலத்தில் தேவன் நமக்குக் கொடுத்ததை எடுத்துக்கொள்ளவும், இயற்கை மண்டலத்தில் உள்ள யாராவது ஒருவருக்கு அதை வழங்கவும் நம் வார்த்தைகள் நமக்கு உதவுகின்றன.

உதாரணமாக, நோய்வாய்ப்பட்டவர்களுக்கு நாம் ஊழியம் செய்து, அவர்கள் குணமடையக் கட்டளையிடும்போது, இயற்கைக்கு அப்பாற்பட்ட குணப்படுத்துதலைக் கொண்டுவருகிறதற்கு இயற்கையில் நம்மிடம் ஏதாவது இருக்கிறதா? முற்றிலுமாக எதுவும் இல்லை. நாம் செய்வது என்னவென்றால், இயேசு கிறிஸ்துவினால் செய்துமுடிக்கப்பட்ட செயலை ஏற்றுக்கொண்டு, ஆவிக்குரிய மண்டலத்தில் நம்முடைய அபிஷேகம் மற்றும் அதிகாரத்தை எடுத்துக்கொண்டு, அந்த நபரின் சரீர சுகத்திற்காக அதை வழங்குகிறோம். நமது வார்த்தைகள் ஆவிக்குரிய மண்டலத்தை இயற்கை மண்டலத்துடன் இணைக்கின்றன. நாம் தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் பேசும்போது, ஆவியில் நம்முடையதை எடுத்து அதனை இயற்கையில் வெளியிடலாம். அவருடைய ராஜ்யம் வருவதையும், அவருடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல் பூமியிலும் செய்யப்படுவதையும் காண நாம் இங்கே இருக்கிறோம். நாம் இதைச் செய்வதற்கான ஒரு வழி,

அவருடைய வார்த்தைக்கு இசைவாகப் பேசுவதாகும், இதனால், அவர் ஆவியில் நமக்குக் கொடுத்தவைகள் இயற்கையில் வெளியிடப்படுகிறது.

# 30

# பலவீனன் தன்னை பலவான் என்று சொல்லட்டும்

**யோவேல் 3:9,10**
**[9]இதைப் புறஜாதிக்குள்ளே கூறுங்கள்;**
**யுத்தத்துக்கு ஆயத்தம் பண்ணுங்கள்,**
**பராக்கிரமசாலிகளை எழுப்புங்கள்;**
**யுத்தவீரர் எல்லாரும் சேர்ந்து ஏறிவரக்கடவர்கள்.**
**[10]உங்கள் மண்வெட்டிகளைப் பட்டயங்களாகவும்,**
**உங்கள் அரிவாள்களை ஈட்டிகளாகவும் அடியுங்கள்;**
**பலவீனனும் தன்னைப் பலவான் என்று சொல்வானாக.**

யோவேல் அதிகாரம் 3 என்பது யோசபாத் பள்ளத்தாக்கில் அர்மகெதோன் யுத்தம் மற்றும் கர்த்தருடைய நாளைப் பற்றிய தீர்க்கதரிசனம் ஆகும். தேசங்கள் யுத்தத்திற்காக அணிதிரட்டப்படுகின்றன. யோவேல் அமைதியான கருவிகள் (கலப்பைகள் மற்றும் அரிவாள்கள்) கூட போர் ஆயுதங்களாக (பட்டயங்கள் மற்றும் ஈட்டிகள்) மாற்றப்படுவதை விவரிக்கிறான். இந்த செயல்பாட்டில் “பலவீனன், ‘நான் பலவான்’ என்று சொல்வானாக” என்ற ஒரு சுவாரஸ்யக்கூற்று உள்ளது. பலவீனன், “நான் பலவீனன்” என்று சொல்லக்கூடாது. பலவீனன், “நான் பலவான்” என்று சொல்ல வேண்டும். “நான் பலவான்” என்று சொல்வதன் மூலம், பலவீனன் பலத்தினால் யுத்தத்திற்கு முன்னேறலாம் என்பதே இதன் உட்குறிப்பாகும்.

தேவன் தம்முடைய வார்த்தையில் நமக்காக என்ன அறிவித்திருக்கிறார் என்பதை அத்தருணத்தில் நாம் அதை உணராவிட்டாலும், இதே முறையில் உறுதிப்படுத்துவது சரியாக இருக்குமா?

பாவத்துடன் போராடுகிறவர்கள், “பாவம் என் மீது ஆதிக்கம் செலுத்துவதில்லை” என்று சொல்வது சரியாக இருக்குமா? அதனால் அவர்கள் பாவத்தை ஜெயித்து வெற்றியுடன் நடக்க முடியுமா? முற்றிலும்!

பாவம் மற்றும் சோதனையை எதிர்கொள்கிறவர்கள் (நாம் அனைவரும்), “என் பழைய பாவ சுபாவம் கிறிஸ்துவுடன் சிலுவையில் அறையப்பட்டுவிட்டது. என் வாழ்வின் மீதான பாவத்தின் வல்லமை உடைக்கப்பட்டுவிட்டது. பாவம் என்மீது ஆதிக்கம் செலுத்த முடியாது” என்று சொல்வார்களாக.

வியாதியஸ்தர்கள் சொஸ்தமாகும்படிக்கு, “இயேசுவின் தழும்புகளால் நான் குணமடைந்தேன்” என்று கூறுவது சரியாக இருக்குமா? அதனால் அவர்கள் சொஸ்தமடைய முடியுமா? முற்றிலுமாக!

“இயேசுதாமே என் நோய்களை ஏற்றுக்கொண்டு, என் வலிகளைச் சுமந்தார், அவருடைய தழும்புகளால் நான் சுகமானேன்” என்று வியாதியஸ்தர்கள் சொல்வார்களாக.

வறுமையில் உள்ளவர்கள், “என் தேவன் என் தேவைகள் அனைத்தையும் நிறைவுச் செய்கிறார்” என்று சொல்வது சரியாக இருக்குமா? அதனால் அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய முடியுமா? முற்றிலுமாக!

நெருக்கத்தில் உள்ளவர்கள், “கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன். என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி என் குறைகளையெல்லாம் கிறிஸ்து இயேசுவின் மூலமாக மகிமையில் நிறைவாக்குவார்” என்று சொல்வார்களாக.

வல்லமையற்றவர்களாக உணருபவர்கள், “பரிசுத்த ஆவியானவர் என்மேல் வந்திருக்கிறபடியால் மெய்யாகவே

நான் வல்லமையால் நிறைந்திருக்கிறேன்" என்று சொல்வது சரியாக இருக்குமா? அதனால் அவர்கள் ஆவியின் வல்லமையில் முன்னேற முடியுமா? முற்றிலுமாக!

"பரிசுத்த ஆவியானவர் என்மீது வந்தபின், நான் வல்லமை பெற்றேன், தரித்திரருக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும், இருதயம் நொறுங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைபிடிக்கப்பட்டவர்களுக்கு விடுதலையை அறிவிக்கவும் நான் அபிஷேகிக்கப்பட்டேன்" என்று சொல்வோமாக.

நீங்கள் நேர்மாறாக உணர்ந்தாலும், தேவனுடைய வார்த்தை உங்களைப் பற்றி என்ன சொல்கிறது என்பதை உறுதிப்படுத்துங்கள். தேவனுடைய வார்த்தை என்பது சத்தியம். உண்மைகள் மாறலாம். தேவனுடைய சத்தியம் நித்தியமானது, அது ஒருபோதும் மாறுவதில்லை. நீங்கள் எதிர்கொள்ளும் உண்மைகள் தேவனுடைய வார்த்தையின் சத்தியத்திற்கு ஏற்ப மாற்றப்படலாம். பலவீனன், "நான் பலவான்" என்று சொல்லி, பலனடையட்டும்.

# 31

# உங்கள் வார்த்தைகளால் தேவனைப் புண்படுத்தாதீர்

**மல்கியா 3:13-16**
**13 நீங்கள் எனக்கு விரோதமாய்ப் பேசின பேச்சுக்கள்**
**கடினமாயிருக்கிறது என்று கர்த்தர் சொல்லுகிறார்;**
**ஆனாலும் உமக்கு விரோதமாக**
**என்னத்தைப் பேசினோம் என்கிறீர்கள்.**
**14தேவனைச் சேவிப்பது விருதா,**
**அவருடைய கட்டளைகளைக்**
**கைக்கொள்ளுகிறதினாலும்,**
**சேனைகளின் கர்த்தருக்கு முன்பாகத்**
**துக்கித்து நடக்கிறதினாலும்**
**என்ன பிரயோஜனம்?**
**15 இப்பொழுதும்**
**அகங்காரிகளைப் பாக்கியவான்கள் என்கிறோம்;**
**தீமை செய்கிறவர்கள் திடப்படுகிறார்கள்;**
**அவர்கள் தேவனைப் பரிட்சை பார்த்தாலும்**
**விடுவிக்கப்படுகிறார்களே என்று சொல்லுகிறீர்கள்.**
**16 அப்பொழுது கர்த்தருக்குப் பயந்தவர்கள்**
**ஒருவரோடொருவர் பேசிக்கொள்வார்கள்;**
**கர்த்தர் கவனித்துக் கேட்பார்;**
**கர்த்தருக்குப் பயந்தவர்களுக்காகவும்**
**அவருடைய நாமத்தைத் தியானிக்கிறவர்களுக்காகவும்**
**ஞாபகப் புஸ்தகம் ஒன்று**
**அவருக்கு முன்பாக எழுதப்பட்டிருக்கிறது.**

தேவன் தம்முடைய ஜனங்கள் பேசியதைக் கேட்டு அவர்களது வார்த்தைகளாலும் அவர்கள் சொன்ன காரியங்களாலும் புண்படுத்தப்பட்டு வேதனைப்படுவதைக் கற்பனை செய்து பாருங்கள். தேவன் நம் வார்த்தைகளைக்

கவனிக்கிறார். தேவனிடத்தில் பயபக்தியுடன் பேசியவர்களையும், அவருடைய நாமத்தைத் தியானிப்பவர்களையும் நினைவுகூரும்படி, அவற்றைப் பதிவு செய்ய ஞாபகப் புஸ்தகம் ஒன்று இருப்பதை 16 ஆம் வசனம் நமக்குத் தெரிவிக்கிறது.

நாம் பேசும் வார்த்தைகளை தேவன் கேட்கிறார். நீங்கள் பேசுவதைக் கேட்கும்போது தேவன் எப்படி உணர வேண்டும் என்று விரும்புகிறீர்கள்? நிச்சயமாக, நம் வார்த்தைகளால் தேவனைக் காயப்படுத்தவோ அல்லது புண்படுத்தவோ நாம் விரும்புவதில்லை. உங்கள் வார்த்தைகளால் தேவனைப் புண்படுத்தாதீர்கள்

நாம் பேசுவது நம் தேவனை மகிமைப்படுத்தி, உயர்த்தி அவர் இருதயத்தை மகிழ்விக்கிறது என்பதை எவ்வாறு உறுதிப்படுத்துவது? நாம் பேசும்போது, அவருடைய வார்த்தைக்கு இசைவாகவும், அவர் கண்களுக்கு முன்பாக நேர்மையாகவும் இருக்க வேண்டும்.

உங்கள் வார்த்தைகள் தேவனைப் புண்படுத்த அனுமதிக்காதீர்கள். தேவன் சொன்னதைச் சொல்லுங்கள். ஒவ்வொரு சூழ்நிலையிலும் அவருடைய வார்த்தையைப் பேசுங்கள். ஒவ்வொரு சூழ்நிலையிலும் நீங்கள் அவரையும் அவருடைய வார்த்தையையும் கனம்பண்ணுகிறீர்கள் என்பதை அவருக்குத் தெரியப்படுத்துங்கள்.

# 32

# “இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது” என்று சொல்லக் கற்றுக்கொள்ளுங்கள்—இயேசு செய்தார்

**மத்தேயு 4:1-4**

**[1] அப்பொழுது இயேசு பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டார்.**

**[2] அவர் இரவும் பகலும் நாற்பதுநாள் உபவாசமாயிருந்தபின்பு, அவருக்குப் பசியுண்டாயிற்று.**

**[3] அப்பொழுது சோதனைக்காரன் அவரிடத்தில் வந்து: நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்றான்.**

**[4] அவர் பிரதியுத்தரமாக: மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்.**

எல்லாவற்றிலும் நாம் கர்த்தராகிய இயேசுவைப் போலவே நடந்து, அவரையே பின்பற்றுவதால், அவரே நமக்கு சரியான முன்மாதிரியாக இருக்கிறார். இயேசு வனாந்தரத்தில் சந்தித்த மூன்று சோதனைகள் வேதாகமத்தில் நமக்காகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவர் சந்தித்த சோதனைகள் இவைகள் மட்டுமல்ல. அவர் நம்மைப் போலவே எல்லா நிலைகளிலும் (ஒவ்வொரு பகுதியிலும், ஒவ்வொரு வழியிலும்) சோதிக்கப்பட்டும், அவர் பாவம் இல்லாதவராக இருந்தார் (எபிரெயர் 4:15). அந்த சோதனைகள் அனைத்தும் பதிவு செய்யப்படவில்லை. எனினும், மத்தேயு 4 இல் பதிவுசெய்யப்பட்டுள்ள மூன்று சோதனைகளில், ஒவ்வொரு முறையும் கர்த்தராகிய இயேசு வார்த்தையாகிய வசனத்தைப் பேசி சோதனையை

மேற்கொண்டதை நாம் கவனிக்கிறோம். ஒவ்வொரு முறையும் “எழுதப்பட்டிருக்கிறது” என்றார். ஆகவே வார்த்தையைப் பேசுவதன் மூலம் அவர் ஒவ்வொரு சோதனையையும் இதே முறையில் கையாண்டார் என்பதில் நாம் உறுதியாக இருக்க முடியும்.

ஒவ்வொரு சோதனையிலும், ஒவ்வொரு சூழ்நிலையிலும், “இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது” என்று சொல்லக் கற்றுக்கொள்ளுங்கள். தேவன் சொன்னதைச் சொல்லுங்கள். உங்களுக்கு சவால்விடும் சோதனைகள் மற்றும் சூழ்நிலைகளை சமாளிக்க வார்த்தையைப் பேசுங்கள். ஒரு சோதனையை எதிர்கொள்ளும்போது, “என் சரீரமானது எனக்குள் வாசம்பண்ணும் பரிசுத்த ஆவியானவரின் ஆலயம் என்று எழுதப்பட்டிருக்கிறது. பாவம் என் மீது ஆளுகை செலுத்துவதில்லை என்று எழுதப்பட்டிருக்கிறது; நான் என் சரீரத்தை நீதியின் ஆயுதமாகக் ஒப்புக்கொடுத்திருக்கிறேன்” என்று அறிக்கையிடுங்கள். சமாளிக்க முடியாத சவால்கள் இருப்பதாகத் தோன்றும் சூழ்நிலையை எதிர்கொள்ளும்போது, “நான் தேவனால் பிறந்தவன், நான் இந்த உலகத்தை ஜெயித்தேன் என்று எழுதப்பட்டிருக்கிறது. இது உலகத்தை ஜெயிக்கிற ஜெயமும், என் விசுவாசமாகவும் இருக்கிறது. தேவன் எப்போதும் என்னை வெற்றிசிறக்க செய்கிறார். இந்த நிலையிலும் நான் வெற்றி பெறுவேன்” என்று சொல்லுங்கள். “இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது” என்று சொல்லக் கற்றுக்கொள்ளுங்கள். இயேசு அவ்வாறு செய்தார். ஒவ்வொரு சூழ்நிலையிலும் தேவனுடைய வார்த்தையைப் பேசுங்கள்.

# 33

# வார்த்தையால் அசுத்த ஆவிகளைத் துரத்துங்கள்

**மத்தேயு 8:16**

**அஸ்தமனமானபோது, பிசாசு பிடித்திருந்த அநேகரை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள்; அவர் அந்த ஆவிகளைத் தமது வார்த்தையினாலே துரத்தி, பிணியாளிகளெல்லாரையும் சொஸ்தமாக்கினார்.**

இயேசுவின் ஊழியத்தை சுவிசேஷங்களில் நாம் வாசிக்கும்போது, அவர் அசுத்த ஆவிகளை எவ்வாறு எதிர்கொண்டார் என்பதை நாம் அறிந்துகொள்கிறோம். அவர் கட்டளையிடும் வார்த்தையினால் பிசாசுகளின் மீது அதிகாரத்தையும் ஆதிக்கத்தையும் செலுத்தினார். அவர் ஒரே வார்த்தையால் அசுத்த ஆவிகளை துரத்தினார் என்பதை மத்தேயு இங்கு பதிவு செய்கிறான். அவர் ஒரு கட்டளையின் வார்த்தையை மட்டுமே பேசினார்.

நாம் இயேசுவின் முன்மாதிரியை பின்பற்றுவோம். நமது வார்த்தைகள் என்பது கிறிஸ்துவில் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரம் மற்றும் ஆளுகையின் வெளிப்பாடாகும். அவருடைய நாமத்தைப் பயன்படுத்துவதற்கான உரிமையின் மூலம் நமக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை நாம் சுமந்து செல்கிறோம். நாம் அவருடைய அதிகாரத்தில் நடக்கிறோம். நாம் கட்டளையிடும் வார்த்தையால் ஆவிகளை துரத்துகிறோம்.

அதிகாரமுள்ள வார்த்தைகளைப் பேச கற்றுக்கொள்ளுங்கள். நீங்கள் மற்றவர்களுக்கு ஊழியம் செய்யும்போது, உங்களுக்காகவும் இதைச் செய்கிறீர்கள்.

பயத்தின் எண்ணங்களை எதிர்கொள்ளும்போது, "இயேசுவின் நாமத்தில், பயத்தின் ஆவியை இப்போது வெளியேறும்படி நான் கட்டளையிடுகிறேன். இயேசுவின் நாமத்தில்பயம்பற்றியஎண்ணங்களைநான்நிராகரிக்கிறேன்" என்று சொல்லக் கற்றுக்கொள்ளுங்கள். பொதுவாக, நீங்கள் ஆவியை அது ஏற்படுத்திய நிலையின் அடிப்படையில்தான் அழைப்பீர்கள். ஒரு அசாதாரணமான அல்லது விவரிக்க முடியாத ஒரு "விஷயம்" குழப்பத்தை ஏற்படுத்துவதாக நீங்கள் உணர்ந்தால், அந்தக் குழப்பத்தின் மீது அதிகாரத்தைப் பிரயோகப்படுத்துங்கள். "இயேசுவின் நாமத்தில், இந்த சூழ்நிலையில் கிரியை செய்யும் குழப்பத்தின் ஆவிகள் மீது நான் அதிகாரம் செலுத்துகிறேன். அவைகளின் கிரியையை நான் கட்டுப்படுத்துகிறேன். இயேசுவின் நாமத்தினாலே அவைகள் வெளியேறும்படி நான் கட்டளையிடுகிறேன்" என்று சொல்லக் கற்றுக்கொள்ளுங்கள். நோய்வாய்ப்பட்ட ஒருவருக்கு ஊழியம் செய்யும்போது, அந்த நிலை ஒரு அசுத்த ஆவியினால் ஏற்பட்டது என்று உங்களுக்குத் தெரிந்தால், "இயேசுவின் நாமத்தில், நான் இந்த பலவீனப்படுத்தும் ஆவியை கிறிஸ்துவில் கொண்டிருக்கிற அதிகாரத்தினால் கட்டுகிறேன், அதை இப்போதே வெளியேறும்படி கட்டளையிடுகிறேன்" என்று சொல்லுங்கள்.

கட்டளையின் வார்த்தையினால் ஆவிகளை துரத்துங்கள். இயேசு அவ்வாறு செய்தார், நாமும் அவ்வாறே செய்ய வேண்டும்.

# 34

# நீங்கள் பூமியில் அவரை அறிக்கை செய்யும்போது, பரலோகத்தில் நீங்கள் குறிப்பிடப்படுகிறீர்கள்

**மத்தேயு 10:32,33**

**32மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கைபண்ணுவேன்.**

**33மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன்.**

இயேசுவின் வார்த்தைகள் மிகத் தெளிவானவை. நாம் மனிதர்களுக்கு முன்பாக அவரை அறிக்கையிட்டால், பரலோகத்திலுள்ள பிதாவுக்கு முன்பாக அவர் நம்மை அறிக்கையிடுவார்.

கிரேக்க மொழியில் “அறிக்கை” என்ற வார்த்தை *‘ஹோமோலோஜியா’* ஆகும், இது கிரேக்க வார்த்தையான *‘ஹோமோ,’* அதாவது “அதே” மற்றும் கிரேக்க வார்த்தையான *‘லோகோஸ்’* அதாவது “கூறப்பட்ட ஒரு விஷயம்” என்பதன் கூட்டு வார்த்தையாகும். எனவே, “அறிக்கையிடுதல்” என்பது, “அதே விஷயத்தைச் சொல்வது, உடன்படுவது, ஏற்றுக்கொள்வது, ஒப்புக்கொள்வது, அங்கீகரிப்பது” என்று பொருள்படும்.

“அறிக்கையிடுதல்” என்பது “மற்ற நபர் சொல்லும் அதே விஷயத்தை சொல்வதாகும்.” வேதாகமத்தின் அறிக்கை என்பது தேவன் சொன்னவற்றுடன்—அவருடைய வார்த்தையுடன் உடன்படுகிறதாகும். தேவன் சொன்னதையே அதுவும் சொல்கிறது. அவர் சொன்னதையே

நாமும் சொல்கிறோம். தேவனுடைய வார்த்தைக்கு முரணான உங்கள் சொந்த விஷயத்தை நீங்கள் கூறி அதை அறிக்கையிடுதல் என்று அழைக்க முடியாது.

இயேசு தாம் யார் என்று சொன்னதை நாம் அறிக்கை செய்ய வேண்டும். இயேசுவைப் பற்றிய நமது அறிக்கை, தம்மைப் பற்றி அவர் சொன்னவற்றுடன் ஒத்துப்போக வேண்டும். இயேசுவே கிறிஸ்து (மேசியா), ஜீவனுள்ள தேவனுடைய குமாரன். அவரே வழியும், சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறார்; அவராலேயன்றி யாரும் பிதாவிடம் வருவதில்லை. நாம் அவரை அறிக்கைசெய்யும் போது, அதாவது, அவர் தம்மைப் பற்றிச் சொன்னதை, மனிதர்களுக்கு முன்பாக நாம் சொல்லும்போது, பரலோகத்திலுள்ள பிதாவுக்கு முன்பாக அவரும் நம்மை அறிக்கை செய்வார் (அவருடன் தொடர்புடைய நம்மைப் பற்றி நாம் சொல்வதில் நம்முடன் உடன்படுகிறார்). “நான் இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்ட தேவனுடைய பிள்ளை, பாவத்திலிருந்து இரட்சிக்கப்பட்டு, தேவனுடைய ராஜ்யத்திற்குள் சேர்த்துக்கொள்ளப்பட்டேன்” என்பதை நீங்கள் சொல்லலாம், மேலும் பலவற்றை நீங்கள் கூறலாம், அப்போது, பரலோகப் பிதாவுக்கு முன்பாக இயேசு உங்களை இவ்விதம் அங்கீகரிப்பார்!

இயேசு தம்மைப் பற்றி என்ன சொன்னார் என்பதையும், தேவனுடைய வார்த்தை அவரைப் பற்றி என்ன வெளிப்படுத்துகிறது என்பதையும் சொல்லுங்கள். அவர் இரட்சகர். அவர் குணப்படுத்துபவர். அவர் விடுவிப்பவர். அவர் சமாதான பிரபு. மனிதர்களுக்கு முன்பாக அவரை அறிக்கையிடுங்கள். பிதாவின் முன்பாக அவரும் உங்களை அறிக்கைச்செய்வார்.

# 35

# வார்த்தைகள் உங்கள் இருதயத்தில் உள்ளதை உங்கள் வாழ்க்கையில் கட்டவிழ்க்கிறது

**மத்தேயு 12:33-35**

**33மரம் நல்லதென்றால், அதின் கனியும் நல்லதென்று சொல்லுங்கள்; மரம் கெட்டதென்றால், அதின் கனியும் கெட்டதென்று சொல்லுங்கள்; மரமானது அதின் கனியினால் அறியப்படும்.**

**34விரியன்பாம்புக் குட்டிகளே, நீங்கள் பொல்லாதவர்களாயிருக்க, நலமானவைகளை எப்படிப் பேசுவீர்கள்? இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்.**

**35நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக்காட்டுகிறான், பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை எடுத்துக்காட்டுகிறான்.**

ஒரு மரம் அதன் கனிகளால் அறியப்படுகிறது. மரத்தில் என்ன இருக்கிறது, அது எந்த வகையான மரம் என்பது அந்த மரம் கொடுக்கும் கனியைப் பொறுத்தது. பின்னர் இயேசு இதை ஜனங்களுடன் தொடர்புபடுத்திக் கூறுகிறார். இருதயம் பொல்லாததாக இருந்தால், வாய் தீமையைப் பேசும், ஏனென்றால் உள்ளத்தில் உள்ளவை நம் வாயின் வார்த்தைகளில் வெளிவருகின்றன.

நம் வாழ்வில் நாம் என்ன (கனி) கொடுக்கிறோம் என்பது நமக்குள் இருப்பதைப் பொறுத்தது என்பதை நாம் வசனம் 35 இல் கற்றுக்கொள்கிறோம். உங்களிடம் நல்ல வைப்பீடு (நல்ல பொக்கிஷம்) இருந்தால், நீங்கள் நல்ல பலனைத் தருவீர்கள்—உங்கள் வாழ்க்கையில் நன்மைகளைக் கொண்டு வருவீர்கள்.

உள்ளத்தில் உள்ளதை (நல்ல பொக்கிஷம்) நம் வாழ்வில் (கனி) வெளிப்படச் செய்வதில் வார்த்தைகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன, ஏனென்றால் இருதயத்தின் நிறைவினால் (நல்ல பொக்கிஷம்), வாய் பேசுகிறது.

வார்த்தைகள் நமக்குள் இருப்பதை நம் வாழ்வில் வெளியிடுகின்றன. நாம் பேசும் வார்த்தைகளால் நம் இருதயத்தில் நாம் வைத்திருப்பவைகள் நம் வாழ்வில் வெளியிடப்படுகிறது.

நல்லவைகளை உங்கள் இருதயத்தில் சேர்த்துவையுங்கள். கிறிஸ்துவின் வார்த்தை நம்மில் நிறைவாக இருக்கும்படி நாம் அறிவுறுத்தப்படுகிறோம் (கொலோசெயர் 3:16). தேவனுடைய வார்த்தையாகிய செழிப்பான பொக்கிஷத்தை அளவில்லாமல் உங்களுக்குள் சேர்த்துவையுங்கள். அப்போது நீங்கள் பேசும் வார்த்தைகள் உங்களில் உள்ள தேவனுடைய வார்த்தையுடன் இணைந்திருக்கும். அதுவே உங்களுக்குள் சேர்த்துவைக்கப்பட்டிருப்பதால், தேவனுடைய வார்த்தையின்படி உங்களால் பேசாமல் இருக்க முடியாது. உங்கள் ஜீவனை வடிவமைக்கும் வல்லமைகள் உங்கள் இருதயத்திலிருந்து வெளிவருவதால், நீங்கள் நன்மையானவைகளைப் பிறப்பிப்பீர்கள் (நீதிமொழிகள் 4:22). வார்த்தைகள் உங்கள் இருதயத்தில் உள்ளவற்றை உங்கள் வாழ்க்கையில் வெளியிடுகின்றன. ஆகவே தேவ வார்த்தையால் உங்கள் இருதயத்தை நிரப்புங்கள். தேவ வார்த்தையைப் பேசுங்கள்.

# 36

# உங்கள் வார்த்தைகளால் நீங்கள் நீதிமான்களாக்கப்படுவீர்கள் அல்லது தீர்க்கப்படுவீர்கள்

**மத்தேயு 12:36,37**

**36மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்கவேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.**

**37ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய் என்றார்.**

நமது வார்த்தைகள் எவ்வளவு முக்கியம்? நாம் பேசிய வீணான வார்த்தைகளுக்குக் கூட கணக்குக் ஒப்புவிப்போம் என்று இயேசு சொன்னார். ஜீவனுக்கும் மரணத்திற்கும் நம் வார்த்தைகளில் வல்லமை இருப்பதை நீதிமொழிகள் 18:21 இல் நாம் கண்டோம். நம்முடைய வார்த்தைகளின் நித்திய விளைவுகளை மத்தேயு 12:36,37 இல், இயேசு நமக்கு வெளிப்படுத்துகிறார். நமது வார்த்தைகளால் நாம் நீதிமான்களாக்கப்படுவோம் அல்லது ஆக்கினைக்குள்ளாக்கப்படுவோம். இம்மையிலும் மறுமையிலும் வார்த்தைகள் மிகவும் முக்கியமானதாக இருப்பதால், நாம் நமது வார்த்தைகளை அதிக கவனத்துடன் பயன்படுத்த வேண்டும்.

“வீணான” என்ற வார்த்தை, கிரேக்க மொழியில் *‘ஆர்கோஸ்’* என்று அழைக்கப்படுகிறது, அதன் அர்த்தம், “செயலற்ற, வேலையற்ற, லாபமற்ற, பயனற்ற, மெதுவான, மலட்டு” என பொருள்படும்.

நாம் பேசும் ஒவ்வொரு வீணான வார்த்தைக்கும், நாம் அர்த்தமில்லாத பேசின வார்த்தைகளுக்கும், அதாவது நாம் பேசியபடி செயலில்காட்டாத வார்த்தைகளுக்கும் கணக்கு ஒப்புவிப்போம் என்று இயேசு கூறினார். இது எப்படி நடக்கும் என்று எனக்குத் தெரியவில்லை, ஆனால் அவருடைய எச்சரிக்கையை நாம் அதிகமாக கவனத்தில் கொள்ள வேண்டும்.

வீணான வார்த்தைகளைப் பேசுவதற்குப் பதிலாக, உங்களுக்கும் உங்களைச் சுற்றியுள்ளவர்களுக்கும் பயனுள்ள, பலனளிக்கும், லாபகரமான வார்த்தைகளைப் பேசுங்கள். உங்கள் சொந்த வாழ்க்கையிலும் மற்றவர்களின் வாழ்க்கையிலும் ஜீவனையும், ஆசீர்வாதத்தையும், பெலனையும் மற்றும் ஆற்றலையும் வெளியிடும் வார்த்தைகளைப் பேசுங்கள். உங்களையும் உங்களைச் சுற்றியுள்ளவர்களையும் நீதிக்கரிக்கும், உயர்த்தும், ஊக்குவிக்கும், எழுப்பும் மற்றும் வளப்படுத்தும் வார்த்தைகளைப் பேசுங்கள். வார்த்தையைப் பேசுங்கள்.

# 37

# கட்டுகிறதும் கட்டவிழ்ப்பதுமான ராஜ்யத்தின் அதிகாரத்தை வார்த்தைகள் வெளியிடுகிறது

**மத்தேயு 16:18,19**

**[18]மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை.**

**[19]பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார்.**

திருச்சபை ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவாகிய (மேசியா) கன்மலையின் மீது கட்டப்பட்டுள்ளது. இது பிதாவிடமிருந்து வந்த வெளிப்பாட்டினால் பேதுருவின் மிகப்பெரிய அறிக்கையாகும். இயேசு கட்டியெழுப்பும் திருச்சபையானது, பாதாளத்தின் சகல வல்லமைகளாலும் அடக்கவோ, கட்டுப்படுத்தவோ, மேலோங்கவோ முடியாததுமான வல்லமை வாய்ந்ததாகும். இந்தத் திருச்சபைக்கு, கர்த்தராகிய இயேசு பரலோக ராஜ்யத்தின் அதிகாரத்தை (திறவுகோல்கள்)—அதாவது, தேவனுடைய சொந்த ராஜ்யத்தின் அதிகாரத்தை வழங்கினார். இந்த மண்டலத்தில் தேவனுடைய ராஜ்யத்தை வெளிப்படுத்தும்படி திருச்சபை பூமியில் உள்ளது மற்றும் ராஜ்யத்தின் அதிகாரம் அதற்கு கொடுக்கப்பட்டுள்ளது.

இங்கே, பூமிக்குரிய மண்டலத்தில் ராஜ்யத்தின் அதிகாரம் எவ்வாறு பயன்படுத்தப்படப் போகிறது? நாம் “பூமியில்

கட்டுவோம்” மற்றும், “பூமியில் கட்டவிழ்ப்போம்” என்று இயேசு சொன்னார். “கட்டுதல்” என்ற வார்த்தை, “தடுத்தல், தடைசெய்தல், அனுமதிக்காதிருத்தல் மற்றும் சட்டவிரோதம் என அறிவித்தல்” என்று பொருள்படும். “கட்டவிழ்த்தல்” என்ற வார்த்தையின் அர்த்தம், “அழித்தல், துண்டித்தல், அவிழ்த்தல், தளர்த்துதல், விடுவித்தல், கலைத்தல், செயல் தவிர்த்தல், தூக்கி எறிதல், நிலைகுலையச் செய்தல் மற்றும் அப்புறப்படுத்துதல்” போன்றவையாகும். நாம் எவ்வாறு கட்டுவது மற்றும் கட்டவிழ்ப்பது? இயேசு தமது ஊழியத்தில் இதைச் செய்வதைப் பார்க்கிறோம். அவர் தாம் பேசிய வார்த்தைகள் மூலம் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி அதைச் செய்தார். செவிடர்களையும் ஊமைகளையும் நோக்கி, “திறக்கப்படுவாயாக” என்று கூறினார், அவர்களின் காதுகளும் நாவுகளும் கட்டவிழ்க்கப்பட்டன (மாற்கு 7:33-35). அவர் ஸ்திரீயைப் பார்த்து, *“உன் பலவீனத்தினின்று விடுதலையாக்கப்பட்டாய்”* (லூக்கா 13:12) என்றார். ஜனங்களை விடுவித்து பிசாசின் கிரியைகளைத் தடுத்து நிறுத்தும் அதிகாரமுள்ள வார்த்தைகளை இயேசு பேசினார்.

நாம் அவருடைய முன்மாதிரியைப் பின்பற்றுகிறோம். இயேசுவின் நாமத்தின் அதிகாரத்தில் வார்த்தைகளைப் பேசுகிறோம். நமக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தினால் நாம் பேசும் வார்த்தைகள் மூலம் நாம் கட்டுகிறோம் மற்றும் கட்டவிழ்க்கிறோம். ஒரு விசுவாசியாக உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள தேவனுடைய ராஜ்யத்தின் அதிகாரத்தைப் பயன்படுத்த உங்கள் வார்த்தைகளைப் பயன்படுத்துங்கள். கட்டவும் கட்டவிழ்க்கவும் உங்கள் வார்த்தைகள் ராஜ்யத்தின் அதிகாரத்தை கட்டவிழ்த்து விடுகின்றன! அதிகார வார்த்தைகளைப் பேசுங்கள்.

# 38

# மலையைப் பார்த்துப் பேசுங்கள்

**மத்தேயு 17:20**

**அதற்கு இயேசு: உங்கள் அவிசுவாசத்தினாலேதான்; கடுகுவிதையளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால் நீங்கள் இந்த மலையைப் பார்த்து, இவ்விடம் விட்டு அப்புறம்போ என்று சொல்ல அது அப்புறம் போம்; உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிராது என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.**

சுவிசேஷங்களில் விசுவாசம் பற்றிய இயேசுவின் போதனைகளை நாம் படித்தால், நம்முடைய விசுவாசத்தைப் பேசுவதற்கு அவர் அதிக முக்கியத்துவம் கொடுத்திருப்பதைக் கண்டறியலாம். மத்தேயு 17 இல், சீஷர்கள் பிசாசைத் துரத்த முடியாமல், எங்களால் ஏன் அதைச் செய்ய முடியவில்லை என்று இயேசுவிடம் கேள்வி எழுப்பியபோது, அவர்களின் அவிசுவாசம் அல்லது விசுவாசமின்மையை இயேசு அவர்களுக்குச் சுட்டிக்காட்டினார். விசுவாசத்தின் சாத்தியக்கூறுகள், அதைக்கொண்டு நாம் என்ன செய்ய முடியும், மற்றும் நமது விசுவாசத்தை எவ்வாறு செயல்படுத்துவது அல்லது பயன்படுத்துவது போன்றவற்றை அவர் அவர்களுக்குக் (மற்றும் நமக்கும்) கற்பித்தார்.

சுருக்கமாகச் சொல்வதானால், விசுவாசத்தினால் பிசாசுகளையும் அவற்றின் செயல்களையும் வீழ்த்துவது மட்டுமல்லாமல், இயற்கை உலகில் மாற்றத்தையும் ஏற்படுத்தலாம் (உதாரணமாக, இந்த மலையை இங்கிருந்து பெயர்ந்துபோகச் செய்யலாம்). விசுவாசத்தைக்கொண்டு, “உங்களால் செய்ய முடியாதது எதுவுமில்லை” என்று இயேசு சொன்னார். நம் உள்ளத்தில் உள்ள விசுவாசத்தின் மூலம் காரியங்களை நம்மால் செய்து முடிக்க முடியும்.

நம் இருதயங்களில் விசுவாசம் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது என்றும், கடுகு விதை அளவுள்ள விசுவாசம் ஒரு மலையை நகர்த்தும் அளவுக்கு வலிமையுள்ளது என்றும் இயேசு சொன்னார். விசுவாசத்தைப் பயன்படுத்துவதற்கான வழி அதைப் பேசுவது! உங்கள் விசுவாசத்தைப் பேசுங்கள். உங்கள் இருதயத்தில் விசுவாசித்து, நீங்கள் எதை நம்புகிறீர்கள் என்பதை விவரிக்கும் வார்த்தைகளை வெளிப்படுத்துங்கள்.

மலையிடம் பேச வேண்டும் என்பதையும் மிகத் தெளிவாகச் சொன்னார். மலையை நகர்த்த விரும்பும்போது, நாம் மலையைப் பார்த்துப் பேசுவோம். பெரும்பாலும், மலையைப் பற்றி மற்றவர்களிடம் பேசுவதில் தவறு செய்கிறோம். சில சமயங்களில், நமது காரியங்கள் தேவனுக்கு ஏற்கனவே தெரியாது என்பதுபோல, நாம் மலையைப் பற்றி பேசவோ அல்லது குறை கூறவோ கூடும். நம் இருதயத்தில் விசுவாசத்துடன் மலையிடம் பேச வேண்டும் என்று இயேசு நமக்குத் தெளிவாக அறிவுறுத்தினார். பிசாசுகளை பார்த்துப் பேசுங்கள். நோய்களை பார்த்துப் பேசுங்கள். புயல்களை பார்த்துப் பேசுங்கள். சூழ்நிலைகளைப் பார்த்துப் பேசுங்கள். பற்றாக்குறையைப் பார்த்துப் பேசுங்கள். மூடிய கதவுகளைப் பார்த்துப் பேசுங்கள். நமது இயற்கை மண்டலத்தில் உள்ள விஷயங்களைப் பார்த்துப் பேசுங்கள். நீங்கள் விசுவாசிக்கிறபடியே கட்டளையிடுங்கள். “உங்களால் கூடாதது எதுவுமில்லை” என்று அவர் சொல்லியிருக்கிறார். விசுவாசத்தைப் பற்றிய இயேசுவின் போதனைகளை நாம் பின்பற்றுவோம். உங்கள் விசுவாசத்தை பேசுங்கள்.

# 39

# நீங்கள் விரும்பிய முடிவைப் பேசுங்கள்

**மாற்கு 5:25-34**

**25அப்பொழுது பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீ,**
**26அநேக வைத்தியர்களால் மிகவும் வருத்தப்பட்டு, தனக்கு உண்டானவைகளையெல்லாம் செலவழித்தும், சற்றாகிலும் குணமடையாமல் அதிக வருத்தப்படுகிறபொழுது,**
**27இயேசுவைக்குறித்துக் கேள்விப்பட்டு: நான் அவருடைய வஸ்திரங்களையாகிலும் தொட்டால் சொஸ்தமாவேன் என்று சொல்லி.**
**28ஜனக்கூட்டத்துக்குள்ளே அவருக்குப் பின்னாக வந்து, அவருடைய வஸ்திரத்தைத் தொட்டாள்.**
**29உடனே அவளுடைய உதிரத்தின் ஊறல் நின்றுபோயிற்று; அந்த வேதனை நீங்கி ஆரோக்கியமடைந்ததை அவள் தன் சரீரத்தில் உணர்ந்தாள்.**
**30உடனே இயேசு தம்மிலிருந்து வல்லமை புறப்பட்டதைத் தமக்குள் அறிந்து, ஜனக்கூட்டத்துக்குள்ளே திரும்பி: என் வஸ்திரங்களைத் தொட்டது யார் என்று கேட்டார்.**
**31அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: திரளான ஜனங்கள் உம்மை நெருக்கிக்கொண்டிருக்கிறதை நீர் கண்டும், என்னைத் தொட்டது யார் என்று கேட்கிறீரே என்றார்கள்.**
**32இதைச் செய்தவளைக் காணும்படிக்கு அவர் சுற்றிலும் பார்த்தார்.**
**33தன்னிடத்திலே சம்பவித்ததை அறிந்த அந்த ஸ்திரீயானவள் பயந்து, நடுங்கி, அவர் முன்பாக வந்து விழுந்து, உண்மையையெல்லாம் அவருக்குச் சொன்னாள்.**
**34அவர் அவளைப் பார்த்து: மகளே, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, நீ சமாதானத்தோடேபோய், உன் வேதனை நீங்கி, சுகமாயிரு என்றார்.**

"அவருடைய வஸ்திரத்தைத் தொட்டால் நான் சொஸ்தமாவேன்" என்று இந்த ஸ்திரீ முதலில் தனக்குள் எண்ணியிருக்கலாம். இறுதியில், "அவருடைய

வஸ்திரத்தைத் தொட்டால் நான் சொஸ்தமாவேன்" என்று அவள் சொன்னாள். அப்படித்தான் அவள் சொன்னதை மற்றவர்கள் அறிந்து நமக்காகப் பதிவு செய்திருக்கிறார்கள். இந்த ஸ்திரீயின் விசுவாசமே அவளை சுகமாக்கியது என்று இயேசு பதிலளித்தார். அவளது வார்த்தையும் செயலும் அவளது நம்பிக்கைக்கு ஒத்துப்போனது. அவள் விசுவாசித்தாள். அவள் பேசினாள். அவள் செயல்பட்டாள்.

விரும்பிய முடிவை வெளிப்படுத்தும் வகையில் அவள் நம்பிக்கையோடு பேசினாள். இயேசுவின் வஸ்திரத்தைத் தொட்டால் நலமாக இருப்பேன் என்று சொன்னாள். கர்த்தராகிய இயேசு குணப்படுத்தும் அற்புதத்தைக் கொண்டுவந்த அவளுடைய விசுவாசத்தை அங்கீகரித்தார்.

காலம் மாறிவிட்டது. எனினும், தேவன் மீதான விசுவாசம் பற்றிய வேதாகமக் கோட்பாடு இன்னும் நிலையாக உள்ளது. தேவன் இன்னும் நம் இருதயங்களில் நாம் விசுவாசிக்கும் காரியங்களுக்குப் பதிலளிக்கிறார். நம் வார்த்தை மற்றும் செயல் மூலம் நம் விசுவாசம் வெளிப்படுத்தப்படுகிறது. உங்கள் விசுவாசத்தைப் பேசுங்கள். நீங்கள் எதற்காக தேவனை நம்புகிறீர்களோ, அதை அடையும்படி, அதாவது நீங்கள் விரும்பிய முடிவை அடையும்படி அதைப் பற்றிப் பேசுங்கள்.

# 40

# நீங்கள் சொல்வது நிறைவேறும் என்று விசுவாசியுங்கள்

**மாற்கு 11:22,23**

**22 இயேசு அவர்களை நோக்கி: தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்.**

**23 எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.**

தேவனில் விசுவாசம் எவ்வாறு செயல்படுத்தப்படுகிறது என்பதை இயேசு நமக்குத் தெளிவாகப் போதித்த பகுதிகளில் ஒன்று மாற்கு 11:22,23 இல் உள்ளது. அத்தி மரத்திடம் பேசுவதன் மூலம் எப்படி விசுவாசத்தை செயல்படுத்த வேண்டும் என்பதை இயேசு அப்போதுதான் காட்டியிருந்தார். அவர் அத்திமரத்திடம் பேசியதன் விளைவை சீஷர்கள் பார்த்தார்கள். அதன்பிறகு, தேவன் மீதான விசுவாசத்தை எப்படி செயல்படுத்தலாம் என்பதை இயேசு அவர்களுக்கு விளக்கமாக எடுத்துரைத்தார்.

தேவனில் விசுவாசத்துடன், மலையை நகர்த்தும்படி கட்டளையிட்டு பேசும்படி இயேசு நமக்கு அறிவுறுத்தினார். நீங்கள் சொல்வதைப் பற்றி உங்கள் இருதயத்தில் சந்தேகம் கொள்ள வேண்டாம். நீங்கள் சொல்வது நிறைவேறும், நீங்கள் சொல்வது உங்களிடம் இருக்கும் என்பதை நம்புங்கள். நமது நம்பிக்கை தேவன் மீது உள்ளது. ஆனால் அதே நேரத்தில், நாம் இயற்கையில் ஏதாவது செய்கிறோம். நாம் விசுவாச வார்த்தைகளைப் பேசுகிறோம். நாம் எதைப் பேசுகிறோமோ,

அது நாம் விசுவாசிக்கிற தேவனாலே நடக்கும் என்று நம்புகிறோம், நாம் தேவனுடன் இணைந்து ஊழியம் செய்யும் சக ஊழியர்கள் என்று நம்மை நம்புகிறோம். நாம் விசுவாச வார்த்தைகளைப் பேசும்போது, நாம் விசுவாசிக்கும் தேவன் நம் சார்பாக செயல்படுகிறார், அந்த வார்த்தைகள் நிச்சயம் நிறைவேறும். தேவனை விசுவாசிப்பதால், நாம் சொல்வது நிறைவேறும் என்று நம்புகிறோம், ஏனென்றால் தேவனே அதைச் செய்யக்கூடியவர்.

தேவனில் விசுவாசம் வேண்டும். உங்கள் விசுவாசத்தைப் பேசுங்கள். நீங்கள் பேசுவது நிறைவேறும் என்று நம்புங்கள், ஏனென்றால் தேவனே அதைச் செய்யக்கூடியவர். நீங்கள் சொல்வது நிறைவேறும் என்று நம்புங்கள்.

# 41

# ஜெபத்தில் விசுவாச வார்த்தைகளைப் பேசுங்கள்

**மாற்கு 11:22-24**

**[22]இயேசு அவர்களை நோக்கி: தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்.**

**[23]எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.**

**[24]ஆதலால், நீங்கள் ஜெபம்பண்ணும் போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன்.**

கர்த்தராகிய இயேசு எவ்வாறு தேவன் மீதான விசுவாசத்தை செயல்படுத்துவது என்று நமக்கு போதித்த அதே பத்தியில், அவர் தொடர்ந்து ஜெபத்தைப் பற்றி நமக்கு போதித்தார். “ஆதலால், நீங்கள் ஜெபம்பண்ணும் போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, ... உங்களுக்கு உண்டாகும் என்று சொல்கிறேன்.” “ஆதலால், உங்களுக்குச் சொல்கிறேன்” என்பதன் அர்த்தம், “இந்த காரணத்தினால், நான் இதை உங்களுக்குச் சொல்கிறேன்” அல்லது “அதனால் தான் நான் இதை உங்களிடம் சொல்கிறேன்” என்று அர்த்தம். மாற்கு 11:24 இல் ஜெபம் மற்றும் ஜெபிப்பதற்கான முறை குறித்து இயேசு கொடுத்த வாக்குத்தத்தமும், மாற்கு 11:22,23 இல் அவர் நமக்குக் கற்பித்தவற்றோடு இணைக்கப்பட்டுள்ளது.

நீங்கள் ஜெபிக்கும்போது, நீங்கள் எதைக் கேட்டாலும்,

நீங்கள் அவற்றைப் பெற்றுக்கொண்டீர்கள் என்று விசுவாசியுங்கள், உங்களுக்கு அவை கிடைக்கும் என்று இயேசு கூறினார். அவருடைய சித்தத்தின்படி நாம் கேட்டிருக்கும்போது, பிதாவிடமிருந்து நாம் கேட்டதைப் பெற்றுக்கொண்டோம் என்பதையும் அறிவோம் (1 யோவான் 5:14,15). எனவே, நாம் ஜெபித்த நேரத்திலேயே அவற்றைப் பெற்றுக்கொண்டோம் என்று நம்புகிறோம். இது ஒரு முடிக்கப்பட்ட விஷயமாகும். இது ஆவியில் செய்யப்படுகிறது. மாற்கு 11:23 இல் அவர் நமக்குப் போதித்ததை நாம் இப்போது செயல்படுத்துகிறோம். நமது தேவைகள், சூழ்நிலை, பிரச்சினை, மலை போன்றவற்றை பார்த்து பேசி, ஜெபத்தில் பெற்றுக்கொண்டதை அறிவிக்கிறோம். மலை நகர்ந்ததாக அறிவிக்கிறோம். நாம் ஜெபிக்கும்போது நாம் பெற்றுக்கொண்டோம் என்று நம்புவதன் மூலமும், நாம் நம்புவதைப் பெற்றுக்கொண்டோம் என்று அறிக்கையிடுவதன் மூலமும் தேவன் மீதான விசுவாசம் செயல்படுத்தப்படுகிறது. விசுவாச வார்த்தைகளை ஜெபத்தில் பேசுங்கள். ஜெபம் என்பது தேவன் மீது விசுவாச வார்த்தைகளை உள்ளடக்கி, பின்னர் நீங்கள் ஜெபித்த சூழ்நிலைக்கு விசுவாச வார்த்தைகளை பேசுவதாகும்.

# 42

# அவருடைய வார்த்தையுடன் உடன்படுங்கள்

**லூக்கா 1:37,38,45**

**[37]தேவனாலே கூடாதகாரியம் ஒன்றுமில்லை என்றான்.**

**[38]அதற்கு மரியாள்: இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது என்றாள். அப்பொழுது தேவதூதன் அவளிடத்திலிருந்து போய்விட்டான்.**

**[45]விசுவாசித்தவளே பாக்கியவதி, கர்த்தராலே அவளுக்குச் சொல்லப்பட்டவைகள் நிறைவேறும் என்றாள்.**

பரிசுத்த ஆவியின் வல்லமையால் மரியாள் கர்ப்பம் தரிக்கப் போகிறாள் என்ற செய்தியைக் கொண்டுவந்த தேவதூதன், “தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை” என்று சொல்லி முடித்தான். இந்த “ஒன்றுமில்லை” என்ற வார்த்தை ‘பாஸ்’ (**பொருள்:** அனைத்தும், ஒவ்வொன்றும்), ‘ரேமா’ (**பொருள்:** சொல், உச்சரிப்பு), மற்றும் ‘ஓ’ (**பொருள்:** இல்லை) ஆகிய மூன்று கிரேக்க வார்த்தைகளின் கலவையாகும். எனவே, திருத்தப்பட்ட பதிப்பில் காணப்படுவதுபோல், 37வது வசனத்திற்கு, *“... தேவனிடத்திலிருந்து வரும் எந்த வார்த்தையும் வல்லமையற்றதாக இருக்காது,”* அது சொன்னதை நிறைவேற்றும் என்பதே சிறந்த மாற்று வார்த்தையாக இருக்கிறது. தேவனுடைய ஒவ்வொரு வார்த்தையும் வல்லமை வாய்ந்தது, அது நிச்சயமாக நிறைவேற்றப்படும்.

தேவன் பேசியிருந்தார். தேவதூதன் இதை உறுதிப்படுத்தினான். மரியாள் தேவனுடைய வார்த்தையை அப்படியே ஏற்றுக்கொண்டு தன்னை ஒப்புக்கொடுத்தாள். அவள், “உம்முடைய வார்த்தையின்படி எனக்கு

ஆகக்கடவது" என்றாள். அவள் அந்த வார்த்தையுடன் உடன்படுகிறாள், அந்தத் தருணத்திலிருந்து அவள் தன்னைக் குறித்து சொல்லப்பட்டவைகளுக்கு இணையாக, எல்லாவற்றையும் சரியாகச் செய்தாள். பின்னர், அவள் விசுவாசித்ததால், அவளிடம் சொல்லப்பட்ட வார்த்தையின் நிறைவேற்றத்தை அவள் காண்பாள் என்று எலிசபெத் மூலம் பரிசுத்த ஆவியானவர் மரியாளுக்கு உறுதிப்படுத்தி அவளை ஊக்குவித்தார்.

எழுதப்பட்ட வேத வாக்கியங்களில் நாம் வாசிக்கும் தேவனிடமிருந்து வந்த எந்த வார்த்தையும் நிறைவேறக்கூடாதபடி வல்லமையற்றதாய் இருக்காது. வேதத்தில் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற ஒவ்வொரு வார்த்தையும் வல்லமை வாய்ந்தது, மற்றும் அவை நிறைவேற்றப்படும். அவருடைய வார்த்தையை விசுவாசித்தல் என்பதற்கு, நாம் அவருடைய வார்த்தையுடன் உடன்படுகிறோம் என்று அர்த்தமாகும். "உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது" என்று மரியாள் சொன்னதுபோல் நாம் ஒப்புக்கொள்கிறோம், மற்றும் சொல்கிறோம். அவருடைய வார்த்தையுடனான நமது உடன்படிக்கையில் நாம் எப்படி சிந்திக்கிறோம், பேசுகிறோம், மற்றும் செயல்படுகிறோம் என்பவைகளை உள்ளடக்கியதாகும். நாம் தேவனுடைய வார்த்தைக்கு முரணாகப் பேசிவிட்டு, அவருடைய வார்த்தைக்கு உடன்படுகிறோம் என்று சொல்ல முடியாது. நாம் தேவனுடனும் தேவனுடைய வார்த்தையுடனும் உடன்படுகிறோம் என்றால், நம்முடைய வார்த்தைகளும் அவருடைய வார்த்தையுடன் ஒத்துப்போக வேண்டும். நாம் நம்முடைய விசுவாசத்தைப் பேசும்போதும், அவருடைய வார்த்தைக்கு உடன்படும்போதும், கர்த்தரால் நமக்குச் சொல்லப்பட்ட காரியங்கள் நிறைவேற்றப்படும்.

# 43

# நோய்களை விட்டு வெளியேறுமாறு கட்டளையிடுங்கள்

**லூக்கா 4:38,39**

**[38]பின்பு அவர் ஜெப ஆலயத்தை விட்டுப் புறப்பட்டு, சீமோன் வீட்டில் பிரவேசித்தார்; சீமோனுடைய மாமி கடும் ஜுரமாய்க் கிடந்தாள். அவளுக்காக அவரை வேண்டிக்கொண்டார்கள்.**
**[39]அவர் அவளிடத்தில் குனிந்துநின்று, ஜுரம் நீங்கும்படி கட்டளையிட்டார், அது அவளை விட்டு நீங்கிற்று; உடனே அவள் எழுந்திருந்து அவர்களுக்குப் பணிவிடை செய்தாள்.**

நம் வாழ்விலும் ஊழியத்திலும் நாம் கர்த்தராகிய இயேசுவைப் பின்பற்றுகிறோம். ஜனங்களின் நோய்கள் மற்றும் வியாதிகளைக் குணப்படுத்த இயேசு எவ்வாறு அவர்களுக்கு ஊழியம் செய்தார்? நோயையும் வியாதியையும் நீக்குமாறு பிதாவிடம் இயேசு ஜெபம் செய்வததை நாம் உண்மையில் காணவில்லை. ஆம், இயேசு பிதாவோடு ஐக்கியங்கொண்டு ஜெபத்தில் அதிக நேரம் செலவிட்டார். ஆனால் நோய்களையும் வியாதிகளையும் கையாள்வதில், இயேசு வியாதியை விட்டு வெளியேறும்படி கட்டளையிடும் அதிகாரத்துடன் பேசினார். லூக்கா 4:38,39 என்பது அதற்கு ஒரு உதாரணம். கர்த்தராகிய இயேசு ஜுரத்தைக் கடிந்துகொண்டார். அவர் ஜுரத்துடன் பேசி, அவளை விட்டு வெளியேறும்படி கட்டளையிட்டார், அது உடனடியாக வெளியேறியது.

இயேசு எப்போதும் சரியானதைச் செய்தார். அவர் நித்திய வார்த்தையாக இருக்கிறார். இதுவரை நமது இறையியலில் இயேசு செய்தது போல் நோய்களுடனும் வியாதிகளுடனும் பேசுவது உள்ளடக்கவில்லை என்றால், நமது இறையியல்

மாற வேண்டும் மற்றும் நமது இறையியலை இயேசு கூறியவற்றோடும் அவர் செய்தவற்றோடும் இணைக்க வேண்டும்.

நீங்களும் நானும் இயேசு செய்த கிரியைகளையும் இன்னும் பெரிய கிரியைகளையும் செய்ய வேண்டும் (யோவான் 14:12). நிச்சயமாகவே, அவர் அதைச் செய்ததைப் போலவே நாமும் செய்ய வேண்டும். இயேசு நோய் மற்றும் வியாதியிடம் பேசி, அவர்களை விட்டு வெளியேறும்படி அவைகளுக்குக் கட்டளையிட்டார். எனவே, நீங்களும் நானும் அதைப்போலவே பேச வேண்டும். நோய்களை விட்டு வெளியேறுமாறு கட்டளையிட வேண்டும். நாம் மற்றவர்களுக்கு ஊழியம் செய்யும்போது நம் சொந்த சரீரங்களுக்காகவும் இதைச் செய்யலாம். இயேசுவைப் பின்பற்றுங்கள். அவர் செய்ததைச் செய்யுங்கள். உங்கள் வார்த்தைகள் அவர் உங்களுக்கு வழங்கிய அதிகாரத்தின் வெளிப்பாடாகும். நோய்களை விட்டு வெளியேறுமாறு கட்டளையிடுங்கள். உங்கள் விசுவாசத்தைப் பேசுங்கள்.

# 44

# புயலிடம் பேசுங்கள்

**லூக்கா 8:22-25**

**22பின்பு ஒருநாள் அவர் தமது சீஷரோடுங்கூடப் படவில் ஏறி: கடலின் அக்கரைக்குப் போவோம் வாருங்கள் என்றார்; அப்படியே புறப்பட்டுப் போனார்கள்.**

**23படவு ஓடுகையில் அவர் நித்திரையாயிருந்தார். அப்பொழுது கடலிலே சுழல்காற்றுண்டானதால், அவர்கள் மோசமடையத்தக்கதாய்ப் படவு ஜலத்தினால் நிறைந்தது.**

**24அவர்கள் அவரிடத்தில் வந்து, ஐயரே, ஐயரே, மடிந்துபோகிறோம் என்று அவரை எழுப்பினார்கள்; அவர் எழுந்து, காற்றையும் ஜலத்தின் கொந்தளிப்பையும் அதட்டினார்; உடனே அவைகள் நின்று போய், அமைதலுண்டாயிற்று.**

**25அவர் அவர்களை நோக்கி: உங்கள் விசுவாசம் எங்கே என்றார். அவர்கள் பயந்து ஆச்சரியப்பட்டு: இவர் யாரோ, காற்றுக்கும் ஜலத்துக்கும் கட்டளையிடுகிறார், அவைகளும் இவருக்குக் கீழ்ப்படிகிறதே என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள்.**

இயேசு காற்றுடனும் தண்ணீருடனும் பேசி, அமைதியாக இருக்கும்படி கட்டளையிட்டார், அவைகள் அவருக்குக் கீழ்ப்படிந்தன. இயேசு தம்முடைய சீஷர்களிடம் திரும்பி, “உங்கள் விசுவாசம் எங்கே?” என்று கேட்டார், இந்த சூழ்நிலையை அவர்கள் தங்கள் விசுவாசத்தினால் கையாண்டிருக்க முடியும் என்பதையே இது குறிக்கிறது. அவர் செய்ததை அவர்களும் கூட தங்கள் விசுவாசத்தினால் செய்திருக்க முடியும்.

கர்த்தராகிய இயேசு நமக்கு முன்மாதிரியாக இருந்து, பிதாவோடு வாழ்வதற்கும் நடப்பதற்குமான வழியை நமக்குக் காட்டினார். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தினால் வாழ்வதும் ஊழியம் செய்வதும் எப்படி என்பதைக் காட்ட, அவர் நமக்கு முன்மாதிரியாக வாழ்ந்து காட்டினார்.

விசுவாசம் நம் வாழ்வில் என்ன செய்ய முடியும் என்பதையும் அவர் நமக்கு முன்மாதிரியாகக் காட்டினார். அவர் உயிரற்ற பொருட்களுடன் பேசினார்—அத்தி மரம், நோய், வியாதி, காற்று மற்றும் அலைகள் போன்றவற்றுடன் பேசினார். கீழ்ப்படியும்படி அவைகளுக்குக் கட்டளையிட்டார், அவை கீழ்ப்படிந்தன. இயேசு செய்ததை நாம் பின்பற்ற வேண்டுமா? நிச்சயமாக!

அடுத்த முறை நீங்கள் புயலை எதிர்கொள்ளும் போது—அது உண்மையிலேயே காற்று, அலைகள் அல்லது வாழ்க்கையின் சூழ்நிலைகளில் வேறு எந்த வகையான “புயலாக” இருந்தாலும், இயேசு என்ன செய்வார் என்பதை யோசித்து, அதையே நீங்களும் செய்யுங்கள். புயலைப் பார்த்துப் பேசுங்கள். அமைதியாக இருக்கும்படி அவைகளுக்குக் கட்டளையிடுங்கள். இடையூறுகளைத் திரும்பப் பெறவும், நிறுத்தவும், அமைதியாக இருக்கவும் அவைகளுக்குக் கட்டளையிடுங்கள். குழப்பத்தின் புயலை, தீய எண்ணத்தின் புயலை,வதந்திகளின் புயலை, கருத்து வேறுபாடுகளின் புயலை,சச்சரவுகளின் புயலை, எது சரியில்லையோ கட்டளையிடுங்கள்—அதை நிறுத்தும்படி கட்டளையிடுங்கள்.

# 45

# மக்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டனர் என்று அறிவியுங்கள்

**லூக்கா 13:10-16**

**10ஒரு ஓய்வுநாளில் அவர் ஜெபஆலயத்தில் போதகம்பண்ணிக்கொண்டிருந்தார்.**

**11அப்பொழுது பதினெட்டு வருஷமாய்க் பலவீனப்படுத்தும் ஆவியைக் கொண்ட ஒரு ஸ்திரீ அங்கேயிருந்தாள். அவள் எவ்வளவும் நிமிரக்கூடாத கூனியாயிருந்தாள்.**

**12இயேசு அவளைக் கண்டு, தம்மிடத்தில் அழைத்து: ஸ்திரீயே, உன் பலவீனத்தினின்று விடுதலையாக்கப்பட்டாய் என்று சொல்லி,**

**13அவள்மேல் தமது கைகளை வைத்தார்; உடனே அவள் நிமிர்ந்து, தேவனை மகிமைப்படுத்தினாள்.**

**14இயேசு ஓய்வுநாளிலே சொஸ்தமாக்கினபடியால், ஜெப ஆலயத்தலைவன் கோபமடைந்து, ஜனங்களை நோக்கி: வேலைசெய்கிறதற்கு ஆறுநாள் உண்டே, அந்த நாட்களிலே நீங்கள் வந்து சொஸ்தமாக்கிக்கொள்ளுங்கள், ஓய்வுநாளிலே அப்படிச் செய்யலாகாது என்றான்.**

**15கர்த்தர் அவனுக்குப் பிரதியுத்தரமாக: மாயக்காரனே, உங்களில் எவனும் ஓய்வுநாளில் தன் எருதையாவது தன் கழுதையையாவது தொழுவத்திலிருந்து அவிழ்த்துக்கொண்டுபோய், அதற்குத் தண்ணீர் காட்டுகிறதில்லையா?**

**16இதோ, சாத்தான் பதினெட்டு வருஷமாய்க் கட்டியிருந்த ஆபிரகாமின் குமாரத்தியாகிய இவளை ஓய்வுநாளில் இந்தக் கட்டிலிருந்து அவிழ்த்துவிடவேண்டியதில்லையா என்றார்.**

இந்தப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஸ்திரீக்கு 18 வருடங்களாக முதுகில் பிரச்சினை இருந்தது. அவள் நிமிரமுடியாத கூனியாய் இருந்தாள். சாத்தான் அவளைக் கட்டிவைத்து, கைதியாக வைத்திருந்தான். இந்த பிரச்சனையில் தொந்தரவு செய்து கொண்டிந்தது சரீரத்தை

பெலவீனப்படுத்தும் ஒரு ஆவியாகும். இயேசு அவளுக்கு எப்படி ஊழியம் செய்தார்? அவர் வார்த்தைகளைப் பேசினார், மற்றும் அவளைத் தொட்டார். அவர், “ஸ்திரீயே, உன் பலவீனத்தினின்று விடுதலையாக்கப்பட்டாய்” என்று சொன்னார். பலவீனமான ஆவியின் மூலம் 18 ஆண்டுகளாக சாத்தான் செய்துகொண்டிருந்ததை அவருடைய அதிகார வார்த்தைகள் ஒரு நொடியில் அழித்துவிட்டன.

இயேசுவின் விசுவாசிகளாகிய நாம் சர்ப்பங்களையும் தேள்களையும் மற்றும் சத்துருவின் சகல வல்லமைகளையும் மிதித்துப்போட அதிகாரம் பெற்றுள்ளோம் (லூக்கா 10:19). இயேசுவின் அதிகாரம், உங்களையும் என்னையும் போன்ற விசுவாசிகளால் ஒருங்கிணைந்த அவருடைய சரீரமாகிய சபையின் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது. நாம் பேசும் வார்த்தைகளால் அதிகாரம் செயல்படுத்தப்படுகிறது. அதிகாரத்துடன், ஜனங்கள் தங்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டதாக அறிவிக்கிறோம். அடிமைத்தனத்தில் கட்டுண்டவர்களைப் பார்த்து, “இயேசுவின் நாமத்தில், உங்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுபடுங்கள்” என்று அறிவிக்கிறோம். பயத்தில் கட்டுண்டவர்களுக்கு, “இயேசுவின் நாமத்தில், இந்த வேதனை பயத்திலிருந்து விடுபடுங்கள்” என்று அறிவிக்கிறோம். இதேபோல், பிற வகையான அடிமைத்தனங்களிலிருந்து மக்களை விடுவிக்கிறோம். அதிகார வார்த்தைகளைப் பேசுங்கள். மக்களை அவர்களின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பதாக அறிவியுங்கள்.

# 46

# அபிஷேகிக்கப்பட்ட வார்த்தைகள் ஆவியில் ஜீவனை சுமக்கிறது

**யோவான் 6:63**

**ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும், ஜீவனாயும் இருக்கிறது.**

இயேசு தம்மில் நிலைத்திருப்பதையும், தம்முடைய மாம்சத்தைப் புசித்து, தம்முடைய இரத்தத்தைப் பானம்பண்ணுவதையும் பற்றி தம்முடைய சீஷர்களிடம் அப்போதுதான் பேசி முடித்திருந்தார். பின்னர் அவர் நேரடியான அர்த்தத்துடன், இயற்கையான விஷயங்களைப் பற்றி பேசவில்லை என்பதை அவர்களுக்குத் தெரியப்படுத்தும்படிக்கு, ஆவியானவரே ஜீவனைக் கொடுப்பவர் (தெய்வீக ஜீவன்) என்பதையும் மாம்சத்தால் (இயற்கை) இதைச் செய்ய முடியாது என்பதையும் அவர் தெளிவுபடுத்தினார். பின்னர் அவர் தமது வார்த்தைகளைச் சுட்டிக்காட்டினார். அவர் பேசிய வார்த்தைகள் ஆவியாயும், ஆவிக்குரியவைகளாயும் இருந்தன, ஆவியாய் இருந்த அவருடைய வார்த்தைகள் தேவனுடைய ஆவியிலிருந்து ஜீவனை அவர்களுக்குக் கொண்டுவருவதாய் இருந்தன. இயேசு ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டிருந்தார். அவர் பேசும்போது, அவருடைய வார்த்தைகள் ஆவியின் ஜீவனை அவரைக் கேட்போருக்கு எடுத்துச் சென்றன.

நாம் பரிசுத்த ஆவியால் அபிஷேகம் செய்யப்பட்டிருக்கிறோம் (2 கொரிந்தியர் 1:21). நம் மூலம் செயல்படும் அவரது அபிஷேகத்தால், நாம் பேசும் வார்த்தைகளானது தேவனுடைய ஆவியின் ஜீவனை

சுமந்துசெல்பவைகளாக இருக்கும்படி அவைகளைப் பயன்படுத்துகிறார். எனவே, நாம் அபிஷேகத்தின்கீழ் பேசும்போது, அல்லது ஆவியானவரால் ஏவப்பட்டபடி பேசும்போது, அந்த வார்த்தைகள் இயற்கைக்கு அப்பாற்பட்ட காரியங்களை உண்டாக்குகின்றன. அவை தேவனுடைய ஜீவனை ஜனங்களுக்கு வெளியிடுகின்றன. அவை அனைத்து சந்தர்ப்பங்களிலும் சூழ்நிலைகளிலும் தேவனுடைய வல்லமையை வெளிப்படுத்துகின்றன. அந்த வார்த்தைகள் நம் மண்டலங்களுக்குள் தேவன் விடுவிக்க விரும்புவதை சுமந்து செல்கின்றன. அபிஷேகம் செய்யப்பட்ட வார்த்தைகள் ஆவியானவரின் ஜீவனை சுமந்து செல்கின்றன என்பதை அறிந்து, ஆவியானவர் உங்களை ஏவும்போது தைரியமாகப் பேசுங்கள்.

# 47

# விசுவாசத்தில் கட்டளையிடுங்கள்

**யோவான் 11:40-43**

**40இயேசு அவளை நோக்கி: நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்று நான் உனக்குச் சொல்லவில்லையா என்றார்.**

**41அப்பொழுது மரித்தவன் வைக்கப்பட்ட இடத்திலிருந்த கல்லை எடுத்துப் போட்டார்கள். இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து: பிதாவே, நீர் எனக்குச் செவிகொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன்.**

**42நீர் எப்பொழுதும் எனக்குச் செவிகொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன்; ஆனாலும் நீர் என்னை அனுப்பினதைச் சூழ்ந்து நிற்கும் ஜனங்கள் விசுவாசிக்கும்படியாக அவர்கள் நிமித்தம் இதைச் சொன்னேன் என்றார்.**

**43இவைகளைச் சொன்னபின்பு: லாசருவே, வெளியே வா என்று, உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார்.**

மரித்து நான்கு நாட்களாகியிருந்த லாசருவின் கல்லறைக்கு முன்பாக நின்று, கர்த்தராகிய இயேசு மார்த்தாளைப் பார்த்து, ‘நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய்’ என்று உறுதியளித்தார். ஏற்கனவே தனது ஜெபத்தைக் கேட்டதற்காக அவர் பிதாவுக்கு நன்றி தெரிவித்தார். பின்னர் இயேசு, “லாசருவே, வெளியே வா” என்று கட்டளையிடும் வார்த்தைகளைப் பேசினார்.

இயேசு பிதாவிடம் ஜெபம் செய்தார். அவருடைய விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டதை அவர் அறிந்தார். ஆனால் தாம் விரும்பிய முடிவு நடைபெறுவதற்கு இயற்கை மண்டலத்தில் கட்டளையிடும் வார்த்தைகளைப் பேசினார். தேவனுடைய மகிமையையும், தேவனுடைய வல்லமையான கிரியைகளையும் நாம் காண்போம் என்று விசுவாசிக்கிறோம். நாமும் இயேசுவைப் போல விசுவாசத்தோடு ஜெபிக்கிறோம்.

நாமும் இயேசுவைப் போல விசுவாசத்துடன் கட்டளையிடும் வார்த்தைகளைப் பேச வேண்டும்.

நீங்கள் எதற்காக தேவனை விசுவாசிக்கிறீர்கள்? சில சமயங்களில், லாசருவைப்போல, தேவனிடத்தில் நாம் எதிர்பார்த்துக் கொண்டிருப்பது, கல்லறையில் இறந்து கிடக்கலாம். காலம் கடந்துவிட்டதைப் போல் தோன்றலாம். சற்று தாமதமாகிவிட்டதாகத் தெரியலாம். ஆனால் தேவனுடைய வாக்குத்தத்தம் மிகவும் தெளிவானது. நாம் விசுவாசித்தால் நாம் தேவனுடைய மகிமையைக் காண்போம். தேவனுடைய மகத்தான கிரியைகளைக் காண்போம். நாம் விசுவாசமான ஜெபங்களை ஜெபிக்க வேண்டும். மேலும் நாம் விசுவாசத்தில் கட்டளையிட வேண்டும். உங்கள் விசுவாசத்தைத் தைரியமாகப் பேசுங்கள். உங்கள் “லாசருவை” வெளியே வரும்படி கட்டளையிடுங்கள்!

# 48

# வார்த்தை உங்களை உங்கள் சுதந்தர வீதத்திற்குள் கொண்டுவருகிறது

**அப்போஸ்தலர் 20:32**

**இப்பொழுதும் சகோதரரே, நீங்கள் பக்திவிருத்தியடையவும் பரிசுத்தமாக்கப்பட்ட அனைவருக்குள்ளும் உங்களுக்குச் சுதந்திரத்தைக் கொடுக்கவும் வல்லவராயிருக்கிற தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும் உங்களை ஒப்புக்கொடுக்கிறேன்.**

தேவனுடைய வார்த்தை நம்மைக் கட்டியெழுப்புகிறது மற்றும் இயேசு கிறிஸ்துவில் பரிசுத்தமாக்கப்பட்ட அனைவருக்கும் சொந்தமான சுதந்தர-வீதத்தில் (உடைமையாக்க) நடக்க உதவுகிறது என்பதை அப்போஸ்தலனாகிய பவுல் தெளிவுபடுத்துகிறார். நிச்சயமாக, நாம் அனைவரும் நம் சுதந்திரவீதத்திற்குள் நடக்க விரும்புகிறோம். தேவன் நமக்காக வழங்கிய அனைத்தையும், வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும், அவரால் மீட்கப்பட்ட குமாரர்கள் மற்றும் குமாரத்திகளாக அனுபவிக்க விரும்புகிறோம். ஆனால் நாம் உள்ளான நபரில் கட்டியெழுப்பப்படுவதற்கு, தேவனுடைய வார்த்தையில் நாம் உள்நோக்கத்தோடே ஈடுபட வேண்டும் அதனால் தேவன் நமக்கு கிடைக்க செய்திருக்கும் ஏற்பாடுகள் மற்றும் சிலாகியங்களில் நம்மால் நடக்கமுடியும்.

தேவனுடைய வார்த்தையில் நாம் ஈடுபட பல வழிகள் உள்ளன. நாம் அவருடைய வார்த்தையைப் படிக்க வேண்டும், அவருடைய வார்த்தையின் வெளிப்பாட்டைப் பெற வேண்டும், அவருடைய வார்த்தையை தியானிக்க வேண்டும், அவருடைய வார்த்தை நம்மில் வாசம் செய்ய

(நிலைத்திருக்க) அனுமதிக்க வேண்டும், அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிய வேண்டும். ரோமர் 10:17 சொல்கிறபடி அவருடைய வார்த்தை நம் இருதயங்களில் விசுவாசத்தை உண்டாக்குகிறது. மேலும், இந்தப் புத்தகம் முழுவதும் நாம் பார்த்தபடி, தேவனுடைய வார்த்தையின் மீதான நம்முடைய விசுவாசத்தைப் பேச வேண்டும். நாம் இதைச் செய்யும்போது தேவனுடைய வார்த்தையுடன் ஈடுபடுகிறோம். நமது சுதந்திரவீதத்தில் நடப்பதற்கான திறவுகோல்களில் ஒன்று, நம் வாழ்வில் தேவனுடைய வார்த்தையைப் பேசுவதாகும். நிச்சயமாக, நாம் இதை ஒரு அர்த்தமற்ற பாராயணமாகவோ அல்லது வெற்று சடங்காகவோ செய்வதில்லை. தேவன் மீதும் அவருடைய வார்த்தையின் மீதும் நம்பிக்கை வைத்து நாம் வார்த்தையைப் பேசுகிறோம். நாம் இதைச் செய்யும்போது, நம்முடைய சுதந்தரவீதத்தில் நடக்க அவருடைய வார்த்தையால் நாம் கட்டியெழுப்பப்படுகிறோம். தேவன் மற்றும் அவருடைய வார்த்தையின் மீதான உங்கள் விசுவாசத்தையும் பேசுங்கள்.

# 49

# என்னிடம் சொன்னது போலவே இருக்கும் என்று நான் விசுவாசிக்கிறேன்

**அப்போஸ்தலர் 27:23-25**

**23 ஏனென்றால், என்னை ஆட்கொண்டவரும் நான் சேவிக்கிறவருமான தேவனுடைய தூதனானவன் இந்த இராத்திரியிலே என்னிடத்தில் வந்துநின்று;**

**24 பவுலே, பயப்படாதே, நீ இராயனுக்குமுன்பாக நிற்கவேண்டும். இதோ, உன்னுடனேகூட யாத்திரைபண்ணுகிற யாவரையும் தேவன் உனக்குத் தயவுபண்ணினார் என்றான்.**

**25 ஆனபடியினால் மனுஷரே, திடமனதாயிருங்கள். எனக்குச் சொல்லப்பட்ட பிரகாரமாகவே நடக்கும் என்று தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறேன்.**

ஒரு தேவதூதன் பவுலுக்கு தேவனிடத்திலிருந்து ஒரு செய்தியைக் கொண்டுவந்தான். மேலும் பவுல் தேவன் மீதுள்ள தனது விசுவாசத்தைத் தைரியமாக அறிவித்து, தேவதூதன் மூலம் தனக்குச் சொல்லப்பட்டதைப் போலவே நடக்கும் என்று சொன்னான்.

தேவதூதர்களின் வார்த்தையை விட உறுதியான வார்த்தையாகிய பரிசுத்த வேதாகமமாகிய தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தை நம்மிடம் உண்டு. தேவன் எழுதப்பட்ட வார்த்தையிலிருந்து, நம்மிடம் பேசியவைகளை, கிறிஸ்துவுக்குள் அவர் ஏற்கனவே நமக்காக நிறைவேற்றியதாகக் கூறியவற்றை,, இந்த வாழ்வில் நமக்காகச் செய்வதாக வாக்களித்த விஷயங்களை எடுத்துக்கொண்டு, அவர் பேசிய வார்த்தையில் நம்முடைய விசுவாசத்தை அறிவிக்கலாம். தேவன் தம்முடைய பரிசுத்த

வார்த்தையில் கூறியது போலவே நடக்கும் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்கள் என்பதை தைரியமாக அறிவியுங்கள். உங்கள் நிகழ்காலத்திலும் உங்கள் எதிர்காலத்திலும் உள்ள அனைத்தும் தேவன் சொன்னவற்றுடன் ஒத்துப்போகும்.

பின்னர், ஆவியின் உள்ளார்ந்த சாட்சியின் மூலமாகவும், தீர்க்கதரிசனத்தின் மூலமாகவும், சொப்பனங்கள் மற்றும் தரிசனங்கள் மூலமாகவும், தேவன் தம்முடைய பரிசுத்த ஆவியால் நம்மிடம் பேசும் நேரங்கள் உள்ளன. ஒரு குறிப்பிட்ட விஷயத்தை சோதனை செய்த பின்பு, பரிசுத்த ஆவியானவரே நம்மிடம் குறிப்பிட்ட வார்த்தையை பேசியிருக்கிறார் என்று உறுதி கிடைத்த உடனே, நமக்குச் சொல்லப்பட்ட வார்த்தை, நமக்குச் சொல்லப்பட்டதைப் போலவே நடக்கும் என்று நாங்கள் நம்புகிறோம் என்று தைரியமாக அறிவிக்க முடியும்.

"நான் தேவனை விசுவாசிக்கிறேன்" என்று தைரியமாக அறிவியுங்கள்.

தேவன் என்னைப் பற்றித் தம்முடைய வார்த்தையில் கூறியது போலவே இருக்கும் என்று நான் விசுவாசிக்கிறேன்

# 50

# இல்லாதவைகளை இருக்கிறவைகளை போல அழையுங்கள்

ரோமர் **4:17**

**("நான் உன்னை அநேக தேசங்களுக்குத் தகப்பனாக ஏற்படுத்தினேன்" என்று எழுதப்பட்டிருக்கிறபடி) அநேக ஜாதிகளுக்கு உன்னைத் தகப்பனாக ஏற்படுத்தினேன் என்று எழுதியிருக்கிறபடி, அவன் தான் விசுவாசித்தவருமாய், மரித்தோரை உயிர்ப்பித்து, இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல் அழைக்கிறவருமாயிருக்கிற தேவனுக்கு முன்பாக நம்மெல்லாருக்கும் தகப்பனானான்.**

அப்போஸ்தலனாகிய பவுல், பரிசுத்த ஆவியானவரால், ஆபிரகாமின் விசுவாச வாழ்வைப் பற்றிய நுண்ணறிவுகளை நமக்கு வெளிப்படுத்துகிறார். ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான். பூமியில் தேவனுடைய திட்டத்தை வெளியிட ஆபிரகாம் விசுவாசத்தின் மூலம் தேவனுடன் இணைந்து செயல்பட்டான். ஆபிரகாம் விசுவாசித்த தேவன், மரித்தவர்களை உயிர்ப்பித்து, இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல அழைப்பவராய் இருக்கிறார். ஆபிரகாம் மரித்ததாகத் தோன்றியவைகளை, குறிப்பாக, அவர்களின் வயதான சரீரங்கள் மற்றும் சாராளின் கர்ப்பப்பை போன்றவை ஜீவனோடு இருக்கின்றன என்று நம்ப வேண்டியிருந்தது. ஆபிரகாம் இல்லாதவைகளை, அவைகள் இருக்கிறதைப்போல அழைக்க கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. தேவன் அதை முதலில் செய்தார். ஆபிரகாமுக்கு பிள்ளைகள் இல்லாதபோதும், தேவன் ஆபிரகாமைப் பற்றிப் பேசி, ஆபிரகாமை ஒரு பெரிய ஜாதிக்குத் தகப்பனாக்கினார் என்று சொன்னார். பின்னர் தேவன் ஆபிராம் மற்றும் சாராயின் பெயர்களை ஆபிரகாம்

மற்றும் சாராள் என்று மாற்றினார், இதன் விளைவாக, அவர்கள் இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல அழைக்கச் செய்தார்.

விசுவாசம் என்பது உரிமைப் பத்திரம், எதிர்பார்க்கிற அல்லது விரும்புகிற விஷயங்களை உரிமை கோருவதற்கான ஆதாரம். விசுவாசம் என்பது நம்பிக்கை, இதுவரை பார்த்திராத விஷயங்கள், சரீரக் கண்களுக்கு இன்னும் காணப்படாத விஷயங்கள் பற்றிய நம்பிக்கையான உறுதியாகும். இந்த வகையான விசுவாசம், அதை பேசும்போது, இயற்கையில் உள்ளபடி அல்ல, மாறாக அவை ஆவியின் மண்டலத்தில் இருப்பதைப்போலவே அழைக்கிறது. இவ்வாறான விசுவாசம் இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல அழைக்கிறது. தேவன் சொன்னவுடன் அது நிறைவேறும் என்பது நமது விசுவாசமாகும். உங்கள் விசுவாசத்தை பேசுங்கள். தேவன் அவற்றை ஏற்கனவே பேசியதால் இயற்கையில் இதுவரை இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல அழையுங்கள்.

# 51

# அவருடைய வாக்குத்தத்தத்தின்படி பேசுங்கள்

ரோமர் **4:18-21**

**18உன் சந்ததி இவ்வளவாயிருக்கும் என்று சொல்லப்பட்டபடியே, தான் அநேக ஜாதிகளுக்குத் தகப்பனாவதை நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும், அதை நம்பிக்கையோடே விசுவாசித்தான்.**
**19அவன் விசுவாசத்திலே பலவீனமாயிருக்கவில்லை; அவன் ஏறக்குறைய நூறுவயதுள்ளவனாயிருக்கும்போது, தன் சரீரம் செத்துப்போனதையும், சாராளுடைய கர்ப்பம் செத்துப்போனதையும் எண்ணாதிருந்தான்.**
**20தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து அவன் அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல்,**
**21தேவன் வாக்குத்தத்தம்பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான்.**

தேவன் வாக்குப்பண்ணியதைப் பெறுவதற்கு ஆபிரகாம் எவ்வாறு தேவனை விசுவாசித்து நடந்தான் என்பதை அப்போஸ்தலனாகிய பவுல் மூலம் பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்துகிறார். விசுவாசிப்பதற்கான எந்த வாய்ப்பும் இல்லாதபோதிலும், ஆபிரகாம் விசுவாசித்தான் மற்றும் விசுவாசத்தினால் ஈர்க்கப்பட்டான், அவன் விசுவாசித்தான். அவன் எதை விசுவாசித்தான்? தேவன் தன்னைக் குறித்து சொன்னபடியே, ஆகிவிடுவான் என்று அவன் விசுவாசித்தான். உண்மைகள் ஒருபுறம் இருந்தபோதிலும்—தனது சரீரத்தையும் சாராளின் சரீரத்தையும் பற்றிய உண்மை, அவனது விசுவாசத்தைக் கட்டுப்படுத்த அவன் அனுமதிக்கவில்லை. அவனுக்கு தேவனிடத்திலிருந்து ஒரு வார்த்தை இருந்தது. தேவன் அவனுடைய நிலைமையைப் பற்றிப் பேசியிருந்தார், தேவனிடத்திலிருந்து வந்த

அந்த வார்த்தையே அவனுடைய வாழ்க்கையின் மீது இறுதி அதிகாரமுள்ளதாய் இருந்தது. தேவனுடைய வாக்குத்தத்தத்தின் மீதும், அந்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற வல்லவராகிய தேவன் மீதும் ஆபிரகாமின் விசுவாசம் நிலைத்திருந்தது. வாழ்க்கையில் சகலமும்—அவர் விசுவாசித்தது, அவர் செய்தது மற்றும் அவர் பேசியது அனைத்தும்—தேவன் சொன்னவற்றின்படி சீரமைக்கப்பட்டது. தேவன் சொன்னபடியே விசுவாசம் பேசுகிறது.

பெரும்பாலும் நம் சொந்த வாழ்வில், நமது தற்போதைய சூழ்நிலைகள், வேதத்தில் நமக்காக எழுதி வைக்கப்பட்டுள்ள அல்லது வாக்குப்பண்ணப்பட்டவற்றிற்கு முரணாக இருக்கலாம். தேவனுடைய வார்த்தை ஏதோவொன்றை வாக்குப்பண்ணியிருந்தது, ஆனால் நம்முடைய அனுபவங்கள் முற்றிலும் எதிர்மாறானவையாக இருந்திருக்கலாம். தேவன் யெகோவா ராஃப்பாவாக (Jehovah Rapha) இருக்கிறார் என்று தேவனுடைய வார்த்தை அறிவிக்கிறது, ஆனால், சரீரத்தை அழித்து நாசம்பண்ணும் வியாதி இருக்கலாம். நீங்கள் செய்வதெல்லாம் வாய்க்கும் என்று தேவனுடைய வார்த்தை அறிவிக்கிறது, அதே சமயம், உங்களது சமீபத்திய அனுபவங்கள் தோல்விகளின் சரமாக இருக்கலாம். தேவனுடைய வார்த்தை வெற்றியின் நிச்சயத்தை நமக்கு வாக்குப்பண்ணுகிறது, அதே நேரத்தில், பல பகுதிகளில் நீங்கள் தோல்வியை சந்தித்திருக்கலாம். நாம் என்ன செய்ய வேண்டும்? இவைகள்தான் தேவனுடைய சித்தம் என்பதைப்போல நம் அனுபவத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமா அல்லது தேவனுடைய வார்த்தையை நம் வாழ்வில் தேவனுடைய சித்தமாக ஏற்றுக்கொள்ள வேண்டுமா?

விசுவாசத்தில் ஆபிரகாமின் அடிச்சுவடுகளில் நடக்க நாம் அழைக்கப்பட்டுள்ளோம். நம்புவதற்கான எந்த

ஒரு சூழலும் இல்லாதபோதிலும், நாம் நம்பிக்கையோடு இருக்க வேண்டும் மற்றும் தேவனையும் அவருடைய வார்த்தையையும் விசுவாசிக்க வேண்டும். வாழ்வின் யதார்த்தங்கள் உங்கள் விசுவாசத்தைப் பலவீனப்படுத்த விடாதீர்கள். தேவனுடைய வார்த்தையில் உங்கள் விசுவாசத்தை நிலைநிறுத்துங்கள். விசுவாசம் அவருடைய வாக்குத்தத்தத்திற்கு ஏற்றபடி நம்மைப் பேச வைக்கிறது. உங்கள் விசுவாசத்தைப் பேசுங்கள்.

# 52

# வாழ்வில் ஆட்சி செய்யுங்கள்— ஆளுகை செலுத்தும் வார்த்தைகளைப் பேசுங்கள்

ரோமர் **5:17**

**அல்லாமலும், ஒருவனுடைய மீறுதலினாலே, அந்த ஒருவன் மூலமாய், மரணம் ஆண்டுகொண்டிருக்க, கிருபையின் பரிபூரணத்தையும் நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் பெறுகிறவர்கள் இயேசுகிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவார்களென்பது அதிக நிச்சயமாமே.**

ஆதாம் நம்மைக் கீழ்ப்படுத்திய எல்லாவற்றிலிருந்தும் கர்த்தராகிய இயேசு நம்மை வெளியே கொண்டுவந்தார். நாம் கிருபையின் பரிபூரணத்தையும், நீதியின் வரத்தையும் பெற்றுள்ளோம். தேவன் தம்முடைய கிருபையை நம் வாழ்வில் அளவில்லாமல் பொழிந்தருளியுள்ளார். கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தினால் அவர் தம்முடைய சொந்த நீதியை நமக்குப் பரிசாக அளித்துள்ளார். கடந்த காலத்தில் நாம் பாவிகளாக இருந்தோம். ஆனால் இப்போது காரியங்கள் மாறிவிட்டன. நாம் தேவனுடைய நீதியாய் இருக்கிறோம். நாம் தேவனுடைய கிருபையைப் பரிபூரணமாகப் பெற்றுள்ளோம். நமக்குத் தகுதியில்லாததை அல்லது நம்மால் ஒருபோதும் சம்பாதிக்க முடியாததை தேவன் கொடுப்பதே கிருபையாகும். தேவனுடைய கிருபையினாலே நமக்குக் கிடைக்கப்பெற்றது உண்மையிலேயே நம்முடையதாக இருக்கிறது. நாம் அதைப் பெற்றிருக்கிறோம். மகிழ்வதற்கும், வாழ்வதற்கும், நமக்குச் சொந்தமாக அதை வைத்திருப்பதற்கும் தேவன் அதைக் கொடுத்திருக்கிறார்.

தேவன் தம்முடைய கிருபையால் நமக்கு இலவசமாகக் கொடுத்த பல விஷயங்களில் ஒன்று, இயேசு கிறிஸ்துவினால் வாழ்க்கையில் ராஜாக்களைப் போல வாழவும் ஆட்சி செய்யவும் அவர் நம்மை நிலைநிறுத்தினார். இயேசுவின் மூலமாக, அதாவது, அவர் மூலமாகவும், அவர் அளித்த அதிகாரத்தின் மூலமாகவும், நாம் வாழ்க்கையில் ஆட்சி செய்து ஆளுகை செய்ய வேண்டும். இந்த உண்மையைப் புரிந்துகொள்ளுங்கள். நீங்கள் ஆவிக்குரிய அதிகாரமும் ஆதிக்கமும் கொண்டவர்களாய் இருக்கிறீர்கள். நீங்கள் இதைப் பயிற்சி செய்யாவிட்டால், இதனால் எந்தப் பயனும் இராது. இராஜாக்கள் என்ன செய்கிறார்கள்? இராஜாக்கள் தங்கள் வார்த்தைகளால் அதிகாரத்தையும் ஆதிக்கத்தையும் பயன்படுத்துகிறார்கள். அவர்கள் வார்த்தைகளைப் பேசுகிறார்கள், காரியங்களை ஆணையிடுகிறார்கள், அதனால் அவர்கள் ஆணையிடுவது அவர்களின் செல்வாக்கு நிறைந்த இடங்களில் நிலைநிறுத்தப்படுகிறது.

ஆதாம் நம்மை பாவத்திற்கும், சாத்தானுக்கும் அடிபணியச் செய்தான், அவனது வீழ்ச்சியினால் வந்த பிசாசுகள், நோய், வறுமை, பிசாசுகளின் அடக்குமுறை போன்றவற்றிற்கு கீழ்ப்படுத்தினான். ஆதாம் நம்மைக் கீழ்ப்படுத்திய எல்லாவற்றிலிருந்தும் கர்த்தராகிய இயேசு வெளியே கொண்டுவந்து, அவை எல்லாவற்றின்மீதும் வாழ்க்கையில் ஆட்சி செய்யவும் ஆளுகை செய்யவும் நம்மை நிலைநிறுத்தியுள்ளார். ஆனால் நாம் நமது ஆதிக்கத்தைச் செலுத்தாவிட்டால் அதை ஒருபோதும் அனுபவிக்க முடியாது. அதிகாரம் செலுத்தும் வார்த்தைகளைப் பேசுங்கள். கட்டளைகளைப் பிறப்பியுங்கள். வார்த்தையை அறிவியுங்கள். உங்கள் விசுவாசத்தைப் பேசுங்கள், உங்கள் ஆதிக்கத்தின் கீழ் உள்ள அனைத்தும் தேவனுடைய ராஜ்யத்தின் சத்தியத்தால் ஆளப்பட்டு நிர்வகிக்கப்படுவதாக.

# 53

# விசுவாசம் இப்படிப் பேசுகிறது

ரோமர் **10:6-8**

**6விசுவாசத்தினாலாகும் நீதியானது: கிறிஸ்துவை இறங்கிவரப்பண்ணும்படி பரலோகத்துக்கு ஏறுகிறவன் யார்? (அதாவது கிறிஸ்துவை மேலிருந்து கீழே வரச் செய்ய)**

**7அல்லது கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து ஏறிவரப்பண்ணும்படி பாதாளத்துக்கு இறங்குகிறவன் யார்? (அதாவது, கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்புவதற்காக) என்று என் உள்ளத்திலே சொல்லாதிருப்பாயாக என்று சொல்லுகிறதுமன்றி,**

**8 இந்த வார்த்தை உனக்குச் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது என்றும் சொல்லுகிறது; இந்த வார்த்தை நாங்கள் பிரசங்கிக்கிற விசுவாசத்தின் வார்த்தையே (அதாவது, நாங்கள் பிரசங்கிக்கும் விசுவாச வார்த்தை).**

ஆபிரகாம் தேவனை விசுவாசித்ததாகவும், தேவனால் அது அவனுக்கு நீதியாகக் எண்ணப்பட்டது என்று ரோமர் 4 ஆம் அதிகாரத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிட்டுள்ளான். கிறிஸ்துவில், நாம் பரிபூரணமாகக் கிருபையைப் பெற்றுள்ளோம் என்றும், தேவனுடைய வரமாகிய நீதி நமக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது என்றும் அவன் குறிப்பிடுகிறான். இப்போது நாம் தேவனுடன் சரியான நிலையில் இருக்கிறதினால், தேவன் மீதான விசுவாசம் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது? விசுவாசமும் நீதியுமுள்ள மக்களாகிய நாம் எப்படிப் பேசுகிறோம்?

நாம் நம்பிக்கையின்மை மற்றும் விரக்தியை வெளிப்படுத்தும் வார்த்தைகளைப் பேச மாட்டோம். தேவன் நமக்கு உதவிசெய்ய முடியாத அளவுக்கு தூரமாக பரலோகத்தில் இருப்பதுபோல் நாம் பேசமாட்டோம். தேவன் மரித்துவிட்டதைப் போலவும், நமக்கு உதவ

வல்லமையற்றவராக இருப்பதைப்போலவும் நாம் பேச மாட்டோம். மாறாக, அப்போஸ்தலனாகிய பவுல் பழைய ஏற்பாட்டு சத்தியத்தை, புதிய ஏற்பாட்டு விசுவாசிகளான நமக்குப் பயன்படுத்துகிறார். மோசே தேவனுடைய ஜனங்களுக்கு உபாகமம் 30:11-14 இல் சொன்னதையே அவன் நமக்குச் சொல்கிறான். தேவனுடைய வார்த்தை உங்களுக்கு அருகில் உள்ளது. தேவன் சொன்ன வார்த்தை உங்கள் வாயிலும் இருதயத்திலும் உள்ளது. இங்கே வெளிப்படையான புரிந்துகொள்ளுதல் என்னவென்றால், நீங்கள் அதை விசுவாசிக்கும்படிக்கு வார்த்தை உங்கள் இருதயத்தில் உள்ளது, மேலும் நீங்கள் அதை அறிக்கையிடும்படிக்கு வார்த்தை உங்கள் வாயில் உள்ளது. பின்னர் நாம் பிரசங்கிக்கும் இயேசுவின் சுவிசேஷத்தின் செய்தியான விசுவாச வார்த்தைக்கு அவன் அதைப் பயன்படுத்துகிறான்.

விசுவாசம் பேசுகிறது என்பதை நாம் அறிந்துகொள்வதே இங்கு முக்கியமான உண்மை. விசுவாசம் தேவனுடைய வார்த்தையைப் பேசுகிறது, அது நம் இருதயங்களிலும் வாயிலும் தொடர்ந்து வைக்கப்பட வேண்டும். நம்பிக்கையில்லாத வார்த்தைகளை ஒருபோதும் பேச வேண்டாம். விரக்தியுடன் பேச வேண்டாம். நீங்கள் அதை விசுவாசிக்கும்படிக்கு உங்கள் இருதயத்திலும், நீங்கள் பேசும்படி உங்கள் வாயிலும் தேவனுடைய வார்த்தை உள்ளது. வார்த்தையைப் பேசுங்கள். தேவனுடைய வார்த்தையில் உங்கள் விசுவாசத்தைப் பேசுங்கள்.

# 54

# அறிக்கையிடுதலில் இரட்சிப்பு

ரோமர் **10:6-10**

**6விசுவாசத்தினாலாகும் நீதியானது: கிறிஸ்துவை**
**இறங்கிவரப்பண்ணும்படி பரலோகத்துக்கு ஏறுகிறவன் யார்?**
**(அதாவது கிறிஸ்துவை மேலிருந்து கீழே இறங்கி வரச்செய்ய)**
**7அல்லது கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து ஏறிவரப்பண்ணும்படி**
**பாதாளத்துக்கு இறங்குகிறவன் யார்? (அதாவது, கிறிஸ்துவை**
**மரித்தோரிலிருந்து எழுப்புவதற்காக) என்று என் உள்ளத்திலே**
**சொல்லாதிருப்பாயாக என்று சொல்லுகிறதுமன்றி,**
**8இந்த வார்த்தை உனக்குச் சமீபமாய் உன் வாயிலும் உன்**
**இருதயத்திலும் இருக்கிறது என்றும் சொல்லுகிறது; இந்த வார்த்தை**
**நாங்கள் பிரசங்கிக்கிற விசுவாசத்தின் வார்த்தையே.**
**9என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே**
**அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று**
**உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்.**
**10நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக**
**வாயினாலே அறிக்கைபண்ணப்படும்.**

இந்தப் பத்தியிலிருந்து நாம் முன்னிலைப்படுத்த வேண்டிய மற்றொரு உண்மை என்னவென்றால், விசுவாசித்தல் மற்றும் அறிக்கையிடுதலின் முக்கியத்துவம். தேவனுடைய வார்த்தையை நம் இருதயங்களில் விசுவாசிப்பது தேவனுடனான சரியான நிலையில் நம்மை நிலைநிறுத்துகிறது (“ஒருவர் தன் இருதயத்தில் விசுவாசிப்பதன் மூலம் நீதி உண்டாகிறது”). தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொள்வதற்கு நாம் சரியான இடத்தில், சரியான நிலையில் நிறுத்தப்படுகிறோம். பின்னர் மற்றொரு அடியை எடுத்துவைக்க வேதம் நமக்கு அறிவுறுத்துகிறது. நம் வாயால் அதை அறிக்கையிடும்படி நாம் அறிவுறுத்தப்படுகிறோம், இதன் விளைவாக நாம்

இரட்சிப்பைப் பெறுகிறோம் அல்லது அனுபவிக்கிறோம் (“அறிக்கையிடுதல் இரட்சிப்புக்காக செய்யப்படுகிறது”).

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணம் மற்றும் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததன் மூலமாக நீதியையும் இரட்சிப்பையும் நமக்கு ஈவாகக் கிடைக்கச் செய்தார். அது எல்லோருக்கும் பொதுவானது. இரட்சிப்பு நமக்காக வழங்கப்பட்டுள்ளது, ஆனால் அதைப் பெற்றுக்கொள்ளும்படி நாம் விசுவாசித்து, அறிக்கையிடுகிறோம். அறிக்கையிடுதலின் முக்கியத்துவத்தைக் கவனியுங்கள். நாம் விசுவாசிக்கும்போது, நாம் பெற்றுக்கொள்ளும் நிலையில் இருக்கிறோம். ஆனால் அறிக்கையிடுதல் இரட்சிப்பை நமக்கு உடைமையாக்குகிறது.

புதிய ஏற்பாட்டில் நாம் புரிந்துகொண்டபடி, இரட்சிப்பு என்ற வார்த்தையானது நித்திய இரட்சிப்பு, பாவ மன்னிப்பு, பாவத்தின் மீதான ஜெயம், நோயிலிருந்து குணமடைதல், போராட்டத்தில் ஜெயம், சத்துருவின் ஒவ்வொரு கிரியையிலிருந்தும் விடுதலை, தீங்கிலிருந்து மீட்பு, ஆபத்திலிருந்து பாதுகாப்பு மற்றும் முழுமையான ஆரோக்கியம் போன்றவற்றை உள்ளடக்கிய ஒரு விரிவான வார்த்தையாகும். அதன் அர்த்தமானது இரட்சிக்கப்படுதல், குணமாக்கப்படுதல், விடுவிக்கப்படுதல், வெற்றி பெறுதல், காப்பாற்றப்படுதல், பாதுகாக்கப்படுதல் மற்றும் ஆரோக்கியமடைதல் என்பனவாகும். தேவனுடைய வார்த்தையை விசுவாசிப்பதும், தேவனுடைய வார்த்தையை அறிக்கையிடுவதும் இவை ஒவ்வொன்றையும் நம் அனுபவமாக்குகிறது. உங்கள் விசுவாசத்தைப் பேசுங்கள், ஏனென்றால் அறிக்கையிடுதலின் விளைவாக இரட்சிப்பு நடைபெறுகிறது.

# 55

# அவருடைய எல்லா வாக்குத்தத்தங்களுக்கும் "ஆம் மற்றும் ஆமென்" என்று அறிவியுங்கள்

**2 கொரிந்தியர் 1:19,20**

**19என்னாலும், சில்வானுவினாலும், தீமோத்தேயுவினாலும், உங்களுக்குள்ளே பிரசங்கிக்கப்பட்ட தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவும் ஆம் என்றும் அல்ல என்றும் இராமல், ஆம் என்றே இருக்கிறார்.**

**20எங்களால் தேவனுக்கு மகிமையுண்டாகும்படி, தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசுகிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறதே.**

தேவன் நம்மை சந்திக்கும் நேரங்களும் உண்டு, மற்றும் நம்மை சந்திக்காமல் போகும் நேரங்களும் உண்டு என்று மக்கள் நம்மிடம் அடிக்கடி சொல்வதை நாம் கேட்டிருப்போம். நமக்கு இன்னும் உறுதியாகத் தெரியவில்லை. சில நேரங்களில் தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நிறைவேறுகின்றன, சில சமயங்களில் அவை நிறைவேறாமல் போய்விடுகின்றன என்று மக்கள் சொல்கிறார்கள். தேவனை விசுவாசித்தபோதிலும் கூட, தோல்வியுற்ற, அல்லது மடிந்துபோன, அல்லது பேரழிவை அனுபவித்த அனைத்து மக்களையும் பார்க்கிறீர்கள். இவை அனைத்தும் யதார்த்தங்களும் உண்மைகளுமாய் இருக்கிறது என்றாலும், மனிதர்களின் அனுபவத்தினால், தேவன் யார் என்பதை அல்லது தேவனுடைய வார்த்தை என்ன சொல்கிறது என்பதை மாற்ற நமக்கு உரிமை உண்டா? தேவனையும் அவருடைய வார்த்தையையும் விட

அனுபவங்கள் நம்பகமானவையா? நாம் நமது இறையியலை மக்களின் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டோமா அல்லது தேவனையும் அவருடைய வார்த்தையையும் அடிப்படையாகக் கொண்டோமா?

சிலர் நினைப்பதைப்போல தேவன் மனதை மாற்றிக்கொள்பவர் அல்ல என்பதை அப்போஸ்தலனாகிய பவுல் தெளிவுபடுத்துகிறார். இயேசுவில், “ஆம்” மற்றும் “இல்லை” என்பது இல்லை, மாறாக எப்போதும் திட்டவட்டமான, “ஆம்” என்ற பதில் மட்டுமே உண்டு. தேவனிடத்தில் வஞ்சகம் எதுவும் இல்லை, இருமுகம் எதுவும் இல்லை, நிலையற்றது எதுவுமில்லை, அவர் ஒருபோதும் மாற்றத்திற்கு உட்பட்டவர் அல்ல (யாக்கோபு 1:17 இல் தி மெசேஜ் பைபிள் மற்றும் தி பாஸ்சின் ட்ரான்ஸ்லஷன் மொழிபெயர்ப்பின் அடிப்படையில்). கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் கொடுத்த வாக்குத்தத்தங்கள் அனைத்தும் “ஆம்” என்றே இருக்கிறது என்று அப்போஸ்தலனாகிய பவுல் தைரியமாக அறிவிக்கிறான். தேவனுடைய வாக்குத்தத்தத்தங்கள் அனைத்தும் மெய்யானவை மற்றும் உண்மையாய் நிறைவேறுபவையுமாகும், மேலும் அவை இயேசுவில் நிறைவேறுகின்றன. பின்னர் நாம் தேவனுடைய மகிமைக்காக எழுப்பும் “ஆமென்” என்ற வார்த்தையும் இருக்கிறது.

இயேசுவில் தேவனுடைய அனைத்து வாக்குத்தத்தங்களுக்கும் “ஆம் மற்றும் ஆமென்” என்று உள்ளது. இந்த எதிர்பார்ப்பை நாம் கொண்டிருக்க வேண்டும். நம் வாழ்வின் மூலம் தேவன் மகிமைப்படும்படியாக, தேவனுடைய வாக்குத்தத்தங்கள் அனைத்தும் இயேசுவில் நிறைவேற்றப்படுவதை நாம் காண்போம். அதாவது இயேசுவில், தேவனுடைய வாக்குத்தத்தங்கள் அனைத்தும் நன்மைக்கு ஏதுவானவையாக இருக்கின்றன என்ற இந்த சத்தியத்தில் நிலைகொண்டிருங்கள். அவைகள்

ஆம் என்றே இருக்கின்றன. தேவனுடைய அனைத்து வாக்குத்தத்தங்களின் மீதான உங்கள் விசுவாசத்தை அறிக்கையிடுங்கள். தேவனுடைய அனைத்து வாக்குத்தத்தங்களும் நிறைவேற்றப்படுவதை நீங்கள் நம்புகிறீர்கள் என்பதை நிரூபிக்கும் வகையில், நீங்கள் ஆம் என்றும் ஆமென் என்றும் அறிவியுங்கள்.

# 56

# நாம் விசுவாசிக்கிறோம், எனவே பேசுகிறோம்

**2 கொரிந்தியர் 4:13,14**

**[13]விசுவாசித்தேன், ஆகையால் பேசினேன் என்று எழுதியிருக்கிறபடி, நாங்களும் அந்த விசுவாசத்தின் ஆவியை உடையவர்களாயிருந்து, விசுவாசிக்கிறபடியால் பேசுகிறோம்.**
**[14] கர்த்தராகிய இயேசுவை எழுப்பினவர் எங்களையும் இயேசுவைக்கொண்டு எழுப்பி, உங்களுடனேகூடத் தமக்கு முன்பாக நிறுத்துவாரென்று அறிந்திருக்கிறோம்.**

அப்போஸ்தலனாகிய பவுல் சங்கீதம் 116:10 ஆம் வசனத்திலிருந்து இங்கே மேற்கோள் காட்டுகிறான். உண்மையில், அப்போஸ்தலனாகிய பவுல், பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலால், அந்த வசனத்தின் ஒரு பகுதியை மட்டும் மேற்கோள் காட்டுகிறான், ஒருவேளை விசுவாசிகளுக்கு அவன் பகிர விரும்பும் ஒரு குறிப்பிட்ட உண்மையை வலியுறுத்துவதற்காக அதைச் செய்கிறான். நாம் எதை விசுவாசிக்கிறோமோ அதையே பேசுகிறோம். நம் விசுவாசத்தை நாம் பேச வேண்டும். விசுவாசம் பேசுகிறது. "விசுவாசத்தின் ஆவி" ஏற்பாடுகள் முழுவதும் மாறிவிடவில்லை. பழைய உடன்படிக்கையில் உள்ளவர்களுக்காயினும் அல்லது புதிய உடன்படிக்கையில் உள்ளவர்களுக்காயினும் தேவன் மீதான விசுவாசத்தின் சாராம்சம் மாறிவிடவில்லை. விசுவாசத்தின் கொள்கை இன்னும் மாறாததாய் இருக்கிறது, அது—நான் விசுவாசிக்கிறேன், நான் விசுவாசிப்பதால் பேசுகிறேன், அல்லது விசுவாசம் பேசுகிறது.

நாம் விசுவாசிக்கிறோம், ஆகவே நாம் விசுவாசிப்பதைப்

பேசுகிறோம். நமக்கு விசுவாசம் இருக்கிறது, நாம் நமது விசுவாசத்தை அறிக்கையிடுகிறோம். இதுவே வேதாகமம் முழுவதும் குறிப்பிடப்பட்டுள்ள விசுவாசத்தின் அடிப்படைக் கோட்பாடாகும். நாம் எதை விசுவாசிக்கிறோமோ அதையே பேச வேண்டும். நமது விசுவாசத்தைப் பேச வேண்டும். நாம் தேவனையும் அவருடைய வார்த்தையையும் விசுவாசிக்கிறோம். அப்படியானால், நாம் அதற்கு ஏற்றபடி பேச வேண்டும். தேவன் யார், அவர் நமக்கு என்ன வாக்குப்பண்ணியிருக்கிறார் என்பதைக் குறித்த நமது விசுவாசத்தை நாம் அறிவிக்க வேண்டும்.

இயேசுவையும், அவருடைய சிலுவை மரணம், அவருடைய உயிர்த்தெழுதல், அவருடைய பரமேறுதல் மற்றும் அவருடைய உயர்த்தப்படுதல் ஆகியவற்றின் மூலம் அவர் நமக்காக நிறைவேற்றியிருப்பதை நாம் விசுவாசிக்கிறோம். எனவே நாம் பேசுகிறோம், அதை அறிவிக்கிறோம். உங்கள் விசுவாசத்தைப் பேசுங்கள்.

# 57

# கிருபை செயலாற்ற வார்த்தைகளைப் பயன்படுத்துங்கள்

**எபேசியர் 4:29**

**கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம். பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்.**

வார்த்தைகள் எதையாவது அதை கேட்கிறவர்களுக்கு பகிர்கின்றன. சீர்கெட்ட (கெட்ட, அழுகிய, பயனற்ற) வார்த்தைகள் சீர்கேட்டை (எந்த நன்மையையும் தராத விஷயங்கள்) பகிர்கின்றன. நல்ல வார்த்தைகள் வலிமையையும், கிருபையையும், ஆரோக்கியத்தையும் தருகின்றன.

வார்த்தைகள் பல விஷயங்களை உள்ளடக்கிய தொகுப்பு. வார்த்தைகள் ஊர்திகள் ஆகும். வார்த்தைகள் விஷயங்களைக் கடத்துபவைகள். வார்த்தைகள் "ஊழியர்கள்". அவை தன்னைக் கேட்போருக்கு எதையாவது செய்கின்றன. அவைகளால் ஆசீர்வதிக்கவும், கட்டியெழுப்பவும், பலப்படுத்தவும் முடியும். அதே நேரத்தில், அவைகளால் இடிக்கவும், பலவீனப்படுத்தவும், காயப்படுத்தவும், அழிக்கவும் முடியும்.

விசுவாசிகளாக, நாம் விசுவாசத்தை சுமந்துசென்று, அதைப் பகிர்ந்துகொள்ளும் வார்த்தைகளைப் பேசவேண்டும். விசுவாசம் நிறைந்த வார்த்தைகளைப் பேசுங்கள், அதன் மூலம், நம் வார்த்தைகளைக் கேட்பவர்களுக்கு விசுவாசத்தை ஏற்படுத்தவும், ஊக்குவிக்கவும், அவர்களை விழிப்படையச் செய்யவும் முடியும். நாம் ஞானமுள்ள வார்த்தைகளைப்

பேச வேண்டும். உதவி செய்யும் வார்த்தைகளையும், வளர்ச்சியடையச் செய்யும் வார்த்தைகளையும், வழிகாட்டும் வார்த்தைகளையும் மற்றும் ஆசீர்வதிக்கும் வார்த்தைகளையும் நாம் பேச வேண்டும். உங்கள் வார்த்தைகளை புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துங்கள். மக்களை ஆசீர்வதிக்க அவற்றைப் பயன்படுத்துங்கள். மற்றவர்களை ஆசீர்வதிக்க விசுவாசத்தைப் பேசுங்கள்.

# 58

# ஆவியின் பட்டயத்தைப் பயன்படுத்துங்கள்

**எபேசியர் 6:17**

**இரட்சணியமென்னும் தலைச்சீராவையும், தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்.**

அப்போஸ்தலனாகிய பவுல் எபேசியர் 6:12 இல் குறிப்பிடுவதுபோல, நாம் ஆவிக்குரிய போராட்டத்தின் மத்தியில் இருக்கிறோம். சத்துரு தோற்கடிக்கப்பட்டுவிட்டான், ஆனாலும், எஞ்சியிருக்கும் நேரத்தில், அவன் இன்னும் கொரில்லா படைத் தந்திரங்களை உபயோகிக்க முயற்சிக்கிறான். விசுவாசிகளாக, வெற்றியுடன் வாழ்வதற்கும் வல்லமையுடன் ஊழியம் செய்வதற்கும் அளவுக்கு அதிகமான ஆவிக்குரிய போர் ஆயுதங்களை தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறார். இந்த ஆயுதத்தின் ஒரு பகுதி, ஆவியின் பட்டயம், ஒரு வல்லமை வாய்ந்த தாக்குதலின் ஆயுதம். இது பரிசுத்த ஆவியானவரால் நமக்குக் கொடுக்கப்பட்ட பட்டயம். வல்லமைமிக்க பரிசுத்த ஆவியானவராலேயே அது ஊக்கப்படுத்தப்பட்டு ஆதரிக்கப்படுகிறது. எனினும், நாம் பட்டயத்தை எடுத்து அதைப் பயன்படுத்த வேண்டும். இந்தப் பட்டயத்தை நாம் பயன்படுத்தும் போது, பரிசுத்த ஆவியானவர் தாமே நம் சார்பாக செயல்படுகிறார் என்பது நிச்சயம், ஏனென்றால் அது அவருடைய பட்டயம்.

எதிரியைத் தாக்கி கிழித்து எறிந்துப்போடும் நமது ஆயுதமாகிய பட்டயம் தேவனுடைய வார்த்தையே. நாம் அந்தப் பட்டயத்தை எவ்வாறு பயன்படுத்துகிறோம்? சரி,

நாம் வார்த்தைகளைக் கொண்டு என்ன செய்வது? நாம் வார்த்தைகளைப் பேசுகிறோம். "அவருடைய வாயிலிருந்து கூர்மையான பட்டயம் புறப்படுகிறது" (வெளிப்படுத்துதல் 19:13,15) என்று தேவனுடைய வார்த்தையாகிய இயேசுவைக் குறித்த ஒரு தெளிவான சித்திரத்தை வெளிப்படுத்துதல் புத்தகத்தில் நாம் காண்கிறோம். ஆகவே, வார்த்தையின் கூர்மையான பட்டயம் என்பது பேசும்படி நம் வாயிலிருந்து வெளிப்படும் தேவனுடைய வார்த்தையாகும்.

தேவனுடைய வார்த்தையைப் பேசுவதன் மூலம் நாம் ஆவியின் பட்டயத்தைப் பயன்படுத்துகிறோம். ஒவ்வொரு முறையும் நீங்கள் தேவனுடைய வார்த்தையைப் பேசும்போதும், தேவனுடைய வார்த்தையின் மீதான உங்கள் விசுவாசத்தை அறிவிக்கும்போதும், சத்துருவுக்கு காயம் ஏற்படுகிறது. உங்கள் மனதில் தவறான எண்ணங்களைக் கொண்டுவந்தோ அல்லது உங்கள் வாழ்வின் ஏதாவது ஒரு பகுதியில் குறுக்கீடு செய்தோ, சத்துருவானவன் உங்களுக்கு எதிராக செயல்படும்போது, அவனுக்கு எதிராக ஆவியின் பட்டயத்தைப் பயன்படுத்துங்கள். வல்லமைமிக்க பரிசுத்த ஆவியானவருக்கு எதிராக அவன் எந்த வாய்ப்பையும் பெறவில்லை. தேவனுடைய வார்த்தையைப் பேசுங்கள். உங்கள் விசுவாசத்தைப் பேசுங்கள்.

# 59

# தீர்க்கதரிசன வார்த்தைகளுடன் நல்லதொரு யுத்தம் செய்யுங்கள்

**1 தீமோத்தேயு 1:18**

**குமாரனாகிய தீமோத்தேயுவே, உன்னைக்குறித்து முன் உண்டான தீர்க்கதரிசனங்களின்படியே, நீ அவைகளை முன்னிட்டு நல்ல போராட்டம்பண்ணும்படி, இந்தக் கட்டளையை உனக்கு ஒப்புவிக்கிறேன்; நீ விசுவாசமும் நல்மனச்சாட்சியும் உடையவனாயிரு.**

தீர்க்கதரிசன வார்த்தைகள் பரிசுத்த ஆவியானவரின் தூண்டுதலால் அல்லது ஏவுதலால் கொடுக்கப்படும் வார்த்தைகளாகும். தீர்க்கதரிசனம் மற்றும் தீர்க்கதரிசன ஊழியத்தின் வரம் இன்று கிறிஸ்துவின் சரீரத்தில் உண்மையிலேயே செயல்படுகிறது. நமக்கு தீர்க்கதரிசனங்கள் கொடுக்கப்படும்போது, இந்த வார்த்தைகள் கொடுக்கப்பட்டதற்கான காரணங்களில் ஒன்று ஆவிக்குரிய யுத்தத்தில் நம்மை வலுப்படுத்துவதற்கு என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். சத்துருவுக்கு எதிராக நல்லொரு யுத்தம்செய்ய இந்த தீர்க்கதரிசனங்களைப் பயன்படுத்த வேண்டும்.

சத்துருவாகிய, சாத்தானும் அவனுடைய பிசாசுகளும், திருடவும், கொல்லவும், அழிக்கவும் வருகின்றன. அவை தேவனுடைய நோக்கங்களை விட்டு நாம் விலகும்படிக்கு நம்மைத் தொந்தரவு செய்யவும், திசைதிருப்பவும், ஏதோ ஒரு வகையில் தொல்லை கொடுக்கவும் முயல்கின்றன. தேவனுடைய நோக்கம், தேவனுடைய வாக்குத்தத்தங்கள் மற்றும் நம் வாழ்வில் தேவனுடைய திறனை அறிவிக்கும் தீர்க்கதரிசனங்களாகிய, நம் வாழ்வைக் குறித்து சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்களை

நாம் எடுத்துக்கொள்வோம். இந்தத் தீர்க்கதரிசனங்கள் மூலம், நாம் நல்லதொரு யுத்தம் செய்வோம். நாம் போராடும் ஆவிக்குரிய போராட்டத்தில் சத்துருவுக்கு எதிரான ஆயுதங்களாக அந்தத் தீர்க்கதரிசன வார்த்தைகளை நாம் பயன்படுத்த வேண்டும். நினைவில் கொள்ளுங்கள், வார்த்தைகள் பேசப்பட வேண்டும். ஒரு காலத்தில் உங்கள் வாழ்க்கையைக் குறித்து சொல்லப்பட்ட அந்தத் தீர்க்கதரிசன வார்த்தைகளைப் பேசுங்கள் (நிச்சயமாக நீங்கள் அதை சோதித்து அது ஆவியானவரிடமிருந்து வந்தவை என்று அறிந்துகொண்டவை). தேவன் தம்முடைய ஆவியின் மூலம் உங்களுக்கு அறிவித்ததை நீங்கள் அறிவியுங்கள். அந்த வார்த்தைகள் சத்துருவுக்கு எதிரான உங்கள் ஆயுதங்களின் ஒரு பகுதி என்று தேவன் சொல்லியிருக்கிறார். அந்தத் தீர்க்கதரிசன வார்த்தைகளைப் பேசுங்கள். உங்கள் விசுவாசத்தைப் பேசுங்கள்.

# 60

# உங்களிலுள்ள ஒவ்வொரு நன்மையான காரியத்தையும் கிறிஸ்துவில் அங்கீகரியுங்கள்

**பிலேமோன் 1:6**

**உங்களிலுள்ள சகல நன்மைகளும் தெரியப்படுகிறதினாலே உம்முடைய விசுவாசத்தின் அந்நியோந்நியம் கிறிஸ்து இயேசுவுக்காகப் பயன்படவேண்டுமென்று வேண்டுதல்செய்கிறேன்.**

பிலேமோனுக்கு பவுல் எழுதிய நிருபத்தின் சூழல் சுவாரஸ்யமானது. பவுலின் ஊழியத்தின் கீழ் விசுவாசியான ஓடிப்போன அடிமையாகிய ஒநேசிமுவை, இப்போது கர்த்தருக்குள் சகோதரனாக இருக்கும் அவனது எஜமானான பிலேமோனிடம் திரும்ப அனுப்பி வைத்து, அவனை ஏற்றுக்கொள்ளும்படி அந்த எஜமானுக்கு பவுல் கடிதம் எழுதுகிறார். பவுல் இந்த சிறு கடிதத்தை எழுத ஆரம்பிக்கும்போது, கிறிஸ்துவுக்குள் நாம் பெற்றுக்கொண்டதும், நம்மில் இருக்கும் ஒவ்வொரு நல்ல விஷயத்தையும் (எல்லா ஐசுவரியங்களையும் ஆசீர்வாதங்களையும்) நாம் அங்கீகரிக்கும்போது (முழுமையாக அங்கீகரிக்கும்போது) நம்முடைய விசுவாசத்தின் அந்நியோந்நியம் பயனுள்ளதாக (பலன்தருவதாக, வல்லமை வாய்ந்ததாக, ஆற்றல்மிக்கதாக) மாறும் என்ற முக்கியமான உண்மையை அவர் சுட்டிக்காட்டுகிறார்.

கிறிஸ்துவுக்குள் நம்மைக் கொண்டுவந்ததன் மூலம் தேவன் நம்மில் வைத்திருக்கிற நல்ல விஷயங்களை நாம் வெளிக்கொண்டுவந்து, ஒப்புக்கொண்டு, அங்கீகரித்து

பேசக் கற்றுக்கொள்ள வேண்டும். கிறிஸ்துவுக்குள் நாம் யார் என்பதை உணர்ந்து அங்கீகரிக்க வேண்டும். உங்களுக்காகவும் மற்றவர்களுக்காகவும் இதைச் செய்யுங்கள். கிறிஸ்துவில் தேவன் நமக்காகச் செய்தவற்றை நினைத்து நாம் ஐக்கியப்படுகிறோம். இதுவே நமது ஐக்கியத்தை வலிமையாக்குகிறது. நாம் பலவீனர், நாம் எவ்வளவு ஏழைகள் மற்றும் பரிதாபகரமானவர்கள், எவ்வளவு பாவிகள் மற்றும் வழிதவறினவர்கள் என்று பேசுவதற்குப் பதிலாக, நாம் கிறிஸ்துவில் இருப்பதால் நம்மில் இருக்கும் நல்ல விஷயங்களை அறிக்கையிட வேண்டும்.

**குறிப்பு:** பாவத்தைக் குறிப்பிடக் கூடாது என்றோ அல்லது ஏதாவது தவறு இருந்தால், அதை நாம் கவனிக்காமல் இருக்க வேண்டும், திருத்தம் கொண்டு வரக்கூடாது என்றோ என்று நாங்கள் இங்கு கூறவில்லை. தவறுகளையும், தப்புகளையும் மற்றும் தப்பிதங்களையும் நாம் சரிசெய்து, திருத்தம் தேவைப்படும் இடங்களில் திருத்தம் செய்ய வேண்டும். ஆனால், திருத்தம் செய்யப்பட்டு, திருந்திய பிறகு, முன்னானவைகளை மறந்து, கிறிஸ்துவில் நம் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கும் நல்ல விஷயங்களைப் பார்க்கிறோம் என்பதை அறிந்து நாம் இதைச் செய்கிறோம்.

# 61

# அவருடைய வார்த்தை உங்கள் உலகத்தை நிலைநிறுத்தி ஒழுங்குபடுத்தும்

எபிரெயர் 1:3

**இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமாயிருந்து, சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய், தம்மாலேதாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி, உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்தார்.**

நாம் ஏற்கெனவே பழைய ஏற்பாட்டில் பல நிகழ்வுகளில் பார்த்ததுபோல, இங்கே எபிரெயருக்கு எழுதின நிருபத்தில், மீண்டும் ஒருமுறை, அனைத்தும், முழு பிரபஞ்சமும் அவருடைய வார்த்தையின் வல்லமையால் தாங்கி, நிலைநிறுத்தப்பட்டு, ஒழுங்குபடுத்தப்பட்டு, அதன் ஸ்தானத்தில் வைக்கப்படுகிறது என்று வேதம் நமக்குக் கற்பிக்கிறது.

அதே சர்வவல்லமையுள்ள தேவன்தான் பூமியில் நாம் வாழும்படிக்கு தம்முடைய வார்த்தையை நமக்குக் கொடுத்திருக்கிறார். நிச்சயமாக அவர் நமக்குக் கொடுத்துள்ள அவருடைய வார்த்தையால், நமது “சிறிய உலகங்களை” தாங்கவும், நிலைநிறுத்தவும், ஒழுங்குபடுத்தவும், நல்ல முறையில் சிறப்பாக செயல்படச் செய்யவும் முடியும்.

அப்படியானால், பரிசுத்த வேதாகமத்தில் எழுதப்பட்ட வடிவத்தில் அவர் நமக்குக் கொடுத்திருக்கிற அவருடைய வார்த்தையை எடுத்து, அதை நம் உலகத்தில் பகிர்ந்துகொள்ளும்படி கொண்டுவருவதே முக்கியமானது.

வேதவசனங்கள் முழுவதிலும் நாம் பார்க்கிறபடி, நாம் செய்ய வேண்டிய ஒரே காரியம், அவருடைய வார்த்தையை விசுவாசிப்பதும், அவருடைய வார்த்தையை நம் உலகத்தில் பேசுவதும் ஆகும்.

உங்கள் உலகத்தை நிலைநிறுத்துவதற்கும் ஒழுங்குபடுத்துவதற்கும் தேவனுடைய வார்த்தை போதுமான வல்லமையைக் கொண்டுள்ளது என்பதை அறிந்துகொள்ளுங்கள். சில சமயங்களில் காரியங்கள் தோல்வியடைவதைப்போல் தோன்றலாம். விஷயங்கள் கைமீறிச் செல்வதாகவோ அல்லது கட்டுப்பாட்டை மீறிச் செல்வதாகவோ தோன்றலாம். தேவனுடைய வார்த்தையின் வல்லமையின் மீது நம்பிக்கை வைத்திருங்கள். உங்கள் வாழ்க்கை, உங்கள் நிகழ்காலம் மற்றும் உங்கள் எதிர்காலம், சூழ்நிலைகள் மற்றும் சந்தர்ப்பங்கள் ஆகிய எல்லாவற்றின் மீதும் அவருடைய வார்த்தையைப் பேசுங்கள். அவருடைய வாக்குத்தத்தங்களைப் பேசுங்கள். உங்கள் உலகில் உள்ள அனைத்தும் தேவனுடைய வார்த்தைக்கு உட்பட்டது என்றும் அவருடைய வார்த்தைக்கு ஏற்ப நடக்கும் என்றும் அறிவியுங்கள். உங்கள் விசுவாசத்தைப் பேசுங்கள். உங்கள் வாழ்க்கையில் தேவனுடைய வார்த்தையின் வல்லமை செயல்படுவதை நீங்கள் காண்பீர்கள்.

# 62

# நாம் அறிக்கைபண்ணுகிற பிரதான ஆசாரியர் இயேசுவே

**எபிரெயர் 3:1**

**இப்படியிருக்க, பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே, நாம் அறிக்கைபண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப்பாருங்கள்;**

"அறிக்கை" (கிரேக்கம் *'ஹோமோலோஜியா'*) என்ற வார்த்தையின் அர்த்தம் "அதே விஷயத்தைச் சொல்வது" அல்லது "வார்த்தைகளில் உடன்படுவது" என்று முந்தைய அத்தியாங்களில் விளக்கியுள்ளோம். இந்த புதிய ஏற்பாட்டு சூழலில் அறிக்கையிடுதல் என்பது தேவனுக்கும் அவருடைய வார்த்தைக்கும் உடன்படுவதாக நாம் கூறுவதாய் இருக்கிறது. தேவன் சொன்னதையே நாம் சொல்லும்போது, அல்லது நமது வார்த்தைகளுடன் தேவனோடு ஒத்துப்போகும்போது, நாம் நமது வாயினால் அறிக்கையிடுகிறோம்.

எபிரெய நிருபத்தின் எழுத்தாளர், இயேசுவை நமக்குச் சுட்டிக்காட்டி, அவர் நாம் அறிக்கைபண்ணுகிற அப்போஸ்தலரும் (முன்னோடி, முன்னோக்கிச் செல்பவர்) பிரதான ஆசாரியருமாய் (பிரதிநிதித்துவம் செய்கிறவர்) இருக்கிறார் என்று கூறுகிறான். நாம் அறிக்கையிடும் அல்லது வெளிப்படுத்தும் விசுவாசத்தை இயேசு பரலோகத்தில் பிரதிநிதித்துவப்படுத்துகிறார். இதன் அர்த்தம், நாம் தேவனுடைய வார்த்தைக்கு ஏற்றவைகளைப் பேசும்போதும், தேவன் சொல்லியிருக்கும் வார்த்தைகளோடு இசைந்துப்போகும்போதும், இயேசு அதை நம் சார்பாக பிதாவுக்கு முன்பாக அங்கீகரித்து பிரதிநிதித்துவப்படுத்துகிறார்.

நீங்கள் அறிக்கைபண்ணும் பிரதான ஆசாரியர் இயேசு என்பதை நினைவில் கொள்ளுங்கள். அவருடைய வார்த்தைக்கு இசைவாகப் பேசுங்கள். உங்கள் விசுவாசத்தைப் பேசுங்கள்.

# 63

# உங்கள் அறிக்கையை உறுதியாகப் பற்றிக்கொள்ளுங்கள்

**எபிரெயர் 4:14**

**வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப்போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால், நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்கக்கடவோம்.**

**எபிரெயர் 10:23**

**அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம்; வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே.**

இயேசுவை நம்முடைய மகா பிரதான ஆசாரியராகக் கொண்டிருப்பதால், அவருடைய வார்த்தையுடன் நாம் உடன்பட்டு அறிக்கையிடும் அறிக்கையை நாம் உறுதியாகப் பற்றிக்கொள்ள வேண்டும் (வலிமையைப் பயன்படுத்தி தக்கவைத்துக்கொள்ள வேண்டும், நழுவ விடாமல் இறுக்கமாகப் பற்றிக்கொள்ள வேண்டும்). மேலும், வாக்குத்தத்தம் செய்தவர் உண்மையுள்ளவர் என்பதை நாம் அறிவோம். அவர் பண்ணின வாக்குத்தத்தத்தை நிறைவேற்றத் தவறமாட்டார். எனவே, நாம் நமது விசுவாசத்தின் அறிக்கையை அசைவில்லாமல் உறுதியாகப் பற்றிக்கொள்கிறோம்.

வேனையும் அவருடைய வார்த்தையையும் நாம் விசுவாசிப்பதைப் பற்றி சவால்விடும் விஷயங்கள் இருக்கும்போது, நம்முடைய அறிக்கையை நாம் அசைவில்லாமல் உறுதியாகப் பற்றிக்கொள்ள வேண்டும்.

உங்கள் விசுவாசத்தைத் தொடர்ந்து பேசுங்கள், தேவனுடனும் அவருடைய வார்த்தையுடனும் தொடர்ந்து இசைவாய் இணைந்திருங்கள்.

தேவனுடைய வார்த்தை நிறைவேறுவதைக் காண்பதில் தாமதங்கள் ஏற்படுவதை நாம் காணும்போது, நம் அறிக்கையை நாம் அசைவில்லாமல் உறுதியாகப் பற்றிக்கொள்ள வேண்டும். உங்கள் விசுவாசத்தைத் தொடர்ந்து பேசுங்கள், தேவனுடனும் அவருடைய வார்த்தையுடனும் தொடர்ந்து இசைவாய் இணைந்திருங்கள்.

காரியங்கள் மோசமடைவது போல் தோன்றும்போது, நாம் உறுதியாக நின்று, நம் விசுவாசத்தின் அறிக்கையை அசைவில்லாமல் உறுதியாகப் பற்றிக்கொள்ள வேண்டும். பரலோகத்தில் நமக்கு மகா பிரதான ஆசாரியர் இருக்கிறார், அவர் நம்முடைய அறிக்கையைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார், அவர் தம்முடைய வாக்குத்தத்தத்தில் உண்மையுள்ளவர். உங்கள் விசுவாசத்தைப் பேசுங்கள், தேவனுடனும் அவருடைய வார்த்தையுடனும் தொடர்ந்து இசைவாய் இணைந்திருங்கள்.

# 64

# அவரது வார்த்தைகள் உலகை வடிவமைத்தது

**எபிரெயர் 11:3**

**விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினாலே உண்டாக்கப்பட்டதென்றும், இவ்விதமாய், காணப்படுகிறவைகள் தோன்றப்படுகிறவைகளால் உண்டாகவில்லையென்றும் அறிந்திருக்கிறோம்.**

விசுவாசத்தினாலே, உலகங்கள் தேவனுடைய வார்த்தையால் கட்டமைக்கப்பட்டது (சிருஷ்டிக்கப்பட்டது, உருவாக்கப்பட்டது, கட்டப்பட்டது, வடிவமைக்கப்பட்டது) என்பதை நாம் அறிவோம். கண்ணுக்குப் புலப்படுகிறதான, இந்த இயற்கை உலகம் கண்ணுக்குப் புலப்படாத, ஆவிக்குரிய மண்டலத்திலிருந்து வந்தது. தேவன் தம்முடைய வார்த்தையின் மூலம் எல்லாவற்றையும் சிருஷ்டித்தார், அவர் இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல உருவாக்கினார். இயற்கையான, காணக்கூடிய உலகில் உள்ள அனைத்தும் தேவனுக்கும் தேவனுடைய வார்த்தைக்கும் கட்டுப்பட்டதாய் இருக்கின்றது.

எனவே, காரியங்களை நாம் இவ்வாறு பார்ப்போம். நம் ஒவ்வொருவருக்கும் நாம் வாழும் நமது சொந்த உலகங்கள் உள்ளன. “நமது உலகங்கள்” என்று சொல்வதன் மூலம், நமது தனிப்பட்ட பொறுப்பு மற்றும் செல்வாக்கு-நமது வீடுகள், குடும்பங்கள், தொழில்கள், வணிகம், ஊழியம் போன்றவற்றைக் குறிப்பிடுகிறோம். நமது உலகில் இல்லாத விஷயங்களும் உள்ளன. நமது வாழ்வில் இல்லாததை, தேவன் தமது வார்த்தையின் வல்லமையால் நம் உலகில் உருவாக்க முடியும். அவருடைய வார்த்தையால்

நம் உலகங்களை உருவாக்கவும், வடிவமைக்கவும், கட்டமைக்கவும் மற்றும் வடிவமைக்கவும் முடியும். இன்று உங்கள் உலகத்தை நீங்கள் பார்க்கும்போது, ஒருவேளை, அது “ஒழுங்கின்மையும் வெறுமையுமாய்” இருட்டாகவும் வெறுமையாகவும் காணப்படலாம். ஒருவேளை நீங்கள் விரும்புகிறதும் தேவனுடைய வார்த்தையில் வாக்குப்பண்ணப்பட்டதுமான பல விஷயங்களை உங்கள் உலகில் இன்னும் நீங்கள் பார்க்காமல் இருக்கலாம். தேவனுடைய வார்த்தைக்கு உங்கள் உலகத்தை உருவாக்கும் வல்லமை இருக்கிறது என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? உங்கள் உலகில் இல்லாததை தேவனுடைய வார்த்தையால் உருவாக்க முடியும் என்று நீங்கள் நம்புகிறீர்களா? தேவனுடைய வார்த்தையைப் பிடித்துக் கொள்ளுங்கள். அவருடைய வார்த்தை சத்தியம். அவருடைய வார்த்தை ஜீவனுள்ளதாகவும் வல்லமை நிறைந்ததாகவும் இருக்கிறது. அவருடைய வார்த்தையை விசுவாசியுங்கள். உங்கள் உலகில் அவருடைய வார்த்தையைப் பேசுங்கள். அவருடைய வார்த்தை, உங்கள் உலகத்தை சிருஷ்டித்து, உருவாக்கி, கட்டமைத்து, வடிவமைக்கட்டும். உங்கள் விசுவாசத்தைப் பேசுங்கள்.

# 65

# தேவன் சொல்லியிருக்கிறார், ஆகவே நாம் தைரியமாகச் சொல்கிறோம்

**எபிரெயர் 13:5,6**

**[5]நீங்கள் பணஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே.**

**[6]அதினாலே நாம் தைரியங்கொண்டு: கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்னசெய்வான் என்று சொல்லலாமே.**

எபிரேயரின் எழுத்தாளருக்கு நாம் எப்படிப் பேச வேண்டும் என்பதற்கான எளிய பகுத்தறிவு உள்ளது—தேவன் சொல்லியிருப்பதால், நாமும் தைரியமாகச் சொல்லலாம். தேவன் சொல்லியிருப்பதை நாம் தைரியமாக உறுதிப்படுத்துகிறோம் மற்றும் அதனுடன் உடன்படுகிறோம்.

“நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை” என்று தேவன் சொன்னார். எனவே, “கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படடேன்” என்று நாம் தைரியமாகச் சொல்கிறோம்.

“அவருடைய தழும்புகளால் நாம் குணமானோம்” என்று தேவன் கூறியுள்ளார். எனவே, “அவர் என் நோய்களை எடுத்துக்கொண்டு, என் வேதனைகளைச் சுமந்தார், அவருடைய தழும்புகளால் நான் குணமடைந்தேன்” என்று நாம் தைரியமாகச் சொல்கிறோம்.

“நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்ட மரத்தைப்போல்

இருப்பாய்” என்று தேவன் சொன்னார். எனவே, “ஏற்ற காலத்தில் நான் என் கனிகளைத் தருகிறேன், என் இலை உதிருவதில்லை, நான் செய்வதெல்லாம் வாய்க்கும்” என்று நாம் தைரியமாகச் சொல்கிறோம்.

இப்படி இன்னும் நிறைய சொல்லலாம்.

தேவன் சொன்னதை எப்போதும், ஒவ்வொரு சூழ்நிலையிலும் தைரியமாக சொல்வதை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள். உங்கள் விசுவாசத்தைத் தைரியமாகப் பேசுங்கள், ஏனென்றால் தேவன் என்ன சொன்னார் என்பதை நீங்கள் அறிவீர்கள், எனவே நீங்கள் அவருடன் உடன்படும் வார்த்தைகளைப் பேசுங்கள். அவர் உங்களை ஒருபோதும் தள்ளாடவிடமாட்டார்.

இருவரும் ஒருமித்துப்போனால் மட்டுமே ஒன்றாக நடந்து செல்ல முடியும் (ஆமோஸ் 3:3). நாம் தேவனுடன் ஒன்றாக ஒருமித்துப்போகும்போது அவருடன் சேர்ந்து நடக்க முடியும். அவருடைய வார்த்தைக்கு நாம் உடன்படுவதன் மூலம் நாம் தேவனுடன் உடன்படுகிறோம். தேவன் பேசியிருக்கிறார், எனவே, நாம் வேண்டுமென்றே தைரியமாக அவருடன் உடன்படிக்கையில் பேசுகிறோம்.

# 66

# உங்கள் நாவை ஆளுங்கள், உங்களை முழுமையாக ஆளுங்கள்

**யாக்கோபு 1:26**

**உங்களில் ஒருவன் தன் நாவை அடக்காமல், தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னைத் தேவபக்தியுள்ளவனென்று எண்ணினால் அவனுடைய தேவபக்தி வீணாயிருக்கும்.**

**யாக்கோபு 3:1-6**

**1 என் சகோதரரே, அதிக ஆக்கினையை அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக.**
**2 நாம் எல்லாரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம்; ஒருவன் சொல்தவறாதவனானால் அவன் பூரணபுருஷனும், தன் சரீரமுழுவதையும் கடிவாளத்தினாலே அடக்கிக்கொள்ளக்கூடியவனுமாயிருக்கிறான்.**
**3 பாருங்கள், குதிரைகள் நமக்குக் கீழ்ப்படியும்படிக்கு அவைகளின் வாய்களில் கடிவாளம்போட்டு, அவைகளுடைய முழுச்சரீரத்தையும் திருப்பி நடத்துகிறோம்.**
**4 கப்பல்களையும் பாருங்கள், அவைகள் மகா பெரியவைகளாயிருந்தாலும், கடுங்காற்றுகளால் அடிபட்டாலும், அவைகளை நடத்துகிறவன் போகும்படி யோசிக்கும் இடம் எதுவோ அவ்விடத்திற்கு நேராக மிகவும் சிறிதான சுக்கானாலே திருப்பப்படும்.**
**5 அப்படியே, நாவானதும் சிறிய அவயவமாயிருந்தும் பெருமையானவைகளைப் பேசும். பாருங்கள், சிறிய நெருப்பு எவ்வளவு பெரிய காட்டைக் கொளுத்தி விடுகிறது!**
**6 நாவும் நெருப்புத்தான், அது அநீதி நிறைந்த உலகம்; நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச்சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது!**

ஒரு “பூரண புருஷன்,” அதாவது, ஆவிக்குரிய ரீதியில் முழுமையாக வளர்ந்து முதிர்ச்சியடைந்த ஒரு மனிதன், தன் நாவை அடக்கக்கூடியவனாய் இருக்கிறான். நாம் நம்

வார்த்தைகளைக் கவனித்து, நம் நாவை அடக்கும்போது, நம் முழு சரீரத்தையும் கட்டுப்படுத்தவோ அல்லது தேர்ச்சி அடையச் செய்யவோ முடியும் அல்லது "எல்லா வகையிலும் நம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ள" முடியும் (தி பாஸ்சின் ட்ரான்ஸ்லஷேன் என்ற மொழிப்பெயர்ப்பில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது).

இது நம் நாவை ஆளுவதற்கான அல்லது நாம் பேசுவதைக் கட்டுப்படுத்துவதற்கான முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறது. நம்முடைய வார்த்தைகளை நாம் கட்டுப்படுத்தக்கூடிய சிறந்த ஒழுக்க முறைகளில் ஒன்று, தேவன் அங்கீகரிக்கும் விஷயங்களை மட்டுமே நாம் எப்போதும் பேசுகிறோமா என்பதை உறுதிசெய்வதாகும். தேவனுடைய பார்வையில் பிரியமானதையே பேசுங்கள். தேவனை மகிமைப்படுத்தும் காரியங்களைப் பேசுங்கள். அவருடைய வார்த்தைக்கு ஒத்துப்போவதைப் பேசுங்கள். விசுவாசத்தைப் பேசுங்கள். இதைச் செய்ய முடிந்தால், எல்லா வகையிலும் நம்மை நாமே அடக்கி ஆள முடியும்.

நம் நாவைப் பயிற்றுவிப்பதற்கான சிறந்த வழிகளில் ஒன்று, தேவனுடைய வார்த்தை சொல்வதை மனப்பூர்வமாக சொல்லிப் பழகுவதாகும். வேதத்தில் பல ஆவிக்குரிய நடைமுறைகள் இருப்பதை நாம் காணலாம். உதாரணமாக, நாம் தேவனுக்குத் துதி மற்றும் ஆராதனை பலிகளை செலுத்துகிறோம் என்பதை அறிவோம். எப்படி ஜெபிப்பது மற்றும் வெவ்வேறு வகையான ஜெபங்களில் ஈடுபடுவது என்பது நமக்குத் தெரியும். தேவனுடைய வார்த்தையை எவ்வாறு வாசிப்பது, எவ்வாறு படிப்பது, எவ்வாறு தியானிப்பது என்று நமக்கு தெரியும். அதுபோலவே, நம்முடைய ஆவிக்குரிய ஒழுக்கத்தின் ஒரு பகுதியாக, நாம் தேவனுடைய வார்த்தையைப் பேசுவதற்கு நேரத்தை ஒதுக்கிக்கொள்ளலாம். இந்தப் புத்தகத்தின் தொடக்கத்தில், வாழ்க்கையின் துவக்கம் முதல் முடிவு வரையிலான பல

பகுதிகளை உள்ளடக்கியதும், தனிப்பட்ட முறையில் உபயோகப்படுத்தக் கூடியதுமான, எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையிலிருந்து அறிவிப்புகளின் பல உதாரணங்களை நாங்கள் கொடுத்துள்ளோம். உங்கள் சொந்த வாழ்க்கையில் தேவனுடைய வார்த்தையை அறிவிக்க இந்த வடிவத்தை அல்லது வேறு ஏதேனும் ஒன்றை நீங்கள் பயன்படுத்தலாம். ஒவ்வொரு நாளும் வெறுமனே சடங்காச்சாரமாகவோ அல்லது வேறு ஏதேனும் வழக்கச் செயலாகவோ அதைச் செய்யாதீர்கள். உங்கள் விசுவாசத்தைப் பேசுவதன் முக்கியத்துவத்தைப் பற்றிய வெளிப்பாடு அல்லது புரிதல் உங்களுக்கு இருப்பதால், சத்தியத்தால் ஏவப்பட்டு அதைப் பேசுங்கள். இவ்வாறு உங்கள் நாவைப் பயிற்றுவிக்கும்போது, உங்கள் வார்த்தைகளில் நீங்கள் கவனமாக இருப்பதும், அவருடைய வார்த்தைக்கு ஏற்ற வார்த்தைகளை நீங்கள் பேசுகிறீர்கள் என்பதை உறுதிப்படுத்துவதும் சாதாரணமாகிவிடும். உங்கள் விசுவாசத்தை நீங்கள் பேசுவது சாதாரணமாக இருக்கும்.

# 67

# உங்கள் வார்த்தைகள் உங்கள் வாழ்க்கையை வழிநடத்துகிறது, ஆளுகிறது மற்றும் ஆசீர்வதிக்கிறது

**யாக்கோபு 3:3-6**

**3 பாருங்கள், குதிரைகள் நமக்குக் கீழ்ப்படியும்படிக்கு அவைகளின் வாய்களில் கடிவாளம்போட்டு, அவைகளுடைய முழுச்சரீரத்தையும் திருப்பி நடத்துகிறோம்.**

**4 கப்பல்களையும் பாருங்கள், அவைகள் மகா பெரியவைகளாயிருந்தாலும், கடுங்காற்றுகளால் அடிபட்டாலும், அவைகளை நடத்துகிறவன் போகும்படி யோசிக்கும் இடம் எதுவோ அவ்விடத்திற்கு நேராக மிகவும் சிறிதான சுக்கானாலே திருப்பப்படும்.**

**5 அப்படியே, நாவானதும் சிறிய அவயவமாயிருந்தும் பெருமையானவைகளைப் பேசும். பாருங்கள், சிறிய நெருப்பு எவ்வளவு பெரிய காட்டைக் கொளுத்தி விடுகிறது!**

**6 நாவும் நெருப்புத்தான், அது அநீதி நிறைந்த உலகம்; நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச்சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது!**

பரிசுத்த ஆவியானவரின் வழிகாட்டுதலினாலே யாக்கோபு, நாம் பேசும் வார்த்தைகளின் வல்லமை மற்றும் ஆதிக்கத்தை வெளிப்படுத்தும்படிக்கு நம் உலகில் உள்ள படங்களைப் பயன்படுத்தி நமக்கு எழுதுகிறான். குதிரைகளின் வாயில் கடிவாளம், கப்பல்களில் சுக்கான், ஒரு காட்டுத் தீ—என்று அவன் பயன்படுத்தும் ஒப்புமைகளைக் கவனியுங்கள். ஒரு பலமுள்ள குதிரையானது அதன் வாயில் பொருத்தப்பட்டுள்ள கடிவாளத்தினால் சவாரி செய்ய விரும்பும் திசையில் கட்டுப்படுத்தப்பட்டு வழிநடத்தப்படுகிறது. அதேபோல், ஒரு மிகப்பெரிய கப்பலானது, காற்று மற்றும் அலைகளுக்கு நடுவே கூட

சிறிய சுக்கான் மூலம் நடத்துனரால் திருப்பப்படுகிறது. ஒரு சிறிய தீ கூட ஒரு பெரிய காட்டை அழித்துவிட முடியும். முக்கியமான விஷயம் என்னவென்றால், நமது வார்த்தைகள் சிறியதாகவும், பலனற்றதாகவும், முக்கியமற்றதாகவும் தோன்றலாம். ஆயினும்கூட, நாம் பேசும் வார்த்தைகள் வல்லமை வாய்ந்தவை என்பதையும், நம் வாழ்க்கை முழுவதையும் வழிநடத்தவும், வழிகாட்டவும் மற்றும் ஆளுகை செய்யவும் அவற்றால் முடியும் என்பதையும் நாம் அறிய வேண்டும் என்று பரிசுத்த ஆவியானவர் விரும்புகிறார்.

யாக்கோபு ஒரு பொல்லாத நாவைப் பற்றி வசனம் 6 இல் எழுதுகிறான். ஒரு பொல்லாத நாவு “அக்கினியைக் கொழுத்திவிடும்” அல்லது நரகத்திலிருந்து நேரடியாக வரும் துன்மார்க்கத்தினால் மக்களை தாக்குகிறது அல்லது கொளுத்துகிறது. இங்கு சொல்லப்பட்டுள்ள பொல்லாத நாவின் தாக்கத்தை எண்ணிப் பாருங்கள். ஒரு பொல்லாத நாவு தனிமனிதனின் முழு சரீரத்தை அல்லது முழு வாழ்வை (ஆவி, ஆத்துமா மற்றும் சரீரம்) கெடுக்கிறது. இது அந்தத் தனிநபரின் வாழ்க்கையின் முழு வாழ்விலும் “அக்கினியைக் கொழுத்திவிடுகிறது” அல்லது பாதிப்புகளையும்,, விளைவுகளையும் மற்றும் தாக்கத்தையும் ஏற்படுத்துகிறது. கெட்ட வார்த்தைகள் நம் முழு மனிதத் தன்மையையும் நம் முழு வாழ்வையும் நாசம்பண்ணி அழித்துவிடுகின்றன. இப்போது, நம்மிடம் ஒரு நல்ல நாவு—”அக்கினியால் கொழுந்துவிட்டு எரிகிற,” அதாவது தேவனுடைய வார்த்தையாகிய அக்கினியால் நிரம்பிய ஒரு நாவு (தேவனுடைய வார்த்தை அக்கினியைப் போன்றது. எரேமியா 23:29) இருந்தால் எப்படி இருக்கும். தேவனுடைய வார்த்தையால் ஏவப்பட்டு பேசும் நாவும், அவருடைய வார்த்தைக்கு ஏற்ற வார்த்தைகளைப் பேசும் நாவும் ஒரு நல்ல நாவாக இருக்கும். இத்தகைய வார்த்தைகள் நம்மை ஆசீர்வதித்து, நம்மை முழுவதுமாகக் கட்டியெழுப்புகின்றன, மேலும் நம் வாழ்க்கை முழுவதிலும் நம்மை ஆசீர்வதித்துக்

கட்டியெழுப்புகின்றன.

நமது வார்த்தைகள் நம் வாழ்நாள் முழுவதும் நம்மை வழிநடத்துகின்றது, ஆளுகை செய்கின்றது, மற்றும் வழிகாட்டுகின்றது. நம் வார்த்தைகளால் நம்மை முழுவதுமாகவும், நம் வாழ்நாட்கள் முழுவதிலும் நம்மை ஆசீர்வதித்து, நம்மைக் கட்டியெழுப்ப முடியும். தேவனுடைய வார்த்தையைப் பேசுங்கள். விசுவாச வார்த்தைகளைப் பேசுங்கள். நீங்கள் பேசும் வார்த்தைகள் உங்கள் வாழ்க்கையை ஆசீர்வதித்துக் கட்டியெழுப்பட்டும்.

# 68

# விசுவாசத்தை தொடர்ந்து பேசுங்கள்

**யாக்கோபு 3:7-12**

**7சகலவிதமான மிருகங்கள், பறவைகள், ஊரும்பிராணிகள், நீர்வாழும் ஜெந்துக்கள் ஆகிய இவைகளின் சுபாவம் மனுஷசுபாவத்தால் அடக்கப்படும், அடக்கப்பட்டதுமுண்டு.**

**8நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது; அது அடங்காத பொல்லாங்குள்ளதும் சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததுமாயிருக்கிறது.**

**9அதினாலே நாம் பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம்; தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை அதினாலேயே சபிக்கிறோம்.**

**10துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது. என் சகோதரரே, இப்படியிருக்கலாகாது.**

**11ஒரே ஊற்றுக்கண்ணிலிருந்து தித்திப்பும் கசப்புமான தண்ணீர் சுரக்குமா?**

**12என் சகோதரரே, அத்திமரம் ஒலிவப்பழங்களையும், திராட்சச்செடி அத்திப்பழங்களையும் கொடுக்குமா? அப்படியே உவர்ப்பான நீரூற்று தித்திப்பான ஜலத்தைக் கொடுக்கமாட்டாது.**

பரிசுத்த ஆவியானவரின் உதவியோடு, நாம் பேசும் வார்த்தைகள் தொடர்ந்து நல்லதாக, சரியானதாக, தூய்மையானதாக, சுத்தமானதாக இருக்க வேண்டும் என்பதன் முக்கியத்துவத்தை யாக்கோபு எடுத்துரைக்கிறான். நாம் எப்பொழுதும் ஜீவனையும் ஆசீர்வாதத்தையும் மட்டுமே பேச வேண்டுமானால், நாம் எல்லா நேரங்களிலும் நம் வார்த்தைகளைக் கட்டுப்படுத்த வேண்டும். நாம் சில சமயங்களில் ஜீவனையும் ஆசீர்வாதத்தையும், மற்றொரு சமயத்தில் மரணத்தையும் சாபத்தையும் பேசுபவர்களாய் இரு-நாவுகளுடன் பேசக் கூடாது. எப்பொழுதும், எப்பொழுதும், ஒவ்வொரு சூழ்நிலையிலும், ஜீவனையும் ஆசீர்வாதத்தையும் தொடர்ந்து பேசுங்கள்.

அதேபோல, சில நேரங்களில் விசுவாசமுள்ள வார்த்தைகளைப் பேசாமல், பின்பு, இன்னொரு நேரத்தில் பயம், சந்தேகம், மற்றும் அவநம்பிக்கையான வார்த்தைகளைப் பேசக்கூடாது. விசுவாசத்தைத் தொடர்ந்து, எப்போதும் பேச வேண்டும். தேவனுடைய வார்த்தையால் நம் இருதயங்களையும் மனதையும் தொடர்ந்து நிரப்பினால் நாம் இதைச் செய்யலாம். நாம் தொடர்ந்து விசுவாச வார்த்தைகளால் நம்மை ஊட்டமளித்தால், நாம் தொடர்ந்து விசுவாச வார்த்தைகளை மட்டுமே பேசுவோம்.

உங்கள் நாவை பழக்கப்படுத்துங்கள். ஜீவன், ஆசீர்வாதம் மற்றும் விசுவாசம் நிரம்பிய வார்த்தைகளை எப்போதும் பேச உங்களைப் பயிற்றுவித்துக்கொள்ளுங்கள். உங்கள் விசுவாசத்தைத் தொடர்ந்து பேசுங்கள்.

# 69

# பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்

**யாக்கோபு 4:7**

**ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்.**

நாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்து, பிசாசை எதிர்க்க வேண்டும். "எதிர்த்து நில்" என்ற வார்த்தைக்கு, "பிசாசு நமக்கு முன்வைப்பதை எதிர்த்து நிற்பது மற்றும் விரோதிப்பது" என்று அர்த்தமாகும். புதிய ஏற்பாட்டு வேதாகமத்தில் நாம் பார்க்கிறபடி, "எழுதப்பட்டிருக்கிறது ..." என்று சொல்லும் தேவனுடைய வார்த்தையைப் பேசுவதன் மூலமாகவும், தேவனுடைய வார்த்தையாகிய—ஆவியின் பட்டயத்தைப் பயன்படுத்துவதன் மூலமாகவும், இயேசு கிறிஸ்துவின் மூலமாக நமக்குக் கிடைத்த அதிகாரத்திலிருந்து கட்டளையிடும் வார்த்தைகளைப் பேசுவதன் மூலமாகவும் நாம் பிசாசை எதிர்த்து நிற்கிறோம். தேவனுடைய வார்த்தை முக்கியமானது என்று நினைக்கும் அதே வேளையில், பிசாசு என்ன செய்ய முயற்சிக்கிறானோ, அதற்கு நம்முடைய மறுப்பு மற்றும் ஆக்ரோஷமான எதிர்ப்பின் ஒரு பகுதியாக தேவனுடைய வார்த்தையைப் பேசுவது அதற்கு இணையாக முக்கியமானதாகும்.

சத்துரு உங்கள் மனதிற்குள் தவறான மற்றும் தீய எண்ணங்கள், யோசனைகள், கற்பனைகள், வாதங்கள் மற்றும் பகுத்தறிவுகளைப் புகுத்தும்போது, அது தொடர்பாக தேவனுடைய வார்த்தை என்ன சொல்கிறது என்பதை உடனடியாக உங்கள் மனதில் கொண்டுவருவது முக்கியம். மேலும் பிசாசினால் முன்வைக்கப்பட்ட அந்த தீய யோசனையைப் பற்றி தேவனுடைய வார்த்தை என்ன

சொல்கிறது என்பதைப் பேசுவதும் முக்கியமாகும். “இவ்வாறு எழுதப்பட்டுள்ளது ...” என்று நாங்கள் பேசுகிறோம்.

இதைச் செய்வதில் உறுதியாகவும் ஆக்ரோஷமாகவும் இருங்கள். உங்கள் விசுவாசத்தில் உறுதியாக இருந்து பிசாசை எதிர்த்து நில்லுங்கள் (1 பேதுரு 5:9). உங்கள் விசுவாசத்தைப் பேசுங்கள். அவன் எத்தனை முறை திரும்பி வந்தாலும், அத்தனை முறையும் உங்கள் விசுவாசத்தைப் பேசுங்கள். உங்கள் வாழ்க்கையில் நீங்கள் பிசாசுக்கு ஒரு அடி இடம் கூட கொடுக்க மாட்டீர்கள் என்று அவனுக்குத் தெரியப்படுத்துங்கள்.

# 70

# ஆசீர்வாத வார்த்தைகளை வெளியிடுங்கள்

**1 பேதுரு 3:8-12**
**8 மேலும், நீங்களெல்லாரும் ஒருமனப்பட்டவர்களும், இரக்கமுள்ளவர்களும்,**
**சகோதரசிநேகமுள்ளவர்களும், மனஉருக்கமுள்ளவர்களும்,**
**இணக்கமுள்ளவர்களுமாயிருந்து,**
**9 தீமைக்குத் தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிக்கட்டாமல், அதற்குப் பதிலாக, நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி அழைக்கப்பட்டவர்களென்று அறிந்து, ஆசீர்வதியுங்கள்.**
**10 ஜீவனை விரும்பி,**
**நல்ல நாட்களைக் காணவேண்டுமென்றிருக்கிறவன்**
**பொல்லாப்புக்குத் தன் நாவையும்,**
**கபடத்துக்குத் தன் உதடுகளையும் விலக்கிக்காத்து,**
**11 பொல்லாப்பைவிட்டு நீங்கி, நன்மைசெய்து, சமாதானத்தைத் தேடி, அதைப் பின்தொடரக்கடவன்.**
**12 கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது,**
**அவருடையசெவிகள்அவர்கள்வேண்டுதலுக்குக்கவனமாயிருக்கிறது;**
**தீமைசெய்கிறவர்களுக்கோகர்த்தருடையமுகம்விரோதமாயிருக்கிறது.**

நாம் சபிக்கப்பட்டாலும் அல்லது நமக்கு அநீதி இழைக்கப்பட்டாலும் கூட, ஆசீர்வாதத்தைத் திருப்பிச்செலுத்தும் வழிகளில் ஒன்று, ஆசீர்வாதத்தைப் பேசுவதாகும். *"உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்"* (மத்தேயு 5:44) என்று இயேசு நமக்குக் போதித்தார். ஆகவே, நமக்கு அநீதி இழைக்கப்பட்டாலும் நாம் அவர்களிடத்திலும் அவர்கள் வாழ்வைக் குறித்தும் ஆசீர்வதிக்கும் வார்த்தைகளை மனப்பூர்வமாகப் பேச வேண்டும். இது நாம் தெரிந்துகொள்ளும் ஒரு விருப்பத்

தேர்வாகும். உங்கள் நாவைக் கட்டுப்படுத்துவதைத் தெரிந்துகொள்ளுங்கள், கெட்ட வார்த்தைகளைப் பேச அனுமதிக்காதீர்கள். தவிர்த்துவிடுங்கள். அதற்குப் பதிலாக, ஆசீர்வாதமான வார்த்தைகளை வெளிப்படுத்துவதை மனப்பூர்வமாகத் தெரிந்துகொள்ளுங்கள். தேவனுக்கு முன்பாகச் சென்று, "பிதாவே, இயேசுவின் நாமத்தில் நான் இவர்களை ஆசீர்வதிக்கிறேன். அவர்கள் என்னைக் காயப்படுத்தியிருந்தாலும், நான் இயேசுவின் நாமத்தில் அவர்களின் வாழ்க்கையை ஆசீர்வதிக்கிறேன். அவர்களது வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் அவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவானதாக இருக்கட்டும். அவர்கள் கனி கொடுக்கட்டும், மற்றும் ஆசீர்வாதமாய் இருப்பார்களாக."

நீங்கள் தனிப்பட்ட முறையில் அவர்களை ஆசீர்வதித்த பிறகு, அவர்கள் உங்களிடம் எப்படி நடந்துகொண்டார்கள், அவர்கள் உங்களுக்கு எப்படி அநியாயம் செய்தார்கள் அல்லது உங்களை எப்படிக் காயப்படுத்தினார்கள் என்று மற்றவர்களிடம் சொல்லாதீர்கள் அல்லது கிசுகிசுக்காதீர்கள். தீமையைப் பேசாதபடிக்கு உங்கள் நாவைக் காத்துக்கொள்ளுங்கள். நீங்கள் ஆசீர்வாதத்தை வெளியிடும்போது, ஆசீர்வாதத்தை சுதந்தரிப்பதற்கு அல்லது பெறுவதற்கு உங்களை நிலைநிறுத்திக் கொண்டீர்கள். கர்த்தருடைய கண்கள் உங்கள்மேல் நோக்கமாய் இருக்கிறது. அவர் உங்களுக்கு ஜீவனையும் நல்ல நாட்களையும் வழங்குவதற்குக் கருத்தாய் செயல்படுவார். எப்போதும் ஆசீர்வாத வார்த்தைகளை வெளிப்படுத்துங்கள். விசுவாசத்துடன் ஆசீர்வாத வார்த்தைகளைப் பேசுங்கள்.

# 71

# வெற்றிக்கான உங்கள் விசுவாசத்தை வார்த்தைகள் வெளியிடுகிறது

**1 யோவான் 5:1,4**

**[1] இயேசுவானவரே கிறிஸ்து என்று விசுவாசிக்கிற எவனும் தேவனால் பிறந்திருக்கிறான்; பிறப்பித்தவரிடத்தில் அன்புகூருகிற எவனும் அவரால் பிறப்பிக்கப்பட்டவனிடத்திலும் அன்புகூருகிறான்.**
**[4] தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்.**

இயேசு கிறிஸ்துவிலுள்ள விசுவாசத்தின் மூலம், நாம் தேவனால் பிறந்திருக்கிறோம். நமக்குள் தேவனுடைய ஜீவனும், தன்மையும் இருக்கிறது. நாம் அவருடைய குமாரர்களும் குமாரத்திகளுமாய் இருக்கிறோம். மேலும் நாம் தேவனால் பிறந்தவர்கள் என்பதால், நாம் வெற்றிசிறந்தவர்களாய் இருக்கிறோம். உலகம், மாம்சம் மற்றும் பிசாசு ஆகியவற்றின் மீது வெற்றியுடன் வாழ்வதற்கு தேவையான சகல அதிகாரத்தினாலும் நாம் நிரப்பப்பட்டிருக்கிறோம். மேலும், தேவன் மீதுள்ள விசுவாசத்தை நாம் பயிற்சி செய்வதன் மூலம் நாம் ஜெயம் பெற்றிருக்கிறோம் என்று வேதாகமம் நமக்குத் தெளிவாக எடுத்துரைக்கிறது. நாம் வெற்றி சிறந்து, ஜெயமுள்ள வாழ்க்கை வாழ, விசுவாசத்தில் நடக்க வேண்டும். நாம் நம் சுய-விருப்பத்தின் பலத்தினாலோ அல்லது நமது புத்தியின் பலத்தினாலோ வெற்றியடைந்து ஜெயிப்பவர்களாக வாழவில்லை. உலகத்தின் மீது நாம் வெற்றி பெறுவதற்கான வழி விசுவாசமே என்று தேவன் கூறியிருக்கிறார்.

இந்த புத்தகத்தில் நாம் முன்னிலைப்படுத்தியதும் வேதாகமம் முழுவதும் நாம் காணும் விசுவாசத்தின் முக்கிய

கொள்கைகளில் ஒன்றும் என்னவென்றால், விசுவாசம் பேசுகிறது என்பதேயாகும். விசுவாசம் வார்த்தைகளால் வெளிப்படுத்தப்படுகிறது. நாம் விசுவாச வார்த்தைகளை பேச வேண்டும், தேவன் மீதும், அவருடைய வார்த்தையின் மீதும், இயேசு கிறிஸ்து நமக்காக நிறைவேற்றிய எல்லாவற்றின் மீதும் நாம் வைத்திருக்கிற விசுவாசத்தை வெளிப்படுத்தும் வார்த்தைகளைப் பேச வேண்டும். அவ்வாறு செய்வதுதான், உலகம், மாமிசம் மற்றும் பிசாசை நாம் ஜெயித்து, வெற்றியுடன் வாழ்வதற்கான வழிகளில் ஒன்றாகும்.

உங்கள் விசுவாசத்தைப் பேசுங்கள். வெற்றிசிறந்தும், ஜெயத்திலும் வாழ்வதற்கு இது ஒரு திறவுகோலாகும்.

# 72

# நாம் தேவனால் உண்டானவர்கள், ஆகவே நாம் தேவனிடத்திலிருந்து வந்தவர்களைப்போல பேசுகிறோம்

**1 யோவான் 4:4-6**

**4பிள்ளைகளே, நீங்கள் தேவனால் உண்டாயிருந்து, அவர்களை ஜெயித்தீர்கள்; ஏனெனில் உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்.**

**5அவர்கள் உலகத்துக்குரியவர்கள், ஆகையால் உலகத்துக்குரியவைகளைப் பேசுகிறார்கள், உலகமும் அவர்களுக்குச் செவிகொடுக்கும்.**

**6நாங்கள் தேவனால் உண்டானவர்கள்; தேவனை அறிந்தவன் எங்களுக்குச் செவிகொடுக்கிறான்; தேவனால் உண்டாயிராதவன் எங்களுக்குச் செவிகொடுக்கிறதில்லை; இதினாலே சத்திய ஆவி இன்னதென்றும், வஞ்சகஆவி இன்னதென்றும் அறிந்திருக்கிறோம்.**

அப்போஸ்தலனாகிய யோவான் இரண்டு வகையான மக்களை வேறுபடுத்திக் காட்டுகிறான். “உலகத்திற்குரியவர்கள்” மற்றும் “தேவனுக்குரியவர்கள்.” உலகத்தினால் உண்டானவர்கள் இதன் மூலம் அடையாளம் காணப்படுகிறார்கள் என்று அவன் கூறுகிறான்—“அவர்கள் உலகப் பிரகாரமாகப் பேசுகிறார்கள்.” அவர்கள் உலகப் பிரகாரமான மொழியைப் பேசுகிறார்கள், உலகக் காரியங்களைப் பேசுகிறார்கள், உலகப் பிரகாரமான உணர்வை வெளிப்படுத்துகிறார்கள். எனவே, உலகம் அவர்கள் மீது கவனம் செலுத்துகிறது. எனினும், “தேவனால் உண்டானவர்களாகிய” நாம், “தேவனுக்கு ஏற்றவைகளை” பேசுகிறோம், மேலும் தேவனை அறிந்தவர்கள், நாம் பேசுவதைக் கேட்டு, புரிந்துகொண்டு, அதற்குக் கவனம் செலுத்துகிறார்கள்.

நாம் “தேவனால் உண்டானவர்கள்”, ஆகவே “தேவனுக்கு ஏற்றவைகளை” பேசுகிறோம். நாம் வேறு மொழி பேசுகிறோம். நாம் தேவனுடைய வார்த்தையின் மொழியைப் பேசுகிறோம். தேவனுடைய வார்த்தையின் சத்தியத்திற்கு ஏற்ப நாம் பேசுகிறோம்.

நீங்கள் “தேவனால் உண்டானவர்கள்” என்பதை நினைவில்கொள்ளுங்கள். “உலகத்திற்குரிய” நபர்கள் உங்களைச் சுற்றி இருக்கும்போது, “உலகத்திற்குரியவர்களைப் போல” பேசுவதற்கும் அவர்களுடன் இணங்குவதற்கும் நீங்கள் அழுத்தத்தை உணருவீர்கள். ஆனால் இந்த உலகத்தின் அழுத்தங்களுக்கு நீங்கள் அடிபணிய வேண்டியதில்லை. நீங்கள் தேவனால் உண்டானவர்கள். நீங்கள் வெற்றிசிறந்தவர். நீங்கள் பிழையின் ஆவியையும், இந்த யுகத்தின் ஆவியையும், கிறிஸ்துவுக்கு எதிரான ஆவியையும் ஜெயித்தீர்கள். உலகத்தில் இருப்பவனை விட உங்களில் இருப்பவர் பெரியவர். உலகத்தின் மொழியையோ அல்லது “உலகத்திற்குரியதாக” பேசப்படும் வார்த்தைகளையோ பேசும்படி நீங்கள் ஒத்துப்போக வேண்டிய அவசியமில்லை. நீங்கள் உங்கள் வார்த்தைகளைத் தேர்வு செய்யுங்கள். நீங்கள் “தேவனுக்குரியவர்களைப் போல” பேசுங்கள். நீங்கள் தேவனுடைய வார்த்தைக்கு ஏற்றவைகளைப் பேசுங்கள். உங்கள் விசுவாசத்தைப் பேசுங்கள்.

# 73

# ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் நம்முடைய சாட்சியின் வார்த்தையினாலும் நாம் ஜெயிக்கிறோம்

**வெளிப்படுத்துதல் 12:11**
**மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்.**

சாத்தான் நமது எதிரியாய் இருக்கிறான். சாத்தானும் அவனுடைய பிசாசுகளும் தோற்கடிக்கப்பட்டு வல்லமையற்றவர்களாக ஆக்கப்பட்டுள்ளனர். பலவீனமான நிலையில், பொய்கள், ஏமாற்றுதல்கள், குற்றச்சாட்டுகள் மற்றும் மிரட்டல்களைப் பயன்படுத்தி மனதைத் தாக்கும் திறனை உபயோகப்படுத்துவது மட்டுமே அவைகளின் வசம் எஞ்சியிருக்கிறது. அதனால்தான் சாத்தான் சகோதரர்கள் மீது குற்றஞ்சாட்டுபவன் என்று அழைக்கப்படுகிறான், தேவனுக்கு முன்பாக நாம் குற்றவாளியாகும்படிக்கு நம் மனதில் குற்றம் சாட்டுகிறான், அவனுடைய குற்றச்சாட்டுகள் நம் மனதில் தொடர்ந்து பாரத்தை அதிகரிக்கச் செய்கின்றன. தேவனுக்கு முன்பாக நம்மை மதிப்பற்றவர்களாகவும், ஆக்கினைக்குத் தீர்க்கப்பட்டவர்களாகவும், நேசிக்கப்படாதவர்களாகவும் உணர வைக்க அவன் முயற்சிக்கிறான்.

வெளிப்படுத்தல் 12 இல், விசுவாசிகளாகிய நாம் இந்த சத்துருவையும் அவனது குற்றச்சாட்டுகளையும் எவ்வாறு மேற்கொள்ள வேண்டும் என்பதற்கான வல்லமைவாய்ந்த திறவுகோலை யோவான் வெளிப்படுத்துகிறான்.

ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும், நம் சாட்சியின் வார்த்தையினாலும் சாத்தானை ஜெயிக்கிறோம். இயேசுவின் இரத்தம் நமக்காகச் செய்ததை நாம் விசுவாசிக்கிறோம், நாம் பேசுகிறோம், நமது சாட்சியை அறிவிக்கிறோம், அதாவது இயேசுவின் இரத்தம் தனிப்பட்ட முறையில் நமக்காக என்ன செய்தது என்பதை நாம் அறிவிக்கிறோம். நாம் அறிவிக்க வேண்டும், இயேசுவின் இரத்தம் நமக்காக என்ன செய்திருக்கிறது என்பதற்கு நம்முடைய சாட்சியின் வார்த்தைகளை நாம் பேச வேண்டும். இயேசு கிறிஸ்து தம்முடைய சிலுவை மரணத்தின் மூலம் நமக்காக நிறைவேற்றியதையும், அவரால் செய்து முடிக்கப்பட்ட செயலையும் நாம் நம்புகிறோம் என்பதை நம் வாயால் அறிவிக்க வேண்டும். ஆட்டுக்குட்டியானவரின் இரத்தம் நமக்காக என்ன செய்தது என்ற நமது அறிவிப்பு சத்துருவை நசுக்குகிறது. சிலுவையின் மூலம் கிறிஸ்து உங்களுக்காக செய்து நிறைவேற்றியதை நீங்கள் விசுவாசிக்கிறீர்கள் என்பதை பிரகடனம் செய்யுங்கள். உங்கள் விசுவாசத்தைப் பேசுங்கள்.

# உன்னை நேசிக்கும் தேவன் யார் என்று உனக்குத் தெரியுமா?

சுமார் 2000 வருஷங்களுக்கு முன்பு, தேவன் மனுஷனாக இந்த உலகத்திற்கு வந்தார். அவருடைய நாமம் இயேசு என்பதாகும். அவர் முற்றிலும் பாவமில்லாத வாழ்க்கையை வாழ்ந்தார். இயேசு மாம்சத்தில் வந்த தேவனாக இருந்ததால், அவர் சொன்னவைகள் மற்றும் செய்தவைகள் அனைத்துமே தேவனை நமக்கு வெளிப்படுத்தின. அவர் பேசின வார்த்தைகள் யாவும் தேவனுடைய வார்த்தைகளாக இருந்தன. அவர் செய்த காரியங்கள் யாவும் தேவனுடைய செயல்களாக இருந்தன. இயேசு இந்தப் பூமியில் அநேக அற்புதங்களைச் செய்தார். அவர் வியாதியஸ்தர்களையும் வேதனையில் இருந்தவர்களையும் குணப்படுத்தினார். அவர் குருடர்களின் கண்களைத் திறந்தார், செவிடனின் செவிகளைத் திறந்தார், முடவர்களை நடக்கச் செய்தார், மற்றும் சகலவிதமான நோய்களையும் வியாதிகளையும் சுகமாக்கினார். அவர் ஒரு சில அப்பத் துண்டுகளை அற்புதமாகப் பெருகச் செய்ததன் மூலமாக பசியோடிருந்தவர்களை போஷித்தார், கடும்புயலை அடக்கினார், மற்றும் இன்னும் அநேக அற்புதங்களையும் கூட செய்தார்.

**ஜனங்கள் நலமாகவும், சுகமாகவும், ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்க வேண்டும் என்று அவர் விரும்புவதால், அவர் ஒரு நல்ல தேவன் என்பதை இந்தச் செயல்கள் அனைத்தும் நமக்கு வெளிப்படுத்துகின்றன. தேவன் ஜனங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய விரும்புகிறார்.**

அப்படியானால் தேவன் ஏன் மனுஷனாக மாறி நமது உலகத்திற்குள் வரும்படி தீர்மானிக்க வேண்டும்? இயேசு ஏன் வந்தார்?

நாம் எல்லோருமே பாவம் செய்து, நம்மை சிருஷ்டித்த தேவனுக்கு முன்பாக ஏற்றுக்கொள்ளத் தகாத செயல்களைச் செய்துவிட்டோம். பாவத்திற்கான விளைவுகள் நிச்சயம் உண்டு. பாவமானது தேவனுக்கும் நமக்கும் இடையே தாண்டிச் செல்ல முடியாத ஒரு மிகப் பெரிய சுவரைப் போன்றதாக இருக்கிறது. பாவம் நம்மை தேவனிடமிருந்து பிரிக்கிறது. நம்மை சிருஷ்டித்தவரை அறிந்துகொள்வதிலிருந்தும், ஒரு அர்த்தமுள்ள உறவை அவருடன் ஏற்படுத்திக்கொள்வதிலிருந்தும் அது நம்மைத் தடுக்கிறது. எனவே, நம்மில் பலர் இந்தக் காலியிடத்தை மற்ற

விஷயங்களால் நிரப்ப முயற்சிக்கிறோம்.

நம்முடைய பாவங்களின் மற்றொரு விளைவு, தேவனிடமிருந்து விலகிச் செல்லும் நித்திய பிரிவினையாகும். தேவனுடைய நியாயஸ்தலத்தில், பாவத்திற்கான தண்டனை மரணமாகும். மரணம் என்பது தேவனிடமிருந்து பிரிந்து நரகத்தில் வாழும் நித்திய பிரிவினையாகும்.

ஆனால் நற்செய்தி என்னவென்றால், நம்மால் பாவத்திலிருந்து விடுபட்டு தேவனிடத்திற்குத் திரும்பிவர முடியும் என்பதேயாகும். வேதாகமம் கூறுகிறது, ***"பாவத்தின் சம்பளம் (கூலி) மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்"*** (ரோமர் 6:23). இயேசு சிலுவையில் மரித்தபோது, முழு உலகத்தின் பாவங்களுக்கான விலைக்கிரயத்தையும் செலுத்தினார். மூன்று நாட்களுக்குப் பிறகு, அவர் மறுபடியும் உயிரோடு எழும்பி, பலருக்குத் தம்மை உயிரோடு இருக்கிறவராகக் காட்டினார், பின்பு, மறுபடியும் பரலோகத்திற்குத் திரும்பிச் சென்றார்.

தேவன் அன்பும் இரக்கமும் கொண்ட தேவனாக இருக்கிறார். ஒரு நபர் கூட நரகத்தில் அழிந்துபோவதை அவர் விரும்புவதில்லை. ஆகவேதான், பாவத்திலிருந்தும் அதன் நிரந்தர விளைவுகளிலிருந்தும் விடுபடுவதற்கான ஒரு வழியை முழு மனித இனத்திற்கும் அருளுவதற்காக அவர் இறங்கி வந்தார். அவர் பாவிகளை இரட்சிக்க வந்தார் - உங்களைப் போன்றவர்களையும் என்னைப் போன்றவர்களையும் பாவத்திலிருந்தும் நித்திய மரணத்திலிருந்தும் மீட்கவே வந்தார்.

இலவசமாகக் கிடைக்கும் இந்த பாவ மன்னிப்பைப் பெற்றுக்கொள்ள, நாம் ஒரே ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும் என்று வேதாகமம் நமக்குச் சொல்கிறது - அது என்னவென்றால், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் செய்து முடித்ததை ஏற்றுக்கொண்டு, அவரை முழு இருதயத்தோடு விசுவாசிக்க வேண்டும் என்பதேயாகும்.

***"... அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவான்"*** **(அப்போஸ்தலர் 10:43).**

***"கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்"*** **(ரோமர் 10:9).**

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தால், நீங்களும் கூட பாவமன்னிப்பைப் பெற்று சுத்திகரிக்கப்படலாம்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும், அவர் உங்களுக்காக சிலுவையில் என்ன செய்திருக்கிறார் என்பதையும் விசுவாசிப்பதற்கு உங்களுக்கு உதவும் ஒரு எளிய ஜெபம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இயேசு உங்களுக்காகச் செய்ததை நீங்கள் ஏற்றுக்கொண்டீர்கள் என்பதை வெளிப்படுத்தவும், உங்கள் பாவங்களுக்கான பாவமன்னிப்பைப் பெற்றுக்கொண்டு சுத்திகரிக்கப்படவும் இந்த ஜெபம் உங்களுக்கு உதவும். இந்த ஜெபம் உங்களுக்கான ஒரு வழிகாட்டி மட்டுமே. நீங்கள் உங்கள் சொந்த வார்த்தைகளைப் பயன்படுத்தியும் கூட ஜெபிக்கலாம்.

*அன்புள்ள கர்த்தராகிய இயேசுவே, சிலுவையில் நீர் எனக்காக என்ன செய்திருக்கிறீர் என்பதை இன்று நான் புரிந்துகொண்டேன். நீர் எனக்காக மரித்தீர், உம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தை சிந்தினீர், நான் மன்னிக்கப்படும்படி என் பாவங்களுக்கான தண்டனையை நீர் ஏற்றுக்கொண்டீர். உம்மை விசுவாசிக்கிறவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்கிறார்கள் என்று வேதாகமம் சொல்கிறது.*

*இன்று, நான் உம்மை விசுவாசிக்கவும், எனக்காக சிலுவையில் மரித்து, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததன் மூலம் நீர் எனக்காகச் செய்ததை ஏற்றுக்கொள்ளவும் நான் தீர்மானிக்கிறேன். எனது சொந்த நற்கிரியைகளால் நான் என்னை இரட்சித்துக்கொள்ள முடியாது என்பதை அறிவேன், வேறு எந்த மனுஷனும் என்னை இரட்சிக்க முடியாது என்பதும் எனக்குத் தெரியும். என் பாவங்களுக்கான மன்னிப்பை என்னால் சம்பாதிக்க முடியாது.*

*இன்று, நீர் எனக்காக மரித்தீர், என் பாவங்களுக்கான விலைக்கிரயத்தை செலுத்தினீர், மரித்தோரிலிருந்து மறுபடியும் உயிர்த்தெழுந்தீர் என்றும், உம் மீது வைத்திருக்கிற விசுவாசத்தால், என் பாவங்களுக்கான மன்னிப்பையும் சுத்திகரிப்பையும் நான் பெற்றுக்கொள்கிறேன் என்றும் நான் என் உள்ளத்தில் விசுவாசித்து என் வாயினால் அறிக்கையிடுகிறேன்.*

*இயேசுவே உமக்கு நன்றி. உம்மை நேசிக்கவும், உம்மை அதிகமாக அறிந்துகொள்ளவும், உமக்கு உண்மையாக இருக்கவும் எனக்கு உதவி செய்வீராக.*

*ஆமென்.*

# ஆல் பீப்பிள்ஸ் சர்ச் பற்றி அறிவோம்

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சானது பெங்களூர் நகரத்துக்கு உப்பாகவும் வெளிச்சமாகவும் இருக்க வேண்டும் என்பதும், இந்த தேசத்துக்கும் இன்னும் நிறைய தேசங்களுக்கும் தேவ சத்தமாக இருக்க வேண்டும் என்பதும்தான் எங்களது தரிசனம்.

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சானது **இயேசுவை நேசிக்கும், வார்த்தையில் கவனம் செலுத்தும், ஆவியால் நிரப்பப்பட்டிருக்கும் ஒரு திருச்சபையும்,** ஒரு குடும்ப திருச்சபையும், மேம்படுத்தும் மையமும், ஊழியத்தை அடிப்படையாகக் கொண்டதும் மற்றும் உலகளாவிய ஊழியத்தை செய்யும் ஒரு திருச்சபையுமாகும்.

- ஒரு **குடும்பத் திருச்சபையாக,** கிறிஸ்துவை மையமாகக் கொண்ட ஐக்கியத்தில் ஒரு சமூகமாக ஒன்றாக வளர்கிறோம், தேவனுடைய சபையாக ஒருவருக்கொருவர் அன்பாக இருந்து அக்கறையோடு ஊழியம் செய்கிறோம்.
- **மேம்படுத்தும் ஒரு மையமாக,** ஒவ்வொரு விசுவாசியும் வெற்றியுடன் வாழவும், கிறிஸ்துவின் சாயலில் முதிர்ச்சியடையவும், அவர்களின் வாழ்க்கைக்கான தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்றவும் நாங்கள் ஊக்கமளித்து, அவர்களை மேம்படுத்துகிறோம்.
- **ஊழியத்தை அடிப்படையாகக் கொண்டவர்களாக,** தேவனுடைய வார்த்தையினாலும் பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையுள்ள செயல்களினாலும், இயேசு கிறிஸ்துவின் முழு சுவிசேஷத்தினால் நமது நகரம், தேசம் மற்றும் பிற தேசங்களை ஆசீர்வதிக்க அர்த்தமுள்ள ஊழியத்தில் ஈடுபடுகிறோம்.
- **ஒரு உலகளாவிய ஊழியமாக,** தேவனுடைய ராஜ்யத்திற்காகத் தங்கள் பிராந்தியங்களில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தெய்வீகத் தலைவர்கள் மற்றும் ஆவியானவரால் வழிநடத்தப்படும் திருச்சபைகளை வளர்ப்பதன் மூலம் உள்நாட்டிலும் உலக அளவிலும் நாங்கள் ஊழியம் செய்கிறோம்.

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சில், பரிசுத்த ஆவியின் அபிஷேகம் மற்றும் நடத்துதலில் தேவனுடைய வார்த்தையை முழுமையாகவும், சமரசம் செய்யாமலும் முன்வைக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். நல்ல இசை, ஆக்கப்பூர்வமான விளக்கக்காட்சிகள், தேர்ந்த வேத தர்க்கவியலாலர்கள், இன்றைய காலத்து ஏற்ற ஊழிய முறைகள், நவீன தொழில்நுட்பம் போன்றவைகள், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையில் தேவனுடைய வார்த்தையை பிரசங்கிக்கும் முறைக்கும் பரிசுத்த ஆவியானவரின் அடையாளங்கள், அதிசயங்கள், அற்புதங்கள் மற்றும் வரங்களுக்கும் ஒருபோதும் ஈடாகாது என்று நாங்கள்

நம்புகிறோம் (1 கொரிந்தியர் 2:4,5; எபிரேயர் 2:3,4). எங்கள் கருப்பொருள் இயேசு, எங்கள் உள்ளடக்கம் வார்த்தை, எங்கள் முறை பரிசுத்த ஆவியானவரின் வல்லமை, எங்கள் தாகம் மக்கள் மற்றும் எங்கள் குறிக்கோள் கிறிஸ்துவைப் போல முதிர்ச்சியடைதலாகும்.

பெங்களூரை மையமாகக் கொண்டு செயல்படும் எங்களது ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சானது, இந்தியாவில் பல இடங்களில் திருச்சபையைக் கொண்டுள்ளது. ஆல் பீப்பிள்ஸ் சர்ச் இருப்பிடங்களின் தற்போதைய பட்டியலையும் தொடர்புக்கான தகவலையும் பெற, **apcwo.org/locations** ல் உள்ள எங்கள் வலைத்தளத்தைப் பார்வையிடவும் அல்லது **contact@apcwo.org** க்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

# இலவச வெளியீடுகள்

A Church in Revival
A Real Place Called Heaven
A Time for Every Purpose
Ancient Landmarks
Baptism in the Holy Spirit
Being Spiritually Minded and Earthly Wise
Biblical Attitude Towards Work
Breaking Personal and Generational Bondages
Change
Code of Honor
Divine Favor
Divine Order in the Citywide Church
Don't Compromise Your Calling
Don't Lose Hope
Equipping the Saints
Foundations (Track 1)
Fulfilling God's Purpose for Your Life
Gifts of the Holy Spirit
Giving Birth to the Purposes of God
God Is a Good God
God's Word–The Miracle Seed
How to Help Your Pastor
Integrity
Kingdom Builders
Laying the Axe to the Root
Living Life Without Strife
Marriage and Family
Ministering Healing and Deliverance
Offenses–Don't Take Them
Open Heavens
Our Redemption
Receiving God's Guidance
Revivals, Visitations and Moves of God
Shhh! No Gossip!
Speak Your Faith
The Conquest of the Mind
The Father's Love
The House of God
The Kingdom of God
The Mighty Name of Jesus
The Night Seasons of Life
The Power of Commitment
The Presence of God
The Redemptive Heart of God
The Refiner's Fire
The Spirit of Wisdom, Revelation and Power
The Wonderful Benefits of Praying in Tongues
Timeless Principles for the Workplace
Understanding the Prophetic
Water Baptism
We Are Different
Who We Are in Christ
Women in the Workplace
Work–Its Original Design

புதியபுத்தகங்கள்தொடர்ந்துவெளியிடப்படுகின்றன.PDF,ஆடியோ மற்றும் பிற வடிவங்களில் இலவசமாக ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சின் கிறிஸ்தவ புத்தகங்களைப் பதிவிறக்கம் செய்ய **apcwo.org/books** என்ற வலைதளத்தைப் பார்வையிடவும். இவற்றில் பல புத்தகங்கள் பிற மொழிகளிலும் கிடைக்கின்றன. இலவச ஆடியோ மற்றும் வீடியோ பிரசங்கங்கள், பிரசங்க குறிப்புகள் மற்றும் பல இலவச ஆதாரங்களுக்கு **apcwo.org/sermons** என்ற வலைதளத்தைப் பார்வையிடவும்.

# கிறிசாலிஸ் ஆலோசனை மையம்

வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்ளவும், அவற்றைக் கடக்கவும் மக்களுக்கு உதவ, கிறிசாலிஸ் ஆலோசனை மையமானது தனிப்பட்ட ஆலோசனைகளை வழங்குகிறது. கிறிசாலிஸ் கவுன்சிலிங் என்பது தொழில்ரீதியாக பயிற்சி பெற்ற மற்றும் அனுபவம் வாய்ந்த கிறிஸ்தவ ஆலோசகர்களின் குழுவாகும்.

எங்கள் சேவைகள் எல்லா வயதினருக்குமானவை மற்றும் இது வாழ்க்கையின் பல்வேறு சவால்களைத் தீர்த்துவைக்கின்றன.

- **இளம் பிராய நடத்தை**
- **பிறரோடு இணைக்கக் குறைபாடு**
- **உறவுமுறை சவால்கள்**
- **கல்வியில் பின்தங்கிய நிலை**
- **தொழில் தொடர்பான பிரச்சினைகள்**
- **குடும்பம் / தம்பதிகள்: திருமணத்திற்கு முன், திருமணத்திற்குப் பின்**
- **பெற்றோர் / குழந்தைகள் / உடன்பிறந்தவர்கள் / சக வயதினர்**
- **நடத்தையில் சீர்கேடு**
- **ஆளுமை குறைபாடு**
- **உளவியல் / உணர்வு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள்**
- **மன அழுத்தம் / திடீர் அதிர்ச்சி**
- **மது / போதைப்பொருளுக்கு அடிமை**
- **ஆவிக்குரிய போராட்டங்கள்**
- **வாழ்வியல் முன்னேற்ற ஆலோசனை**

கிரிசாலிஸ் ஆலோசனை சேவைகளுக்கான கட்டணங்கள் குறைவானதாகவும் சுலபமாக செலுத்தக்கூடியதாகவும் இருக்கிறது.

எங்களிடம் உள்ள கைதேர்ந்த ஆலோசகர்களில் ஒருவருடன் சந்திப்பைத் திட்டமிட கீழ்க்கண்ட வழிமுறைகளில் அணுகவும்:

**வலைதளம்: chrysalislife.org**
**தொலைபேசி:** +91-80-25452617 அல்லது கட்டணமில்லா அழைப்பு (இந்தியாவிற்குள்) 1-800-300-00998
**மின்னஞ்சல்: counselor@chrysalislife.org**

கிறிசாலிஸ் ஆலோசனை என்பது ஆல் பீப்பிள்ஸ் சர்ச் & வேர்ல்டு அவுட்ரீச் செய்யும் ஊழியமாகும்.

# ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சில் பங்குதாரராக இருத்தல்

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சின் ஊழியர்கள், ஒரு உள்ளூர் திருச்சபையாக தன் சொந்த எல்லைகளுக்கு அப்பால், இந்தியா முழுவதும், குறிப்பாக வட இந்தியா முழுவதும் ஊழியம் செய்வது மட்டுமல்லாமல், (அ) தலைவர்களைப் பெலப்படுத்துதல், (ஆ) இளைஞர்களை ஊழியத்திற்கு ஆயத்தப்படுத்துதல் மற்றும் (இ) கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டியெழுப்புதல் ஆகியவற்றில் சிறப்பு கவனம் செலுத்துகின்றனர். இளைஞர்களுக்கான பல பயிற்சிக்கூடங்கள் மற்றும் 'கிறிஸ்தவ தலைவர்களுக்கான கருத்தரங்குகள்' ஆண்டு முழுவதும் நடத்தப்படுகின்றன. மேலும், வார்த்தையிலும் ஆவியிலும் விசுவாசிகளை ஆயத்தப்படுத்தும் நோக்கத்துடன் ஆங்கிலத்திலும் பிற இந்திய மொழிகளிலும் புத்தக வெளியீடுகளின் பல ஆயிரக்கணக்கான பிரதிகள் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன.

ஒரு முறை தரும் நிதியாகவோ அல்லது மாதாந்திர நிதியாகவோ அனுப்புவதன் மூலம் எங்களுடன் நிதி ரீதியாக பங்குதாரராக இருக்க உங்களை அழைக்கிறோம். நமது நாடு முழுவதும் செய்யப்படும் இந்த ஊழியத்திற்காக எங்களுக்கு உதவ நீங்கள் அனுப்பும் எந்தத் தொகையும் பெரிதும் பாராட்டப்படும்.

நீங்கள் அனுப்ப வேண்டிய பரிசுத் தொகையை "ஆல் பீப்பிள்ஸ் சர்ச்"க்கு காசோலை / வங்கி வரையோலை மூலம் எங்கள் அலுவலக முகவரிக்கு அனுப்பலாம். இல்லையெனில், எங்களின் வங்கிக் கணக்கு விவரங்களைப் பயன்படுத்தி வங்கிப் பரிவர்த்தனை மூலம் உங்கள் பங்களிப்பை நேரடியாக அனுப்பலாம்.

**வங்கிக் கணக்கின் பெயர்:** All Peoples Church
**வங்கிக் கணக்கு எண்:** 50200068829058
**IFSC குறியீடு:** HDFC0004367
**வங்கியின் பெயர்:** HDFC வங்கி, 7M/308 80 Ft Rd, HRBR லேஅவுட், கல்யாண் நகர், பெங்களூரு, கர்நாடகா 560043

***கவனத்தில் கொள்ளவும்:*** *ஆல் பீப்பிள்ஸ் சர்ச் இந்தியா சார்ந்த வங்கிக் கணக்கிலிருந்து மட்டுமே வங்கி பங்களிப்புகளை ஏற்கிறது. உங்கள் பங்களிப்பைச் செய்யும்போது, விரும்பினால், உங்கள் பங்களிப்பைப் பயன்படுத்த விரும்பும் குறிப்பிட்ட ஆல் பீப்பிள்ஸ் சர்ச் ஊழியப் பகுதியைக் குறிப்பிடலாம். கூடுதல் விவரங்களுக்கு,* ***apcwo.org/give*** *என்ற வலைதளத்தைப் பார்வையிடவும்.*

மேலும், உங்களால் முடிந்த போதெல்லாம் எங்களுக்காகவும் எங்கள் ஊழியத்திற்காகவும் ஜெபிக்க மறவாதீர்கள்.


**நன்றி, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!**

DOWNLOAD THE FREE APP!

*Search for*
"All Peoples Church Bangalore"
in the App or Google play stores.

Available on the App Store

ANDROID APP ON Google play




*A daily 5-minute video devotional.*
*A daily Bible reading and prayer guide.*
*5-minute Sermon summary.*
*Toolkit with Scriptures on various topics to build faith and information to share the Gospel.*
*Resources with sermons, sermon notes, TV programs, books, music and more.*

*IF YOU LOVE IT, TELL OTHERS ABOUT IT!*

# ஆல் பீப்பிள்ஸ் சர்ச் வேதாகமக் கல்லூரி

**apcbiblecollege.org**

இந்தியாவின் பெங்களூரில் உள்ள ஆல் பீப்பிள்ஸ் சர்ச் வேதாகமக் கல்லூரி மற்றும் ஊழியப் பயிற்சி மையமானது, உபதேச ரீதியாக சிறந்த மற்றும் அறிவார்ந்த ஊக்கமளிக்கும் தேவனுடைய வார்த்தையின் படிப்போடு கூட, ஆவியானவரால் நிரப்பப்பட்டு, அபிஷேகம் செய்யப்பட்டு, பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையில் ஊழியம் செய்வதற்கு ஆயத்தப்படுத்தவல்ல பயிற்சியை வழங்குகிறது. தேவனுடைய வார்த்தையில் ஆழமாக வேரூன்றியிருக்கும் தேவனுக்கேற்ற குணநலன்களோடு, அடையாளங்கள், அதிசயங்கள் மற்றும் அற்புதங்களால் வல்லமையான செயல்களை ஊழியத்தில் நடத்திக்காட்டும் ஒரு பூரண மனுஷனை எங்களால் உருவாக்க இயலும் என்று நாங்கள் நம்புகிறோம்.

ஆல் பீப்பிள்ஸ் சர்ச் வேதாகமக் கல்லூரியில் (APC-BC), ஆரோக்கியமான போதனையோடு, தேவனுடைய அன்பை வெளிக்காட்டுவதையும், அபிஷேகம் மற்றும் பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னத்தையும் மற்றும் தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட கிரியையையும் வலியுறுத்துகிறோம். பல இளைஞர்களும் வாலிப வயதின் பெண்களும் தங்கள் வாழ்க்கையின் மீதான தேவனுடைய அழைப்பை நிறைவேற்றுவதற்காக பயிற்சியளிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளனர்.

நாங்கள் மூன்று பாட திட்டங்களை வழங்குகிறோம்.

- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம் - ஒரு வருட படிப்பு சான்றிதழ் (C.Th.)
- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம் - இரண்டு வருட டிப்ளமோ படிப்பு (Dip.Th.)
- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம் - மூன்று வருட இளங்கலை படிப்பு (B.Th.)

ஒவ்வொரு வார நாட்களிலும், திங்கள் முதல் வெள்ளி வரை, இந்திய நேரப்படி காலை 9:00 முதல் நண்பகல் 12 மணி வரை (UTC+5:30) வகுப்புகள் நடைபெறும். நாங்கள் மூன்று வழியில் கற்பதற்கான விருப்பத் தேர்வுகளை வழங்குகிறோம்.

- **வளாகத்தில் கற்றல்:** வளாகத்தில் நேரடியாக வகுப்புகளில் கலந்து கொள்ளுதல்
- **இணைய வழியில் கற்றல்:** ஆன்லைனில் நேரடி விரிவுரைகளில் கலந்து கொள்ளுதல்
- **மின்னஞ்சல் வழியாக கற்றல்: apcbiblecollege.org/elearn** ஆன்லைன் செயலி மூலம் தானாகக் கற்றுக்கொள்ளுதல்

**இணைய வழியில் விண்ணப்பிக்கவும்,** மற்றும் கல்லூரி, பாடத்திட்டம், படிப்புக்கான தகுதி, கல்விச் செலவுகள் பற்றிய கூடுதல் தகவலுக்கும் மற்றும் விண்ணப்பப் படிவத்தைப் பதிவிறக்கம் செய்யவும், தயவுசெய்து **apcbiblecollege.org** என்ற இணையதளத்திற்குச் செல்லவும்.

வேதவாக்கியம் முழுவதிலும், தேவன் தம்முடைய வார்த்தையைப் பேசும்படி தம் மக்களுக்கு அறிவுறுத்துகிறார். நம் இருதயங்களில் விசுவாசத்துடன் நம் வாயிலிருந்து வார்த்தைகளாகப் பேசப்படும் அவருடைய வார்த்தையானது, அவருடைய படைப்பு, அற்புதம் செய்யும் வல்லமையை நமது இயற்கை மண்டலத்தில் கட்டவிழ்க்கிறது. நம் வாயிலிருந்து வெளிப்படும் வார்த்தைகளாகப் பேசப்படும் அவருடைய வார்த்தையே எதிரிக்கு எதிரான ஆயுதமாகிறது.

நம்முடைய நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தின் மீது தேவனுடைய வார்த்தையைப் பேசுவதன் மூலம் நம் உலகத்தை வடிவமைக்க முடியும். எல்லா நேரங்களிலும் எல்லா சூழ்நிலைகளிலும் விசுவாசம்-நிறைந்த வார்த்தைகளைப் பேச நாம் கற்றுக்கொள்ள வேண்டும். விசுவாசத்துடன் பேசுவது என்பது மலை இருப்பதையோ அல்லது நிலவும் புயலின் உக்கிரத்தையோ மறுப்பதல்ல. மாறாக, வழியில் தொடர்ந்து நிற்கும் மலைகளிடம் அதன் உரிமையை மறுத்து விசுவாசம் பேசுகிறது. விசுவாசம் காற்று மற்றும் புயல்களிடம் பேசி, அழிவை ஏற்படுத்துவதற்கான அவைகளின் உரிமையை பறிக்கிறது, அதற்கு பதிலாக, தேவன் கட்டவிழ்க்கும் சமாதானம் மற்றும் அமைதிக்கு வழிவகுக்கின்றது. விசுவாசம் நோயிடம் பேசி, அதை விட்டு வெளியேறவும், தேவனிடமிருந்து வரும் குணப்படுத்துதலுக்கும் முழுமைக்கும் வழிவகுக்குமாறு கட்டளையிடுகிறது.

இப்புத்தகம், இந்த வேதாகம சத்தியத்தில் உங்களை நிலைநிறுத்தி, உங்கள் விசுவாசத்தை எல்லா நேரங்களிலும் பேச உங்களைத் தூண்டும்!

**All Peoples Church & World Outreach**
# 319, 2nd Floor, 7th Main, HRBR Layout,
2nd Block, Kalyan Nagar, Bangalore 560 043
Karnataka, INDIA

Phone: +91-80-25452617
Email: contact@apcwo.org
Website: apcwo.org